579

Approved by the Text-Book Committee, Madras.

SENTAMIL READER

FOR FORM II.

OFFICE OF THE REGIST... No. 1 AUG 1930 MA...
579

BY

N. R. SUBRAMANIA SARMA,

Head Tamil Pandit.

A. M. High & Training Schools, Pasumalai and

Author of several Prose & Poetical works.

MADURA:

...LAKRISHNA KONE.

...1930. [Price As. 8.

TS
031,6 T
N30.
125874

செந்தமிழ் வாசகப் புத்தகம்.

ஏழாம் வகுப்புக்கு உரியது.

OFFICE OF THE REGISTRAR
No.
1 AUG 1930
1345
494.81186

மதுரை-பசுமலை
அமெரிக்கன் மிஷன் உயர்தர, போதனுமுறைக் கலாசாலைகளின்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
எழுதியது.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றது.

மதுரை புஸ்தக வியாபாரம்,
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்
வெளியிட்டது.

[பதிவு செய்தது] 1930. [விலை அணு 8.

FOURTH EDITION.

MEENAKSHI VILAS PRESS,

MADURA.

125874

579
1345
494. 81186
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 AUG 1930
MADRAS

முகவுரை.

இவ்வாசக புத்தகம் மத்தியதர வகுப்பு மாணவர்க்காக யான் எழுதியவற்றுள் ஆறும் (இரண்டாம்பாரம்) வகுப்பிற் குரியது. இது தற்கால கல்வி முறைக்கேற்றவாறு புதிய தோர் முறையில் எழுதப்பெற்றுளது. இதில் இதிகாசம், சுகாதாரம், அரசியல், பிராணிசாத்திரம், நீதிக்கதைகள், தாவரநூல், விவசாய நூல், கட்டுக்கதை சம்பந்தமான பாடங்களே அமைந்துள்ளன. இவைகளே நம் நாட்டு மாணவர்க்கு ஏற்றனவும், இன்றியமையாதனவுமாக உள்ளன.

ஒவ்வொரு பாடமும் மாணவர் மனக் கிளர்ச்சியோடு கற்கத் தக்கதாக எழுதப்பட்டுள்ளது. பாடங்களின் வசனப் போக்கும், பொருள் அமைதியும் முறையே உயர்த்தப்பட் டிருப்பதோடு, சொற்செறிவும், பொருள் நுட்பமும் விரவிய தன்மையில் நன்கு விளங்குமாறு எழுதப்பட்டுள்ளன. இதில் அமைந்துள்ள சித்திரப் படங்கள் பாடங்களின் கருத்திற் கேற்பச் சேர்க்கப்பட்டுள்ளன.

மாணவர்க்குப் பலவிதத்திலும் பயன்படும்படி நீதி முறை ஒன்றையே உணர்த்தும் செய்யுட்களே முழுதுங் கொள்ளாது. பல விஷயங்களும் தழுவிய கதை சம்பந்த மான செய்யுட் பாடங்களும் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன.

இதனைக் கற்கும் மாணவர் அறிவிலும் ஒழுக்கத்திலும், உலகானுபவத்திலும், தமிழ்த் தேர்ச்சியிலும் முன்னேற்றம் பெறுவர் என்று நம்புகிறேன்.

இதனைக் கண்ணுறும் ஆசிரியர்கள் தங்கள் கலாசாலைகளில் இதனைப் பாடபுத்தகமாக வைத்து என்னை ஆதரிக்க வேண்டுகிறேன்.

இந்நூலின் முன்னேற்றத்தைக் கருதிக் கூறப்பெறும் விஷயங்களை அன்பார்ந்த வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளக் காத்திருக்கிறேன்.

இங்ஙனம்,

நே. ரா. சுப்பிரமணியன்.

பொருளடக்கம்.

வசன பாடங்கள்.

பாடம்.		பக்கம்.
1.	அரிச்சந்திரன் திருமணம்	7
2.	காண்டாமிருகம்	13
3.	அரிச்சந்திரனும், விசுவாமித்திரரும்	17
4.	தாஜ்மஹால்	27
5.	மெய்ப்பொருள் நாயனர்	32
6.	எரிமலைகள்	36
7.	அரிச்சந்திரன் அடிமைப்படல்	40
8.	சந்திரமதி துன்புறல்	44
9.	புகையிலை	48
10.	பூண்டி அரங்கநாத முதலியார்	53
11.	நத்தை	55
12.	அரிச்சந்திரன் மேம்படல்	58
13.	ஆந்தை	63
14.	ஆகுபெயர்	67
15.	முத்து	70
16.	பொன்னப்பன் அன்னப்பனுனது	76
17.	நம்மாழ்வார்	82
18.	இந்திய இராஜாங்க காரியதரிசி	87
19.	கரிகாற்சோழன்	90
20.	இராமன் வனமடைதல்	96

21.	விஷபேதி	... ...	103
22.	புஷ்பம்	... ...	108
23.	கனிமரங்களை ஒட்டவைத்தல்	... ...	114
24.	பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி	...	119

செய்யுட் பாடங்கள்.

1.	கடவுள் வாழ்த்து	... ...	123
2.	ஆரணிய காண்டம்	... ...	123
3.	தனிப்பாடல்கள்	... ...	125
4.	இனியது நாற்பது	... ...	126
5.	இன்னா நாற்பது	... ...	127
6.	சிங்கத்தை முயல்கொன்ற கதை	... ...	128
7.	பூனைக்கிடங்கொடுத்துக் கழுகு இறந்தது	...	129
8.	நன்னெறி	... ...	132

செந்தமிழ் வாசகப் புத்தகம்.

(ஏழாம் வகுப்பு.)

அரிச்சந்திரன் திருமணம்.

மானஸம் என்னும் மலைச்சுனையினின்றும் வெளிப்பட்டு, சகல வளங்களுக்கும் ஆதாரமாய்ப் பிரவசித்துக்கொண்டிருப்பது சரயூநதி. இந்நதிதீரத்தில் செல்வங்களுக்கெல்லாம் இருப்பிடமாய் விளங்கிக்கொண் டிருப்பது அயோத்தி என்னும் அணிநகரம். இங்குத் திரிசங்கு என்னும் பெயருடைய அரசன் ஒருவன் முன்பொருகால் செங்கோல் செலுத்திவந்தான். நீதிமானுன இம்மன்னன், நீண்டகாலம் பிள்ளையில்லாதவனுய் இருந்து, பிறகு கடவுள் அருளால் பரிசுத்தமான சத்தியம் என்னும் தெய்வமே ஒரு மகனுக வந்து அவதரிக்கப் பெற்றனன்.

அந்த அருமந்தன்ன குழந்தையின் தன்மையை நோக்கிக் குலகுருவாகிய வஸிஷ்டர், அரிச்சந்திரன் என்று நாமகாணஞ் செய்து வாழ்த்தினர். திரிசங்குவேந்தன் அந்தப் பிள்ளையைக் கொள்ளக் கிடையாத் திரவியம் என உள்ளத்தில் உவந்து வளர்த்துவந்தனன். தக்க பருவங்களில் செய்ய வேண்டும் சடங்குகளையெல்லாம் நிறைவேற்றிச் சகல கலைகளிலும் அந்த அருமைப் புதல்வன் எவர்க்கும் முதல்வனுக விளங்கும்படி செய்தான்.

அரிச்சந்திரனும் காளைப்பருவம் வாய்க்கப்பெற்று, வேளை ஒத்து விளங்கினுன். உண்மையென்னும் ஒரு தெய்

வத்தன்மையும் அவன் உள்ளத்தூடே வேர் ஊன்றி மேலோங்கி வளர்ந்துகொண் டிருந்தது. மேலும் அவன் கல்வியாற் கடலையும் உலக அறிவால் உலகத்தையும், நீதியால் தராசையும், குணத்தால் அமிர்தத்தையும், நடையால் விடையையும், நிலையால் மலையையும், ஈகையால் மேகத்தையும் உவமைகூற அமைதி உடையவனாக இருந்தனன். அவன் தன்னுடைய பிதாவுக்குப் பெரிதும் உதவிசெய்துகொண்டு வரலாயினன். சிலகாலஞ் செல்லத் திரிசங்கு மன்னவன், தனது செல்வப் புதல்வனாகிய அரிச்சந்திரனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்துக் கௌசிக முனிவரால் கொடுத்தருளப் பட்ட புதிதான ஒரு சுவர்க்கத்திற் சென்று ஆங்கு அரசு வீற்றிருக்கலாயினன்.

ஒருநாள் அரிச்சந்திரன் சத்தியகீர்த்தி முதலான மந்திரிகள் புடைசூழ ஆஸ்தான மண்டபத்திற் கொலுவிருக்கையில், தேசசஞ்சாரம் செய்துகொண்டிருந்த சில முனிவர்கள் ஆங்கு வர, அவர்களை அந்த அயோத்தி மன்னவன் எதிர்சென்று வணங்கி, உபசரித்து ஆசனம் நல்கி, சிரமபரிகாரம் செய்வித்து, 'சுவாமிகாள்! தாங்கள் சென்ற இடங்களிற் கண்ட அதிசயங்களைக் கேட்டறிய விருப்பமுள்ளவனாக இருக்கின்றேன்' என்றனன்.

முனிவர் அவனை நோக்கி, "வேந்தே! மூர்த்தி தலம் தீர்த்தங்களை முறைபெற நாடிச் சென்றோம். அந்த நாடுகளிற் கன்னோசி நாடு ஒன்று. அதற்குத் தலைநகரமான கன்னமாபுரியிலிருந்து செங்கோல் செலுத்தும் வேந்தன் மதிதயன் என்பான். இவன் மகா தர்மிஷ்டன், தியாகி, புத்திமான், நீதிநெறிதவறாதவன். இவனுக்குக் கண்ணுதல்மூர்த்தி

அருளால் ஒரு பெண்மகவு உண்டாக அதற்குச் சந்திரமதி எனப் பெயரிட்டு, அதைக் கண்மணியேபோல் கருதி வளர்த்து வந்தான். அப்பெண்மணியும் அழகிலும் குணத்திலும் ஒழுக்கத்திலும் திருமகளை நிகர்த்தவளாய் நாளுக்கொரு வண்ணமாக வளர்ந்து திருமணத்துக்குரிய பருவத்தையும் அடைந்திருக்கின்றனள். நின்னைக் காண்டலும் அவள் ஞாபகம் உண்டாயிற்று. சகல விதங்களிலும் நீவிர் இருவீரும் ஒத்திருத்தலால், நீயே அந்தக் குலக்கொடிக்குக் கொழுநன்; அவளே உன் மனைவி என்பது எங்கள் மனத் துணிவு" என்றனர்.

இவ்வண்ணம் முனிபுங்கவர்கள் அருளியதைக்கேட்ட அரிச்சந்திரன் அந்தச் சந்திரமதியின்மேல் அளவுகடந்த அன்பும் காதலும் கொள்ளலாயினன். பின்னர் அவன் அம்முனிவரை நோக்கி, அவர்கள் நன்மொழியும் தன் விருப்பும் நிறைவேறத் தக்க காரியங்களைக் காலதாமதமின்றிப் புரிந்தருளுமாறு வேண்டினன். உடனே அத் தபோதனர்களும் அவனிடம் விடைகொண்டு கன்னமாபுரிக்குச் சென்று அரசன் அவையை அடுத்தனர்.

மதிதயன் அவர்களை அழைத்து உபசரித்து, வந்த காரியத்தை வினவ, அம்முனிவர், அரிச்சந்திர மன்னனது அறிவு, ஆண்மை, கல்வி, கேள்வி, திண்மை, வண்மை, உண்மை முதலான ஒழுக்கங்களை விரித்துரைத்து, 'அம்மன்னனுக்குச் சந்திரமதியை விவாகம் செய்து கொடுத்தல் சாலவும் தகுதியேயாகும்' என்றனர். மதிதயனும் அதற்கிசைந்து மனமிகக் களிப்புற்றனன். என்றாலும், அவன் அவரை மீண்டும் நோக்கி, 'மாதவத்தீர்! எனக்கு இப்புதல்வியை அருளிய

காலத்தில் கண்ணுதற்கடவுள், 'ஜனனமாகும் பெண்குழந்தைக்குத் தேவாமிசமும் அதிக இரகசியமான ஒரு சின்னமுமிருக்கும்' என்றும், அது அவளுக்கு நாயகனுவானுக்கன்றி பிறர் எவருக்கும் தென்படாது என்றும் அருளி மறைந்தனர். ஆதலால் இவளை உமது உத்தரவின்படி அவனுக்குப் பாணிக்கிரணம் செய்துகொடுப்பதெப்படி?' என்றான். அதற்குத்தவசியர் ஞானதிருஷ்டியால் உறுவதை அறிந்து அரசனை நோக்கித் தராதிப! அந்தத்தேவ இரகசியம் அந்த அரிச்சந்திரனுக்குத்தான் தென்படும். அதற்கையமில்லை. ஆதலின் சுயம் வரத்துக்கு ஏற்பாடுசெய்க' என்றனர். உடனே மதிதயன் மகிழ்ந்து திருமணத்துக்குரிய நாளைக் கணித்துச் சகல பொருள்களையும் சித்தஞ்செய்து தேசங்கள் தோறும் உள்ள மன்னவர்களுக்கு மணவோலை போக்கினன். அவனிடத்தில் விடைகொண்ட அந்தணர் குழாமும் அயோத்தி வந்து அரிச்சந்திரனிடத்தில், திருமணம் பேசிமுடித்து வந்த விஷயத்தைத் தெரிவித்து அகன்றனர். மணவோலை சில தினங்களில் அவனுக்குக் கிடைத்தது.

சந்திரிகம் பெற்ற அரிச்சந்திரன், சந்திரமதியின் கரத்தைப் பெற்றதுபோல் கருதி, நல்ல வேளையில் படைகள் புடைசூழ, வெண்கொற்றைக்குடை நிழல்செய்ய, வாத்தியங்கள் முழங்க இரதமேறிக் கன்னோசி நாட்டை நோக்கிப் புறப்பட்டான். செல்லும் நெறிநடுவிலுள்ள பாலைவனத்தில் வருகையில் அங்குள்ள காளிகோயிலையடுத்து, அவண் நிறுத்தப்பட்டிருக்கும் ஒரு தேர், முதற்கண் கற்றேராகக் காணப்பட்டுப் பிறகு அடுத்து வந்தவுடன் பொற்றேராக மாறிவிட்டதைக் கண்டு ஆச்சரியங்கொண்டான். பிறகு அவன்

அக்கோயிலில் அலங்கார மண்டபத்திற் கொலுவீற்றிருந் தருளும் ஸ்ரீ பத்திரகாளி அம்மைபாற் சென்று அவளைச் சேவித்து நின்றான்.

அங்ஙனம் பணிந்த அவனை அந்த அன்னையும் கடாட்சித்தருளி 'வந்தகாரியம் என்ன?' என்றருள, அரசன் 'அன்னாய்! இங்கு நிற்கும் இத்தேர் தூரத்துப்பார்வைக்குக் கல்லாயும், அடுத்து நோக்கக் கனகமாயும் விளங்கக் காரணம் யாதோ? அருளவேண்டுகிறேன்' எனலும் பராசக்தி சிறிது புன்னகை செய்தருளி, அவனைப் பார்த்து, "வேந்தே! முற்காலத்தில் மருணதேவன் பொன்மயமான இந்தத் தேரை இங்குக் கொணர்ந்து நிறுத்தி, 'இது எவர் கண்ணுக்குப் பொற்றேராகத் தெரிகின்றதோ அவர்க்கு இதனைக் கொடுத்தருள்க' எனக்கூறி அகன்றனன். ஆதலால் நீயே இந்த இரதத்துக்கு உரியவனாகின்றாய்; கொண்டு செல்க. இனி உன் கீர்த்தி உலகமெல்லாம் பரவ இருக்கின்றது" எனப் பலவரங்களையும்நல்க, வேந்தன் அந்த அம்பிகையை வணங்கி, விடைகொண்டு அந்தப் பொற்றேர்மேல் மற்றோர் இந்திரன் போல் இவர்ந்து செலுத்திக் கன்னமாபுரியிற் புகுந்து கலியாண மண்டபத்தைச் சேர்ந்தான். பற்பல தேசத்து மன்னவர் குழாங்களும் அங்கு வந்து நிறைந்தன.

திருமணத்துக்குரிய முகூர்த்தம் அடுத்ததும், மதிதயன் உத்தரவினால், ஆடையாபரணங்களால் அலங்கரிக்கப்பெற்ற சந்திரமதி, வெண்ணிற அன்னங்கள் பல சூழ்ந்து செல்ல நடுவிலொரு பொன்னிற அன்னம் நடைகொண்டதுபோல் பைய நடந்து, கலியாணப் பந்தலில் வந்து சேர்ந்தாள். அங்

கிருந்த மன்னர் கூட்டமெல்லாம் அந்தப் பொன்னனையா ளின் வடிவனைத்தையும் கண்களாற் பருகிப்பருகித் திருப்தி யாகாதவராய்ப் பிரமித்து, அலங்கரித்த உருவச்சிலைகளைப் போல் அசைவற்று இருந்தபடியே இருந்துவிட்டனர். அப் பொழுது ஒருதோழி, மணமாலையைக் கையில் தாங்கிநின்று கொண்டிருந்த சந்திரமதியை அழைத்துக்கொண்டு, நிறைந் திருக்கும் கொற்றவர் குழாத்துட் புகுந்து, அவளுக்கு ஒவ் வொரு அரசரையுஞ் சுட்டிக்காட்டி, அவரவருடைய பெய ரும், ஊரும் வெற்றிப் பிரதாப முதலியனவும் விளங்க விரித் துரைத்துக்கொண்டே போயினள்.

முடிவில், அவள் அரிச்சந்திரனைச் சுட்டி அவனுடைய வண்மை, திண்மை, மெய்ம்மை, மேன்மை முதலானவை களை விளம்பினள். உடனே சந்திரமதியும் தன்கையிலிருந்த மலர் மாலிகையை அவன் கழுத்திலணிந்து தலை வணக்கத் துடன் அருகில் நின்றாள். சந்திரமதி அரிச்சந்திரன்தோளில் அணிந்த மாலைக்கண், கண்களைச் செலுத்திப் பொறாமையால் மாலைக்கண் ஆக்கிக்கொண்ட வேந்தரெல்லாம், அவ்விடத்தி னின்றும் வெளிப்பட்டனர். அப்பால் அரிச்சந்திரன் திருமாங் கலியதாரணஞ் செய்யச் சந்திரமதியை நெருங்குகையில், அவள் கழுத்தில் ஜோதிமயமான தாலியொன்று விளங்குத லைக் கண்டு, பிரமித்து, 'ஓகோ! இஃதென்னை? முன்னொருவ னால் முடிக்கப்பட்ட தாலியுங் கழுத்துமாயிருக்கு மிவளை மறுமுறையும் விவாகஞ்செய்து கொடுக்கத்துணிந்த இந்த மதிதய வேந்தன் காரியத்தை யான் என்னென்று சொல் வேன்! நன்று! நன்று!!' என வெறுத்துரைத்தான்.

மதிதயன், அரிச்சந்திரனையும் மற்றுமுள்ளோரையும் நோக்கித் தனக்கு முன் கடவுள் அருளிய மங்கல நாளைப் பற்றிய தேவரகசியத்தை வெளியிட்டுக் கூறினன். எல்லோ ரும் அதனைக்கேட்டு ஆச்சரியமுங் களிப்புங்கொண்டவராய் அத் தம்பதிகளை வாழ்த்தினர். அயோத்தியர்கோனும் திரும ணச் சடங்குகள் அனைத்தையும் செம்மைபெற நிறைவேற் றிச் சிலநாள் மட்டும் வேட்டகத்தில் தங்கியிருந்து, ஒரு நாள் சந்திரமதியுடன் செம்பொன் மயமான தேரில் ஏறிப் பல்லியங்களும் முழங்கப் படைகள் புடைசூழ இந்திராணி யுடன் தேவேந்திரன் எழுவதுபோல் கன்னோசி நாட்டை நீங்கி அயோத்தியில் வந்து சேர்ந்தான். சில காலத்தில் அவனுக்கோர் ஆண் மகவு பிறந்தது. அதற்கு அவன் தேவதாஸன் எனப் பெயரிட்டுப் போற்றி வளர்த்து வரலாயினன்.

---

2. காண்டாமிருகம்.

காண்டாமிருகம் என்பது ஆசியா, ஆப்பிரிக்கா கண் டங்களின் வெப்பமும், நீர்வளமும் உள்ள பாகங்களில் வசிக் கும் நாற்கால் விலங்கு. இதை ஆங்கில மொழியில் ரயினு ஸிரஸ் என்பர். அந்த வார்த்தைக்குக் கிரேக்க பாஷையில் ‘கொம்புமூக்கு’ என்பது பொருள். அதாவது ‘மூக்கில் கொம்புள்ளது,’ என்பதாம்.

காண்டாமிருகம் காண்பதற்கு விகாரமான உருவினை உடையது. அதன் நிறம் கறுப்பு. யானையின் உருவத்தினும் இதன் உருவம் கொஞ்சம் குறைந்து பத்துப் பதினோடி



நீளமும், நாலு அல்லது ஐந்தடி உயரமும் உள்ளது. தலை பருத்து விநோதமாயிருக்கும். காதுகள் மிகச் சிறியனவாக மூக்கிற்கு மிக்க சமீபத்தில் அமைந்துள்ளன. அதன் கண்கள் மிகச் சிறியவை. தோல் அக்கண்களை மூடிக்கொண்டிருக்கும். அதற்கு மேலுதடு பருத்துக் கொஞ்சம் நீண்டிருக்கும். தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு நடக்கும்போது, அதன் மூக்குப் பூமியைத் தொடும். அதன் கொம்பு மூக்குக்கு மேற்புறம் காணப்படும். அக்கொம்பு ஆடுமாடு முதலியவற்றின் கொம்புபோல் எலும்பு போன்ற பொருள் அன்று. ஆனால் மூக்கின் சதையே நீண்டு கொம்பாக அமைந்திருக்கிறது.

அதன் கால்கள் யானையின் கால்களினும் குறுகியவை. ஒவ்வொரு காலிலும் பிளவுபட்ட மூன்று குளம்புகளோடு கூடிய விரல்கள் உண்டு. தோல் மிகவும் தடிப்பாயும்

இருப்புத் தகடுபோலக் கெட்டியாயும் இருக்கும். கூரிய ஈட்டியின் குத்தும் துப்பாக்கிக் குண்டும் அதனுட் செல்லா தென்றால், அதன் உறுதியை என்னென்போம்!

இங்கே கூறிய உறுப்புக்கள் காண்டாமிருகங்களுக்குப் பொதுவாயினும், முற்கூறிய இரண்டு கண்டங்களிலும் காணப்படும் காண்டாமிருகங்கள், தம்முட் சில வேறுபாடுடையன. ஆசியாவிலுள்ள காண்டாமிருகத்தின் முகத்தில் நாசிக்குமேல் இரண்டடி நீளமுள்ளதும், சற்று வளைந்து கூர்மையாக நீண்டிருப்பதுமாகிய ஒற்றைக் கொம்புண்டு. ஆப்பிரிக்காவில் உள்ளவற்றிற்கு மேலுள்ளது பெரிதும், கீழுள்ளது சிறிதுமாகிய இரண்டு கொம்புகள் உள்ளன. சாந்தமாயிருக்கும்போது, இக் கொம்புகள் தளர்ந்தும், கோபமடைந் திருக்கும்போது விறைத்தும் தோன்றுகின்றன. அன்றியும் ஆசியாவிலுள்ள காண்டாமிருகத்தின் தோல் மிகப் பருத்துப் பல மடிப்புகளோடு இருக்கும். ஆப்பிரிக்காவில் வசிப்பதன் தோல் கொஞ்ச மெதுவானதாயும், மடிப்புகள் இல்லாததாயும் அமைந்தது. ஆசியாவில் இது சஞ்சரிக்கும் பாகங்கள் வங்காளம், சீயாம், கொச்சின்சைன என்ற நாடுகளும், சுமத்திரா, ஜாவா, என்னும் தீவுகளுமே ஆம். ஆப்பிரிக்கா கண்டத்தில் நன்னம்பிக்கைமுனை நாட்டிலும், அபிஸீனியாவிலும் இது வசிக்கின்றது.

காண்டாமிருகம் சாகபக்ஷிணி யாதலால், தனக்கு உணவுகிடைக்கும் சதுப்புநிலங்களிலும், ஆற்றோரங்களிலும் வசிக்கும். செடிகொடிகளும், புற்பூண்டுகளும் இதன் ஆகாரம்.

சாதாரணமாக எவ்வகைத் தானியத்தையும் அது செவ்விதின் உண்ணும். ஆயினும் மற்றெந்த உணவிலும் கரும்பையே அது அதிகமாக விரும்பித் தின்னும்.

பொதுவாக இம்மிருகம் அதிகச் சாதுவாயும், மந்தமாயும் இருக்கிறது. ஆயினும் தனக்கிடையூறு செய்தவர்களை அது சும்மாவிடாது. உருவிற் பெரிய யானையும், வீரமிகுந்த புலியும் அதற்கஞ்சி நடுங்கும். மிருகேந்திரனாகிய அரிமாவும் அதை எதிர்க்க அஞ்சுமென்றால், அதன் உக்கிரத்தை என்னென்பது! சாந்தமாயிருக்கும் தருணத்தில் கிழங்குகளையும், வேர்களையும் கிளறியெடுக்க உபயோகப்படுகின்ற அதன் கொம்பு, கோபத்தில் தரையைக்குத்தி, மண்ணை விரோதிகள்மேல் விரைவாக எறியவும் உபயோகப்படுகின்றது.

எருமையும், ஏனமும்போல் இது அடிக்கடி தண்ணீரிலேயே விழுந்து புரளும் விருப்பு உடையது. இம் மிருகங்கள் யானையைப்போல், பல ஒன்றுசேர்ந்து வாழாமல் தனித் தனியாகவே வாழ்கின்றன. காண்டாமிருகம் ஒரு தடவைக்கு ஒரு குட்டியே போடுகிறது. பிறந்தவுடன் அக்குட்டி உருவத்தில் மிகச் சிறியதாயும், தாயளவு கறுப்புநிறமில்லாததாயும் இருக்கும். எண்பது ஆண்டளவும் இவ்விலங்கு சாதாரணமாக வாழ்வதாயினும், பிறந்த ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளிலேயே முழுவளர்ச்சியும் பெற்றுவிடுகிறது. அதன் பிறகு இது வளர்வதில்லை.

இந்தப் பிராணி மனிதனுக்கு அதிக உபயோகமானதில்லை. இதைப் பிடித்துப் பழக்கமுடியாததலால், உயிரோடிருக்கும்போது, அதனால் ஒரு பயனும் மனிதனுக் கிலது.

ஆயினும் ஐரோப்பா முதலிய இடங்களில் மாதிரிக்காகவும் விநோதத்திற்காகவும் இதனை மிருகாசயங்களில் வைத்து வளர்க்கிறார்கள். இதன் ஊன் உருசியான உணவாகவும், தோல் கேடயம் முதலியனவாகவும், கொம்பும் குளம்பும் சிறந்த ஔடதமாகவும் சிலர்க்கு உபயோகமாகின்றன.

3. அரிச்சந்திரனும், விசுவாமித்திரரும்.

அரிச்சந்திரன் தர்மங்கள் பலவற்றுள்ளும் முதன்மையானது சத்தியமே என்றும், அதுவே இம்மை, மறுமைக்குரிய பயன்கள் எல்லாவற்றையும் உதவுவதென்றும் மனமார எண்ணித் துணிந்து, அம்முறையில் தவறாமல் ஒழுகி இல்லறத்தைச் செம்மைபெற நடத்திக்கொண்டு வரலானான். தேவர் கோனாகிய இந்திரன் ஒரு மகம் இயற்றக் கருதிப் பூலோகத்திலுள்ள முனிவர்களை ஒருநாள் அழைத்தான். அழைக்கவே அகத்தியர், வசிஷ்டர், விசுவாமித்திரர், காசிபர் முதலான பல தாபதர்களும் அமராவதியைச் சார்ந்தனர். அமரர்கோன் தன் சம்பாஷணைக் கிடையில் அத்தவசிகளை நோக்கி, 'மகாத்துமாக்களே! எப்படிப்பட்ட கஷ்டங்களுக்குட்பட் டிருந்தாலும், பொய் என்பதே புகலாத புண்ணியவான் ஒருவன் எவ்வுலகத்திலேனும் இருப்பானோ?' என்று கேட்க, அங்கிருந்த வசிஷ்ட முனிவர் எழுந்து இந்திரனை நோக்கி, 'வலாரியே! இருக்கிறான். அவன் பூலோகத்திலுள்ள எனது சீடனே யாவன். அவன்,

'பாருக் கொருவன் பாதார சகோதரன்வெம்
போருக் கொருவன் புகழுக்கும் மறைப்பொருட்கும்
நேருக்கும் விடாமனுநூல் நெறிக்கும் பொறைக்கும்
ஆருக்கு மிக்கான் அரிச்சந் திரனாகும் என்றார்.

இவர் இப்படிச் சொல்லி வாய் மூடுமுன், இவர் தம் விரோதியாகிய விசுவாமித்திரர் கோபாவேசத்துடன் யாவரும் திடுக்கிட எழுந்து நின்று, 'ஓ கற்பக நாட்டுக் காவலரே! என்ன சொல்ல? அவ் அரிச்சந்திரன்,

'வெய்யன் பதகன் பரதார விருப்பன் வீணன்
பொய்யன் நிறையும் பொறையும் சிறிதுமில் புல்லன்
கையன் கபடன் கயவன் றனைநல்ல னென்றிவ்
ஐயன் றிருமுன் உரைத்தாய் இதென்னகொல்?' என்றார்.

இவையெல்லாங் கேட்ட வசிஷ்டருக்குச் சோகமும், கோபமும் மேல்மேலும் பொங்கியெழுந்தன. அவர் கௌசிகரைப் பார்த்துச் சிறிது கோபங்கொண்டு, 'யாதொரு களங்கமுமில்லாத அயோத்தி வேந்தனை அநியாயமாய் இகழ்ந்துரைத்த உன் நாக்கு இன்னமும் புழுவாகச் சொரியாதிருக்கின்றதே! இஃதென்ன காலக் கொடுமையோ?' என, விசுவாமித்திரரும், 'முழுப் பொய்யனைச் சுத்தமான மெய்யனென்ற உன் நாக்கு இன்னமும் அற்றுவிழாதிருக்கின்றதே' என்றார். இப்படி இவ்விருவருக்கும் வாக்குவாதம் போய் வாய்ச்சண்டை முற்றிவிட்டதைக் கண்ட மற்றைய முனிவரும், தேவரும் திடுக்கிட்டுப் பிரமித்து நின்றுவிட்டனர். அப்பொழுது இந்திரன் வசிஷ்ட விசுவாமித்திரரைக் கையமர்த்தி இருக்கச்செய்து, நீங்கள் இருவரும் கூறிக்கொண்டபடி மெய்ப்பிக்க உங்களாலாகுமா? ஆகாதெனில், நீங்கள் செய்வதென்ன? கூறுங்கள்.' என்றான். அதற்கு வசிஷ்டர், 'அந்த அரிச்சந்திரன் பொய்யனுவானாயின், நான் கட்குடத்தைச் சுமந்துகொண்டு தக்கணம் நோக்கிச் செல்லக்கடவேன்' என்றார். கௌசிகரும், அரிச்சந்திரன் மெய்யனுவானாகில், என்தவத்திற் பாதி யான் அவ

னுக்கு அளிப்பன்' என்றார். உடனே தேவர்கோன் விசுவாமித்திரரை நோக்கி, 'அரிச்சந்திரனை அசத்தியவானென நிரூபிப்பது உமது கடமையாயிருக்கிறது' என்று சொல்லிவிட்டு விடையும் நல்க, வசிஷ்டர் ஒழிந்த முனிவர்கள் யாவரும் பூதலம் நோக்கிப் புறப்பட்டனர்.

தபோவனம் சார்ந்த கோசிகர் முன்பின் எண்ணாமல் தேவர் சபைமுன் துணிந்து கூறிவிட்டதை நினைத்து உள்ளம் உருகப் பச்சாதாபப் படலானார். பிறகு அவர், அரிச்சந்திரனை அசத்தியவானாக்கும் நெறியைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்தார். இப்படி அவர் இருக்கும்பொழுது, அவருடைய சீடராகிய சில முனிவர்கள் வந்து அவரை வணங்கி நின்று அவரை நோக்கிச் 'சுவாமி! முக வாட்டமுடன் இருக்கக் காரணம் என்னையோ?' எனக் கோசிகர் நடந்தனவெல்லாம் அவர்கட்குரைத்து இனித் தாம் செய்யப்போகும் காரியங்கட்கெல்லாம் அவர்களைத் துணைபுரியும்படி கேட்டுக்கொள்ள, அச் சீடரும் அதற்கிசைந்தனர். பிறகு கௌசிகர் அவர்களை அருகிலமைழத் திருக்கச்செய்து, 'உலகத்தில் எப்படிப்பட்ட உத்தமரையும் நொடிக்கொரு பொய்வீதம் சொல்லச் செய்வது தரித்திரமேயன்றி வேறில்லை. மிடியால் இடியுண்டவன் சொல்லாத பொய்யும், செய்யாத இழி தொழிலும் உளவோ? இல்லை. ஆதலால் நாம் அந்த அரிச்சந்திரனை வறுமையால் வருந்தும்படி செய்வோமேயானல், நமது எண்ணம் விரைவில் நிறைவேறும். ஆனதால் நீங்கள் இப்பொழுதே அந்த அயோத்தி வேந்தனை அடுத்து, செய்ய இருக்கும் யாகத்திற்கு யானைமேல் நின்றெறிந்த கல் செல்லும் அளவான செம்பொற் குவியலை நாம் அபேக்ஷித்ததாகத் தெரிவியுங்கள். அப்பொழுதே அவ்வள்ளல் அத்துணைச் செல்வத்

தையும் அளித்துவிடுவான். நீங்கள் அப்பொருட் குவையை அவனிடத்திலேயே அடைக்கலமாக வைத்து, வேண்டும் பொழுது தரல் வேண்டுமெனக் கூறி வாருங்கள்' என்று அனுப்பினர்.

அவர்களும் முனிவர் மொழிந்த வண்ணமே அரிச்சந்திரனிடம் சென்று கேட்க, அவனும் அவர் கூறிய அளவு பொற்காசுகளைக் கொணர்ந்து குவித்தான். அதனைக்கண்ட சீடர்கள் வேந்தனை நோக்கி 'இப்பொருள் எமது ஆசிரியருடைய பொருளாக உன்னிடத்தில் இருக்கட்டும். அவர் கேட்கும்பொழுது கொடுத்தால் போதும்' என, அரிச்சந்திரன், 'அவ்வாறே தடையின்றிக் கொடுப்பேன்' என்றான். பிறகு அம் முனிவர்கள் அவனுக்கு ஆசிகூறி அவனிடத்தில் விடைகொண்டு விசுவாமித்திரரை அடுத்துச் செய்தகாரியத்தைச் செப்பினர். கோசிகரும் அவர்களை உவந்துவிடை கொடுத்தனுப்பினர்.

அப்பால் விசுவாமித்திரர் தமது தவ வல்லமையால் காட்டெருமை, பன்றி, மான், மரை, கரடி, புலி, யானை குரங்கு முதலான மிருகங்களைச் சிருட்டித்து, அவைகளை அரிச்சந்திரனது நாடுகளிலும், காடுகளிலுமுள்ள பயிர் முதலியவைகளையும், சோலை, தோட்டம் முதலானவைகளையும் அழிக்கும்படி ஏவினர். அவைகளும் அவ்வாறே விரைந்து சென்று, அவனது நாட்டுப் பழனங்களை யெல்லாம் பாழாக்கின; சோலைகளைப் பாலை நிலமாக்கின; நந்தவனங்களைத் தீயினுல் வெந்த வனம்போல் ஆகும்படி செய்தன. இவ்வாறு நன்செய், புன்செய்களிலுள்ள பயிர்களெல்லாம் அழியவே, குடிஜனங்கள் 'ஹோ' வென்று கதறி அழுதுகொண்டு அரிச்சந்திரனிடம் வந்து முறையிட்டனர்.

அரசன், 'இதோ நான் வேட்டையாடி அந்தத் துஷ்டப் பிராணிகளை வதை செய்கிறேன். உங்களுக்கு நேர்ந்து விட்ட நஷ்டங்கட்கும் ஈடு செய்வேன். ஒன்றுக்கும் நீங்கள் அஞ்சவேண்டாம். செல்லுங்கள்' என்று அவர்களை அனுப்பிவிட்டு, வேட்டைக்காரர்களையும், சேனைகளையும் ஆயுதங்களுடன் வருவிக்கும்படி மந்திரிகளுக்கு ஆணையிட்டான். அவர்கள் யாவரும் களிப்புடன் அவ்வாறே வந்து கூடினர். அரிச்சந்திரன் மனைவியுடனும், மகனுடனும் இரதமேறிக் காட்டை நோக்கிப் புறப்பட்டான். துஷ்ட மிருகங்கள் தொக்கு இருந்த இடத்தை அடைந்த அம்மன்னனும், அவன் பரிவாரங்களும் அவை எல்லாவற்றையும் வேட்டையாடி வீழ்த்தினர்.

அஃது அறிந்த முனிவருக்கு அதிககோபம் உண்டாகி விட்டது. உடனே அவர் தமது தவ விசேஷத்தால் ஒரு பெரும்பன்றியை உண்டாக்கினர். அது மைம்மலைபோன்ற உடம்பும், வச்சிராயுதத்தை ஒத்த கொம்பும் உடையதாய், மிக்க பயங்கரமான உருவத்துடன் நிற்பதைக்கண்டு, கோசிகர் களித்து 'ஓ வராகமே! நீ இப்பொழுதே சென்று அரிச்சந்திரனுடைய சேனைகளையெல்லாம் நாசம்செய்து அவனையும் ஆற்றல் அழியப் பொருது வருவாயாக' என்றுரைத்தனுப்பினர். அதுவும் அங்கு நின்று விரைந்து பாய்ந்து அரசன் படைக் கடல் நடுவில் மந்தரமலைபோல்வந்து விழுந்துகலக்கிக் கொம்புகளாலும், கால்களாலும், வாலாலும், தலையாலும் சேனைகளையெல்லாம் சின்னபின்னமாக்கத்தொடங்கியது. தொடங்கவே வேடர்களில் பலர் மாய்ந்தனர். சிலர் பின்னோக்கி ஓடினர். படைகளிலும் பலர் பட்டனர். இவ்வாறுகையில் அரிச்சந்திரன் தவத்தாற்பெற்ற வேலாயுதத்துடன் விரைந்துசென்று

அந்தக் கேழலின் மண்டையில் இடி இடித்ததுபோல் ஓர் அடி அடித்தான். உடனே அது வாயாலும், மூக்காலும் இரத்தம் கக்கிக்கொண்டு விசுவாமித்திரர் இருந்த சூழலை நோக்கி விரைந் தோடியது.

மாலைக்காலம் வந்தது. அன்று பட்ட மிருகங்களின் இரத்தப்பிரவாகம் நிறைந்த காட்டைப்போல் செவ்வானம் விளங்கியது. உயிர்தப்பின சில மிருகங்களும், பறவைகளும் புதர்களிலும், பொந்துகளிலும் போய் ஒளித்தன. விசுவா மித்திர முனிவரின் வஞ்சகம் நிறைந்த நெஞ்சம்போல் இருட்டும் வந்து சூழ்ந்தது. இரவானதும் அரிச்சந்திரன் மனைவியுடனும், மகனுடனும் பணிப்பித்த படைவீட்டிலுண்டு உறங்கலாயினன். அமைச்சரும், சேனைத்தலைவர்களும், சேனைகளும் ஆங்காங்கே கிடந்து கண்ணயர்வா ராயினர். நான்காவது யாமம் வந்தது. நித்திரை செய்துகொண்டிருந்த அரசன் சில தீக்கனவுகள் கண்டு திடுக்கிட்டெழுந்து அவை களை மந்திரிக்குச்சொல்லினன். அவைகளைக்கேட்ட அமைச் சனாகிய சத்தியகீர்த்தி, இறைவனை நோக்கி 'வேந்தே! இக் கனவுகளின் பயன் தீயனவே எனினும், முடிவில் அவை நன்மைகளையே பயப்பனவாம். இதற்கு யாதோர் ஐயமு மில்லை' என்று தேற்றினான்.

இங்கு இவ்வாறாக, முன்னோடிய பன்றி விசுவாமித்திரர் பாதங்களில் விழுந்து நாக்கு நடுங்கத் தான் சென்றதும், சேனைகள் பலவற்றையும் சின்னபின்னப் படுத்தியதும், அது கண்டு சினம் கொண்ட அயோத்தியர்கோன், தனது மூளை தெறிக்க அடித்ததும் சொல்லிச் சோர்வடைந்தது. அதனைக்கண்டதும் அத்தவசி, கண்களில் தீப்பொறிபறக்கப்

புருவங்கள் நெற்றிமீதேறக் கடுஞ்சினங்கொண்டு, சீறி, அக்கினிச் சுவாலை புறத்தில் பரவும்படி பெருமூச்சுவிட்டனர். விடவே அதிலிருந்து இரண்டு பருவப்பெண்கள் கதுமென உதித்து நீலக்கொடி போன்று அவர் முன் நின்றனர். இப்பெண்கள் கடுஞ்சினத்தை இடமாகக்கொண்டு பிறந்தவர்களாதலின், கடைக்குலத்தவராகக் கருதப்பட்டனர். இவர் கருநிறமுடையவரா யிருந்தாலும், அதி சௌந்திரவதிகளாக விளங்கினர். இப்படிப்பட்ட பெண்மணிகளுக்குப் பிதாவான அம்முனிவர், அவர்களைக்கண்டு மகிழ்ந்து அருகிலழைத்து ஆடல்பாடல் முதலியவைகளில் தேர்ச்சியுறும்படி தமது தபோபலத்தால் அவர்களுக் கருளிச்செய்து, அவர்களைப் பார்த்து, பெண்காள்! நீங்கள் இந்த அடுத்த வனத்தில் வந்திருககும் அரிச்சந்திர ராஜன் சமுகத்திற்சென்று உமது கல்வித் திறத்தைக் காண்பியுங்கள். சகல கலைகளும் கைவந்த அந்த வள்ளல், வேண்டுவது என்னை?என்பான். அதற்கு நீங்கள் அவனது வெண்கொற்றக் குடையைக்கேளுங்கள். மறுத்தால், உங்களை விவாகம் செய்துகொள்ளும்படி அவனைக் கேளுங்கள். இவைகளில் ஒன்றையன்றி வேறு ஒன்றையும் விரும்பாதீர்கள்' என்றுரைத்து அவர்களை அனுப்பினர்.

அவர்கள் அவர் விரும்பியபடி, அங்குச் சந்திரமதியுடன் உல்லாசமாய் வார்த்தையாடிக் கொண்டிருந்த காவலனைக் கண்டு வணங்கி, அவனுத்திரவின்மேல் கையிலிருந்த வீணையை மீட்டி, எவரும் அதிசயிக்கும்படி இசைமுறை தவறாது பாடினர். இதனைக்கேட்ட திரிசங்குசேய், அவர்களைப் பலபடப் புகழ்ந்து, "நமக்கு வேண்டுவது யாது?" என்னலும், பெண்கள், 'அரசர்க்கரசே! உமது சந்திரவட்டக்

குடையை அவாவினேம்' என்றார்கள். அதற்கு அரிச்சந்திரன் 'நீங்கள் கேட்டது எமது பரம்பரைக்கெல்லாம் உரியது. என் ஒருவனுக்கே சொந்தமானதன்று. வேறு கேளுங்கள்.' என்றான்.

அச்சமயம் அவர்கள், பெருவள்ளலே! நாங்கள் விரும்பிக் கேட்டதைக் கொடுத்தீரில்லை. என்றாலும் இன்னும் ஒன்று கேட்கின்றோம். அதையேனும் தடையின்றிக் கொடுக்க வேண்டுகின்றோம். எம்மைக் கல்யாணஞ் செய்து கொள்ளும்படி இறைஞ்சி வேண்டுகின்றோம்' என்றனர். இப்படி இவர்கள் கேட்டதை மந்திரி ஒருவன் அறிந்து அக்கன்னியரைச் சினந்து நோக்கி, 'உங்களுக்குத் தகுந்தவைகளைக் கேளாமல் வரம்பு மீறிக் கேளாதவைகளைக் கேட்டதால், நீவிர் தண்டித்தற்கு உரியராய்விட்டீர்' என்றுரப்பி அவர்களை நெருங்குதலும், அப் பெண்கள் சிங்கத்தைக் கண்ட மான் குட்டிகளைப்போல் நடு நடுங்கி, கையிலிருந்த இசைக்கருவிகளைக் காட்டில் எறிந்து விட்டுக்கல்லும் முள்ளும் காலிற் குத்தக் காட்டுமார்க்கமாய் ஓட்டமெடுத்தனர் புதர் அவரது ஆடையைப்பற்றி இழுத்துப் பிய்த்தது, பரலால் அவரது பாதங்கள் புண்பட இரத்தம் வெளிப்பட்டது. என்றாலும், அவர்கள் வியர்வைநீர் ஓட விரைந்து பாய்ந்து வந்து கௌசிக முனிவரடியில் வீழ்ந்து, பெருமூச்சிறைக்க நாக்குழறக்கண்ணீர் சொரிய நடந்தவற்றையெல்லாம் நவின்றனர்.

இதனைக் கேட்டதும், கோசிகருக்குப் பெருஞ்சினம் மூண்டுவிட்டது. 'இதோ பார். அந்த அரிச்சந்திரனை அதம் செய்துவிடுகிறேன்' என்று கூறிக்கொண்டு, கடல் மத்தியிலுள்ள தீ காட்டின் நடுவே புறப்பட்டதுபோல் விரைந்து

மன்னவனிருக்கும் சோலையை அடுக்கையில், அரிச்சந்திரன் அவரை எதிர்சென்று வணங்கி, 'சுவாமி! இவ்வளவு தூரம் திருவடிசிவப்ப வந்த காரணம் என்னையோ?' என, முனிவர், 'அடா! அறிவுகெட்ட அரசனே! உன்னை நான் பசுவின் தோல்போர்த்த புலியென்று தெரிந்துகொண்டேன். நீ எனக்குச் செய்தகுற்றங்கள் பலவாறுயிருக்கின்றன. நான் ஏவிய மிருகங்களை வதைத்தாய். பன்றியைத் துன்புறுத்தினாய். யான் இருக்கும் சோலையை அழித்தாய். எனது பெண் மக்களையும் கண்ணீர்விட்டோட அடித்தாய்' என்றார்.

இதுகேட்ட அரிச்சந்திரன், 'எந்தாய்! மிருகங்களையும், பெண்களையும் ஏவினவர் தாங்களென்று அறியேன். என்றாலும் பிழைகளைப்பொறுக்க' என்று வணங்க, முனிவர், 'நீ செய்தகுற்றங்கள் பொறுக்கத்தகுவன அல்ல. என் மக்களை அவர் கேட்டுக்கொண்டபடி நீ மணஞ் செய்துகொண்டால் என் மனம் சாந்தியுறும்' என்றார். அதற்கவன், 'பறைக்குலப் பெண்களை என்னை மணக்கும்படி சொல்லுதல் தகுதியோ? எனக் கோசிகர் 'தகுதிதான், உன் தகப்பன் பறையனாய்ப் போனவன் தானே' என்றார். மன்னவன், 'அப்பறையனையும் தேவரீரே தேவனாக்கினீர். அப்படிப்பட்ட தாங்கள் என்னை இழிகுலத்தோடு இணைக்கலாமா?' என்றான். முனிவர், 'அந்த வியவகாரம் இருக்கட்டும்; நீ இப்பெண்களை ஏற்றுக் கொள்ளல்வேண்டும். இல்லாவிட்டால் உன்னைச்சபிப்பேன்' என்றார். அரிச்சந்திரன், 'ஐயனே! தங்கள் சாபத்தை ஏற்றாலும் ஏற்பேன். எனக்குரிய நாடு நகரங்களைத் தரினும் தருவேன். என் கண்ணையும் இழப்பேன். இக்கடைக்குலக் கன்னியர்களைக் கனவிலும் கருதமாட்டேன்' என்றான்.

முனிவர், அரிச்சந்திரனைநோக்கி 'நீ சொன்னபடி உனது நாடுநகரங்களையெல்லாம் எனக்குக்கொடு' என, அவனும் அவ்வாறேகொடுத்தான். பிறகு அவைகளைத் தாராபூர்வமாகத் தானம்செய்தான். தனது ராஜமுத்திரை மோதிரத்தை ஈந்தான். அப்பால் கோசிகர் அவனை நோக்கி. 'வேந்தே! வேள்வியின்பொருட்டு உன்னிடத்தில் அடைக்கலமாக எனது சீடரால் வைக்கப்பட்டிருந்த செல்வங்களையும் தருவாயாக' என்றார். அரசன், 'அச்செல்வம் நான் கொடுத்த நகரில் அடங்கிவிட்டதே; கொடுப்பதற்கு என்னிடத்தில் வேறுபொருளேது?' எனத் தவசியார், 'என்ன? நீ தானங் கொடுக்கும்பொழுது அச்செல்வமும் அதிற் சேர்ந்துவிட்டது என்றுசொல்லித் தாரைவார்த்தாயோ? சூரியகுலத்தரசர் சொன்னசொல்லை மாறமாட்டார்கள் என்பார்களே?' அஃது உன்னிடத்தில் காணேமே' என்றார். இச்சொற்களைக்கேட்டதும் அரிச்சந்திரன் உள்ளம் துடிதுடித்தது. என்ன செய்வான்! அவன் தனதுகுலத்துக்கோர் பழுது வருதலைப் பொறுமல், முனிவரைநோக்கி, 'ஐயனே! இவ்வெளியேன் அப்பொருளையும் எப்படியாவது தந்துவிடுகின்றேன். என்னோடு ஒருவரை அனுப்புங்கள்' என்றான்.

அதற்கு முனிவர், 'அரசனே! உன்னோடு யார் அலைந்து திரிந்து வருந்துவர்? கொடுக்கவேண்டும் திரவியத்தை இப்பொழுதே கொடுத்துவிட்டுப்போ' என்றார். அதற்கரசன் வேறொன்றும் சொல்லமுடியாதவனாய், விசுவாமித்திரரை வணங்கி, 'என்தந்தை போல்வாய்! இவ்வேழையின் மேல் கருணைசெய்து சிலநாள் அவதிகொடுத்து ஒருஆளை அனுப்பினல், அவ்வவதிக்குள் எப்படியாவது செலுத்திவிடுவேன்

என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்ள, கௌசிகர், 'நாற்பத்தெட்டு நாள் தவணை கொடுத்திருக்கின்றோம். நீ தரும் பொருளும் அந்நியநாட்டுப் பொருளாயிருத்தல் வேண்டும்' என்றுரைத்து, 'சுக்கிரன்' என்னும் பிராமணனை அழைத்து, 'தவணைக்குள் அரிச்சந்திரன் தரவேண்டிய பொருள்களைத் தந்துவிட்டால், நீ கூட அலைந்து திரிந்ததற்குண்டான கூலியை வேறாக அவனிடமிருந்து பெற்றுக்கொள். அரிச்சந்திரனைப் பலதுன்பங்களுக் குள்ளாக்கி ஒருபொய் அவன் வாயிலிருந்து எப்படியாவது வரும்படிசெய்' என்று இரகசியமாகச்சொல்லி, அரசனுடன் அவனை அனுப்பிவிட்டனர்.

---

4. தாஜ் மஹால்.

இற்றைக்குச் சற்றேறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்குமுன்னர் நமது இந்தியாவை ஷாஜஹான் என்னும் மொகலாய சக்கரவர்த்தி அரசாட்சி புரிந்தனன். அவன் அரும் பெருங்கட்டிடங்களை அமைத்தவன். அவன் கட்டிடங்களை உலகத்திலுள்ள சிறப்புக்களில் ஒன்றெனஎந்நாட்டாரும் மெச்சிப் புகழுகின்றனர். அவற்றில் முக்கியமானது தாஜ் மஹால், இது என்றும் தன்னிகரில்லாத நன்னயம் வாய்ந்தது. அவன் அதைக் கட்டியதன்காரணத்தை இங்குக் கூறுவோம்.

இம்மன்னர் மன்னன் மதி நுட்பம்வாய்ந்த பல அமைச்சர்களின் ஆலோசனையால் பல வெற்றிகள் பெற்றவன். அவன் அரிதிற் பெற்ற ஒரு இரத்தினமுண்டு. அதனுடன் மற்றைய அரசர்கள் அடைந்த இரத்தினங்களை ஒப்புநோக்

கில், அவை சூரியனுக்குமுன் தோன்றும் மின்மினிப் பூச்சிகளே ஆம். அவன் பெற்ற அந்த இரத்தினம் நற்குணம் வாய்ந்த பொற்பினையுடைய அவனது கற்பரசியே ஆவள். அவளது பெயர் மும்தாஜ் மஹால் என்பதாம். ஒப்புயர்வற்ற அவ்வுத்தமியைப்பெற்றதால், ஷாஜஹான் மிக்க பாக்கியசாலி என்றே சொல்லவேண்டும்.

தரும தேவதையின் உருவென உதித்த மும்தாஜை அவன் மனைவியாகப் பெற்றவிதத்தை நீங்கள் அறிய விரும்புவீர்கள். ஷாஜஹான் தந்தையாகிய ஜிஹான்கீர் ஆக்ராவில் ஆட்சிசெய்துகொண்டிருந்தனன். ஆங்கு ஆண்டுதோறும் அரசன் ஜன்மநக்ஷத்திரத்தன்று அரண்மனை வெளியில் விந்தைமிகுந்த ஒருசந்தைகூட்டி, அங்கு அரண்மனை அரிவையர் தாமரிதிற் செய்த அற்புதப் பண்டங்களை மிக்க விலைகொடுக்கத்தக்கவர்க்கு விற்கவேண்டுமென்றும், அப்பெருமாட்டிகள் குறிக்கும் விலையை வாங்கும் பிரபுக்கள் கொடுக்கவேண்டுமென்றும் ஒருத்தரவு பிறப்பித்திருந்தனன். அரசனாணையைச் சிரமேற்கொண்ட தெரிவையர், அதிகவிலையுள்ள சரக்குகளைக் குறித்த சித்திரப்பந்தர்களிற் பரப்பி வைத்திருந்தனர்.

இவ்விதம் இப்பெருமாட்டிகள் ஏற்படுத்திக்கடைத்தெருவிற்குப் பலபொருள்களை வாங்கவும், அவர்களைக் கௌரவிக்கவும் ஜிஹான்கீர் சுற்றத்தாரோடும், மற்றைப் பரிவாரங்களோடும் சென்றனன். இங்ஙனம் நடைபெற்ற அலங்காரமான காட்சியைக்கண்டு களிக்குமாறு, ஒருநாள் ஷாஜஹான் அரச குமாரர்களோடும், பிரபுக்களோடும் அவ்வங்காடிக்குச் சென்றனன். அங்குத் தன் சமஸ்தான அமைச்ச

ஞன அசாப்ஜாவின் அருமை மகளாகிய மும்தாஜினி என்னும் பெண்ணைக் கண்ணுற்று, அவள் விற்பனை செய்யவிருக்கும் பொருள் யாதெனக் கேட்டான். விலையேறப் பெற்ற பளபளப்பான ஒரு வைர மணியே தன்னிடத்து உள்ள தென அவள் சாற்றினள். இவ்வரசன் அதைக் காண்பிக்கச் சொன்ஞன். அவள் தான் கற்கண்டாற் செய்திட்ட செம்மணியை அம்மன்னவனுக்குக்காட்டி,'அதன் விலை ஒரு லக்ஷம் வெண்பொற் காசுகள்' என்ருள். அதன் வேலைப் பாட்டைக் கண்டு வியந்த ஷாஜஹான், அந்த ஒருலக்ஷம் வெண்பொற் காசுகளையும் கொடுத்து அதை வாங்கினன்: பிறகு கொஞ்சநேரம் அவளோடு சம்பாஷிக்கையில், அம்மணி உண்மையில் எதனுற் செய்யப்பட்ட தென்று அவளிடம் உசாவி உணர்ந்தான். அழகிலும், அருங்குணத்திலும், கூரிய அறிவிலும் அவள் இணையற்றவ ளென்று துணிவுற்ருன். தன் அரண்மனைக்கு அவன் அவளை அழைக்க, அவளும் அங்ஙனமே சென்று அவனுக்குப் பெருமணியனைய ஒரு மனைவியாயினள்.

ஷாஜஹான் மும்தாஜிமானியை மனைவியாகப் பெற்றது, அக்கால வழக்கிற்கு மாறுபட்டதேயாயினும், அவளு

டைய நல்லொழுக்கமும் அன்பும் ஜிஹானுக்கு அவளிடத்து என்றுமழியாப் பேரபிமானத்தைப் பிறப்பித்தன. அவள் ஆயுள் நாளிலும், அதற்குப் பிறகும் வேறு எந்த மனைவியரையும் அவன் மணந்து கொண்டதில்லை. ஏகபத்தினி விரதனென அவனைப் புகழக் காரணமா யிருந்தவள் இக்காரிகையே. அம்மன்னனுக்கு ஆண்டுகடோறும் இவளிடம் ஒவ்வொரு மகவு தோன்றியது. அப்பேறே அவள் மரணத்துக்குக் காரணமாய் இருந்தது.

அவள் இறந்த வரலாறு அடியில் வருமாறு கூறப்படுகின்றது. ஒருநாள், தன் கர்ப்பத்திலிருந்த குழந்தை அழும் குரல் அவள் காதில் கேட்டது போல் அவளுக்குப் பட்டதாம். உடனே அவள் தன் கணவனை அழைத்துக் 'காதலரே! கருவிலமைந்த குழவியின் குரல் கேட்டேன். ஆதலின், இனி நான் பிழைத்திருக்க மாட்டேன். இறக்குமுன், நான் உம்மிடம் இரண்டு வரங்களை இரக்கின்றேன். நானிறந்த பிறகு என் வயிற்றிற் பிறந்த பிள்ளைகளும் இனி வரும் மாற்றாள் மக்களும் உமது அருளையும் பொருளையும் பெறப் போர் புரியும்படி இடம் கொடாதருள்க. இவ்வுலகில் என்னினைவு நீண்டகாலம் நிலைத்திருக்குமாறு என்னை அடக்கம் பண்ணின இடத்தில் ஒரு கட்டிடம் கட்டுக' என்றாள். அரசனும் அவ்வண்ணமே வாக்களித்தான். சின்னாட்களில் அப்பெருமாட்டி ஒரு பெண் மகவைப் பெற்றுவிட்டு உம்பர் உலகு உற்றாள்.

ஷாஜஹான் மனைவிக்கீந்த இரண்டு வரங்களையும் இனிது நிறைவேற்றினன். அவள் இறந்த பிறகு, அவன் மறுமணம் செய்து கொள்ளவில்லை என்று முன்னரே கூறி



ளும். ஆக்ரா நகருக்கு மூன்று மைல் மேற்கில் யமுனைக் கரையில் அவளை அடக்கம் செய்தான். அவ்விடத்தில் கணக்கிடற்கரிய பணத்தைச் செலவு செய்து ஒரு கோரி கட்டுவித்தான்.

எப்புறமும் ஆகாயமளாவிய சோலைகளும், சலவைக்கற்களாற் பொற்புற அமைத்த வாவியும் சூழ்ந்த தோட்டத்தின் நடுவில் அக்கட்டிடம் அமைக்கப்பட்டது. வெளிப் பார்வைக்கு அது மாளிகைபோற் காணப்படும். அதன் நுட்பமான சிற்ப வேலையும், பார்ப்பவர் கண்களைக் கவரும் பொற்பமைந்த காட்சியும் மிக வியக்கத்தக்கன. அதன் சலவைக்கற் சுவர்களும், ஒளி வீசும் மாணிக்கங்களும், உன்னதஸ்தூபிகளும், வில்லுமிழ் விமானங்களும் பெற்ற சிறப்பை எடுத்துரைக்க யாராலாகும்! முந்நூறு வருடங்களுக்கு முன்னே

அமைக்கப்பட்டாலும், இன்னே கட்டப் பட்டதுபோல் வனப்புவாய்ந்து விளங்குகிறதென்றல், அதன் வேலைத்திறம் எத்தன்மையதென்று உய்த்து உணருங்கள். இக்கட்டிடம் இருபத்திரண்டு வருடங்களில், இருபதினயிரம் சிற்பிகளால் ஒரு கோடி வெண்பொற்காசுகள் செலவு செய்து, பல நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட நவரத்தினங்களை அழுத்தி முடிக்கப்பட்டது. அதனை முதன்மையாக இருந்து முடித்தவர்கள் இத்தாலி நாட்டின் சிற்பிகளே ஆவர். எந்நாட்டாராலும் முன்னுட்டிக் கூறும் இவ்வற்புதக் கட்டிடம், இம்மொகலாய அரசர்க்கரசனது மாண்புக்கும், அவன் தன் மனைவியிடம்கொண்ட அன்பிற்கும் ஏற்ற சான்றுகு மன்றே! அன்றியும் 'குலமகட்குத் தெய்வம் கொழுநனே' எனக் கொண்டொழுகும் குணமுற்ற கோதையர்கள் 'கொண்டவனுற் கொண்டாடப் பெறுவர்' என்பதற்கு மோர் அறிகுறியும் ஆகும்.

---

5. மெய்ப்பொருள் நாயனர்.

சேதி நாட்டிலே திருக்கோவலூரிலே, மலையமா நாட்டாருக்கு அரசராகிய மெய்ப்பொருள் நாயனர் என்பவர் ஒருவர் இருந்தனர். சிவனடியார்களுடைய திருவேடத்தையே மெய்ப்பொருளென நினைத்தவர் ஆதலின், அவருக்கு முற்கூறிய பெயருண்டாயிற்று. அவர் தமது நாட்டை நீதி வழுவாது ஆட்சி புரிந்தும், தம்மை எதிர்த்த புரவலரைப் புறங்காட்டி ஓட அடித்தும், சிவாலயங்களுக்குப் பல

சிறப்புக்களைச் செய்தும், தம்மை யடுத்த சிவனடியார்களுக்கு உண்டியும், மற்றும் வேண்டிய பொருளும் மனமகிழ்ந்-துதவியும் வந்தனர்.

இப்படியிருக்கையில், முத்திநாதன் என்னும் ஒரு வலி மிக்க மன்னவன், அவரைப் பலமுறை தன் சேனையோடு எதிர்த்தும், வெல்ல இயலாது அவமானப்பட்டான். அவன் அவரை எப்படியேனும் கொல்லத் தீர்மானித்து அதற்கான ஒரு சூழ்ச்சி செய்தான். அவரது அடியார் பக்தியை அறிந்து அதைக்கொண்டே அவரை வஞ்சனையால் துஞ்சு-விக்க வழி தேடினான்: விபூதியை நன்கு தரித்தான்; சடை வளர்த்து முடித்துக் கட்டினான். கவுளிபோன்ற ஒன்றைக் கையிலெடுத்துக்கொண்டான்; புகுந்தான் அரசமாளிகையில்.

இங்ஙனம் புகுந்ததும், முன்வாயிற் காவலர் அவனை அஞ்சலிசெய்து, 'சுவாமி எழுந்தருள்க' என்று சொல்லி உட்செல்ல விட்டனர். அவன் மற்ற வாயில்களையும் அங்-ஙனமே கடந்து இறுதி வாயிலை அடைந்தான். அங்கிருந்த காவலனான தத்தன் என்பவன் அவனை நோக்கி, 'சுவாமி! எம்மிறை கண்துயில்கின்றார். உட்செல்லக் கூடாது' என்ன முத்திநாதன், 'நான் அரசர்க்குச் சைவாகம உபதேசம் செய்யப் போகிறேன். நீயா என்னைத் தடுப்பவன்?' என்று கூறி உட்புகுந்தான். புகுந்தவன், நாயனார் தமது நாயகியா-ருடன் தூங்கும் கட்டிலண்டை சென்றான்.

தேவியார்விரைவில் விழித்தெழுந்து,நாயனாரைஎழுப்ப, அவர் அவனது சிவவேடத்தில் ஈடுபட்டு அவனை ஆவலுடன் எதிர்கொண்டழைத்து,'தேவரீர் இங்கெழுந்தருளியகாரணம்

யாது?' என்று வினவினர். அதற்கவன், 'இதுவரை வெளி வந்த சைவாகமங்களுள் எவ்விடத்தும் காணாத ஓராகமத்தை உனக்குப் போதிக்கவே இங்கு வந்தேம்' என்றான். இதைக் கேட்டு நாயனர், 'இதனினும் உயர்ந்தபேறு எனக்கென்ன இருக்கிறது? அந்தச் சைவாகமத்தை வாசித்து அதன் உண்மையை எனக்கு அருளவேண்டும்' என்று அடிபணிந்தனர். முத்திநாதன், 'இவ்வருமை ஆகமம் உபதேசிக்கும் காலத்தில் உனது தேவியும் உடனிருக்க ஒண்ணாது' என்றான். நாயனர் உடனே தமது மனைவியாரை அந்தப்புரம் செல்லுமாறு அனுப்பினர்.

பிறகு, நாயனர் பொய்வேடம் பூண்ட முத்திநாதனை ஆசனத்தில் இருத்தித் தாம் கீழிருந்து, அத்திரு ஆகமத்தை அருளிச் செய்யுமாறு வேண்டினர். முத்திநாதன் தன் கையிலிருந்த வஞ்சகக் கவுளியை மடிமீது வைத்து அதிலிருந்த புத்தகத்தை அவிழ்த்தெடுப்பவன்போல் நடித்து, நாயனர் தன்னை வணங்கும்போது அக்கவுளியில் மறைத்து வைத்திருந்த ஓர் உடைவாளை எடுத்து அவரைப் பலமாய்க் குத்தினன். குத்துண்ட நாயனர் சிவவேடமே மெய்ப்பொருளென்றுகொண்டவராதலின், அப்பொழுதும் அவன் வேடத்தில் ஈடுபட்டு அவனை வணங்கினர். அதற்குள் அரசனுக்கு நிகழ்ந்த துணர்ந்த தத்தன் உட்சென்று, குத்திர புத்தியுள்ள முத்திநாதனை வெட்டப்போனன். அப்பொழுது நாயனர் அவனைத் தடுத்து, 'தத்த! இவர் நம்மவர். எனது அத்தனாகிய பரமசிவன் ஆதலால், இவருக்கு எவ்வித இடையூறும் செய்யற்க' என்று தடுத்துக்கொண்டே கீழே விழுந்தார். தத்தன் நாயனரை வணங்கி, 'அடியேன் தேவரீருக்குச் செய்ய

வேண்டிய குற்றேவல் யாது?' என்று வருந்திக்கேட்க, நாய-ஞர், 'நம்மவருக்கு யாதொரு இடையூறும் வாராமல் அவரைக் கூட்டிப்போய்ப் புறத்தேவிட்டு வந்து செய்தி தெரிவிப்பா யாக' என்றார். தத்தன் அங்ஙனமே முத்திநாதனை அழைத்துக் கொண்டு வெளிச்சென்றான். கொலை நடந்த விஷயத்தை உணர்ந்த நகரமாந்தர்கள் அப்பாதகனைக் கொல்லவந்தனர். தத்தன் அவர்களைத் தடுத்து, 'இந்தப் பத்தருக்கு யாதொரு இடையூறுமின்றிக் கொண்டுபோய் விடுமாறு அரசர் ஆணை யிட்டுள்ளார்' என்றான். யாவரும் நாயனர் கட்டளையைத் தள்ளமுடியாமல் அவனைத் துன்புறுத்தாது அப்பாற்சென்-றார்கள். தத்தனும் அப்படிறனைக் காட்டிற் கொண்டுபோய் விட்டு ஊருக்குத் திரும்பிவந்து தனது வரவை எதிர்பார்த் திருந்த நாயனரிடம் சென்று, முத்திநாதன் க்ஷேமமாகப் போய்ச்சேர்ந்த செய்தியைச் சொன்னன். அவர் தத்தன் செய்ததைத் தனக்கே அவன்செய்த பேருதவியாக எண்ணிப் பெரிதும் பாராட்டினர்.

அப்பால் அவர் தம் குமாரர்களையும், அமைச்சர்களை-யும் அழைத்துச் சிவாகம விதிப்படி விபூதிமேல் வைத்த அன்பை மறவாமல் இருக்கும்படி போதித்துக் கனகசபை-யில் நடனம் செய்கிற பரம்பொருளைத் தியானித்தனர். அப் போது கடவுள் அவர் முன்தோன்றி, அவரைத் தமது திரு வடியிலே சேர்த்துக் கொண்டனர்.

நாயனரது அடியார் பக்தி இவ்வளவென்று அளவிட் டுரைக்கலாமோ! அடியார் பக்தி மிகவும் வாய்ந்தவர் என்பது ஒருபுறமிருக்க, தமக்குத் தீங்கு செய்தாரை

ஒறுக்கும் ஆற்றல் இருந்தும் அவ்வாறு செய்யாது விட்ட பெருந்தகைமை என்னே! என்னே!!



6. எரிமலைகள்.

தீ, கற்குழம்பு முதலியவற்றைக் கமர்களின்வழி வேகமாகக் கக்கும் பருவதத்துக்கு எரிமலை என்று பெயர். கிரேக்க பாஷையில் அக்கினி தேவனுக்கு வால்கன் என்பது பெயர். எரிமலை அக்கடவுளின் செய்கையால் தோன்றுவதென எண்ணி, ஐரோப்பியர் அதனை வல்கனோ என்கிறார்கள். மத்திய தரைக்கடலில் ஸிஸிலி என்னும் தீவிலே எட்னா என்னும் எரிமலை ஒன்றுண்டு. அம்மலையினடியில் அங்கிக்-

கடவுள் தங்கியிருந்து ஒருலைக்களமுண்டாக்கி, அங்கே துருத்தி வைத்தூதுகிறார் என்றும், அப்போது நெருப்பு முதலியன வெளிப்படுகிறதென்றும் அவர்கள் நம்பினார்கள்.

எரிமலைகள் உண்மையில் எங்ஙனம் உண்டாகின்றன வென்று ஆராய்வோம். நாம் வசிக்கும் இப்பூமியானது முன்னொரு காலம் சூரியன் போன்ற அக்கினி மய அண்டமாக இருந்ததென்றும், இயற்கையில் வரவரக் குளிர்ந்து இறுகி, உயிர்கள் வசித்தற்குரியதாகிவிட்டதென்றும் சாத்திர நிபுணர்கள் சாற்றுகிறார்கள். இன்னும் பூமியினுள் தீயானது அணையாமல் எரிந்துகொண்டே இருக்கிறது. அக்காரணத்தினாலேயே பூமியை வெட்டி உட் செல்லச் செல்ல உஷ்ணம் அதிகரித்துக்கொண்டே போகிறது. முற் கூறியபடி தரையின்கீழே நிலையாகத் தங்கியிருக்கும் நெருப்பின் மேலுள்ள பொருப்பு அல்லது நிலம், சில இடங்களிற் கனமாயும் வேறு சில இடங்களில் இலேசாயும் உள்ளது. இத்தீ சில சமயத்தில் ஒரு புறம் ஓங்கி எழுந்து வெளிப்பட வழிதேடும்போது சிற்சில விடங்களில் அங்குமிங்கும் முட்டிப் பார்க்கின்றது. அப்போது இலேசாக மூடிக்கொண்டிருக்கும் மலை, தரை முதலியவை வெடிக்கின்றன. அவ் வெடிப்புகளின் வழியே உள்ளிருக்கும் நெருப்பு பலங் கொண்டு வெளிப்படவே எரிமலையாம். இவ் எரிமலைகள் கடலிலும், கடலைச்சார்ந்த இடங்களிலும் பெரும்பாலும் உண்டாகின்றன.

எரிமலைகள் பெரும்பாலும் விரித்துப்பிடிக்கும் குடை வடிவமா யிருக்கின்றன. அவற்றின் உச்சியில் உயர்ந்த பெரிய துவாரங்கள் காணப்படும். அவை கக்குவாய்கள்

என்று சொல்லப்படும். அக்கக்குவாய் மேற்பாகத்திற் கொண்ட பெரும்பொந்துகள் பூமிக்குள் மிக்க ஆழத்திற் செல்பவை.

எரிமலைகள் உண்டாவதற்கு முன், அதிர்ச்சியும் பெருமுழக்கமும் தோன்றும். கக்குவாய்களிலிருந்து அக்கினியும் புகையும் பழுக்கக்காய்ந்த கற்களும் கற்குழம்பும் சாம்பரும் நூற்றுக்கணக்கான மைல்கள் விரைவாகவும், மிகுதியாகவும் எறியப்படுகின்றன. பார்ப்பதற்கு இக்காட்சி வெகு பயங்கரமாக இருக்கும். இவ்விடங்களிற் புகை படர்ந்து சூரியனை மறைத்துவிடுமாதலால், எங்கும் ஏக இருட்டாக இருக்கும். எரிமலையிலிருந்து வெளிவரும் கற்குழம்பு பல மைலுக்குப் பரவியோடும். அது சுடினும், வரவரக் குளிர்ந்து பாறையாக மாறிவிடும்.

பூமியின் அடியிலிருக்கும் அக்கினி வெளிப்படுவதற்கு வழி காணுது முட்டித் தாக்கும்போது, பூமியானது அதிரும். அதனைப் பூகம்பம் என்பர். எரிமலைகள் தங்கள் தொழிலை ஆரம்பிக்குமுன், அவ்விடங்களிற் பெரும்பாலும் பூகம்பங்கள் உண்டாதல் இயல்பு. உலகத்தில் முந்நூறு இடங்களில் எரிமலைகள் உள்ளனவெனக் கூறுகின்றனர்.

இம்மலைகள் சாம்பலையும் வெளிப்படுத்துமென்றோம் அல்லவா? அச்சாம்பல் வெகுதூரம் வரை விரைவாக எறியப்பட்டுக் கடலின் அடிப்பாகத்திற் பல படைகளாகப் படிந்திருக்கும். அப்படைகள், கடலில் வந்து படியும் பலவகைப்பட்ட வேறு பொருள்களுக்கும், கீழுள்ள பூமிக்கும் இடையிலகப்பட்டு நெருக்குண்டு இறுகும். அங்ஙனம் இறுகிய சாம்பற் படைகள், பிறகு ஒருகால் எரிமலைகளின் சேட்-

டையால் வெளிப்பட்டுக் கற்பலகைக் குன்றுகளாய்க் கிளம்புகின்றன. எனவே நாம் உபயோகிக்கும் கற்பலகைகள் வெகுநாட்களுக்கு முன், எரிமலையினின்று வெளிவந்த பொருள் என்று தெரிகிறது.

ஒரு சமயம் எங்கேனும் ஓர் எரிமலை உண்டானால், அங்கேயே அடிக்கடி அது திரும்ப உண்டாதல் உண்டு. அங்ஙனம் உண்டாகாத அவ்விடங்களில் மனிதர்கள் வீடு வாசல்களைக் கட்டிக்கொண்டு குடியேறுவார்கள், திடீரென்று அங்கு எரிமலை கிளம்பி மிகுந்த சேதங்களைச் செய்தலுமுண்டு. ஜப்பான் கொஞ்சக் காலத்திற்குமுன், எரிமலையால் அடைந்த சேதத்தைப் பல பத்திரிகைகளிற் படித்திருக்கின்றோம். இட்டாலியிலுள்ள விசூவியஸூம், எட்னாவும் எரிமலைகளிற் பிரசித்தியானவை. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன், இட்டாலி தேசத்திலுள்ள பாம்பி என்னும் அழகிய நகரம் எதிர்பாராது எரிமலைக்கு இரையாகி, இருந்தவிடம் தெரியாமல் புதையுண்டது. அந்நகரம், கொஞ்சகாலத்துக்கு முன்தான் கண்டுபிடிக்கப்பட்டது. அங்குப் பல தெருக்களும், வீடு வாசல்களும் இருந்த விஷயம் நன்கு தெரிய வருகிறது.

பஸிபிக் மகாசமுத்திரத்திற் பல எரிமலைகள் உள்ளன. அவற்றிற் சாண்டுவிச் என்னும் தீவில் இரண்டு எரிமலைகள் உண்டு. அவற்றில் ஒன்று உலகத்திலுள்ள எரிமலைகளிற் பெரிதாம். அதன் கக்குவாயின் சுற்றளவு ஒன்பது மைல்.

எரிமலைகளால் வரும் கேடுகள் ஒருபுறமிருக்க, அவற்றால் வரும் பல நன்மைகளைக் கூறுவோம். மிகுதியும் பருவதங்களில் உற்பத்தியாகிக் கடலிற் சங்கமமாகும் நதிகளால்

பூமியிலுள்ள மண், மணல் முதலியவை கடலிற் கொண்டு சேர்க்கப்படுகின்றன. இங்ஙனம் வெகுநாட்கள் நதிகள் செய்துகொண்டிருந்தால், பூமி முழுவதும் கடலினுள் மறைந்தழியுமன்றோ? அங்ஙனமுண்டாகும் பெரும் சேதத்-தை எரிமலைகள் வேறுவழியிற் போக்குகின்றன. பூமியி-னுள் இருக்கும் நெருப்பு வெளிப்பட வழியின்றிப் பூமி-யைத் தாக்கும்போது பூகம்பம் உண்டாவதோடு, சில சம-யங்களிற் பூமி அநேக மைல் பரப்புக்குச் சமுத்திரத்தின் மட்டத்துக்குமேலே புதுத் தீவுகளாகக் கிளம்புகிறது. பஸி பிக் சமுத்திரத்திலும், வேறு சில இடங்களிலும் தோன்றிய பல தீவுகள் எரிமலைகளாலேயே கிளம்பியவை. அவை இப்-போது மானிடர் இருத்தற்கேற்ற இடமாக இருக்கின்றன.

---

7. அரிச்சந்திரன் அடிமைப்படல்.

அரிச்சந்திரன், இராச்சியத்தை விசுவாமித்திரரிடம் ஒப்பிவித்து, அவரை அரியணைமீது ஏற்றித் தன் மனைவியுட-னும், மகனுடனும் சுக்கிரனுகிய தரகன், பின்தொடர்ந்து வரக் காட்டை நோக்கிப் பிரயாணமானுன். சத்தியகீர்த்தி என்னும் மந்திரி ஒருவன் மட்டும் அவர்களைவிட்டுப் பிரியா-மல் தேவதாஸனைத் தோள்மேல் எடுத்துக்கொண்டு, தொடர்ந்துநடந்தான். மரவுரிஉடுத்து, கால்கடுக்க வழிநடக்-கும் சக்கரவர்த்தியையும், மனைவியையும், மகனையும் கண்டு பிரஜைகள் எல்லாரும் பரிதாபத்தால் கண்ணீர் சொரிந்து கதறி அழுதனர். இந்நால்வரும், நகரும் நாடும் பலகடந்து, ஒரு பாலைவனத்திற் புகுந்து, இளைப்பாற ஆங்கோர்

சோலையில் தங்கினர். அவ்விடத்திற் கிடந்த காய் கிழங்கு-களைப் பொறுக்கிச் சுக்கிரனுக்கு உண்ணக்கொடுக்க, அவன் அவைகளைத் தூர எறிந்து 'பாலும், சோறும் கொணர்ந்தாலன்றி உண்ணேன்' என்றான். பிறகு மந்திரி கெஞ்சிக் கேட்டுக் கொண்டதின்மேல், அவன் சிறிது பசி ஆற்றிக்-கொண்டான். மற்றவரும் பசி தணித்துக் கொண்டனர்.

அப்பால், விசுவாமித்திரர் ஏவலால் மேகங்கள் கல்-மாரி பொழிந்தன. அம்மழைக்கு ஒதுங்க இடமில்லாமல் வாடையால் நடுநடுங்கினர். அரசன் முதலாயினோர் பட்ட பாட்டுக்கு அளவில்லை. பொழுது புலர்ந்ததும் யாவரும் யமுனா நதியில் நீராடிச் சிறிது நேரம் அசைவற இருந்து, அங்கு நின்றும் வழிக்கொண்டனர். செல்லும் நெறிநடுவில், காட்டுத் தீ இவர்களைச் சூழ்ந்து கொண்டது. இதுவும் அந்த இரக்கமற்ற முனிவன் ஏவினதே ஆம். அத்தீயின் பெருக்கத்தைக் கண்டு, அரசன் முதலாயினோர் தனது உயிரின்மேலுள்ள ஆசையை வெறுத்தனர். முதற்கண் மந்-திரி அதிற் பாயச் செல்ல, அவனைத் தடுத்து அரிச்சந்திரன் விரைந்தான். சந்திரமதி, அவனை நிற்கச் செய்து, உம்மை ரக்ஷிப்பது எமது கடைமையே யாதலால், நானே முதலில் தீக் குளிப்பேன்' என்று கூறி, எரியை நோக்கி விரைந்து போனாள்.

இப்படி அவர்கள் துணிந்ததைச் சுக்கிரன் கண்டு, அவர்கள் உறுதியை வியந்து, அரிச்சந்திரனை நோக்கி, 'அரசே! இஃதென்னை! அநியாயமாய்க் குடும்பத்தோடு பரலோகம் போகத் துணிந்துவிட்டனையே! ஏன் இப்படிக் கஷ்டப் படல்வேண்டும்? முனிவருக்குக் கொடுத்த நாட்-டைக் கொடுக்கவில்லை என்று ஒரு வார்த்தை சொன்னாற் போதும். இப்பொழுதே இக்காட்டுத்தீ காணாமற் போய்

விடும். இழந்த நாட்டையும் மீண்டும் பெறலாம்; சுகமாய் வாழலாம்' என்ருன். அரிச்சந்திரன் அவரை நோக்கி, 'ஐயனே! உண்மையினும் உயிர் சிறந்ததோ? இல்லையே! ஆனதால் யாங்கள் உயிரைவிடினும் உண்மையை விடோம்' என்ருன். இப்படிப் பேசிக்கொண் டிருக்கையில், சந்திரமதி அக்காட்டுத் தீயிற் பாய்ந்தாள். பாயவே அவளது கற்புக் கனலுக்கு அஞ்சி அக்காட்டுக்கனல் அவிந்தொழிந்தது. அப்பால் அவர்கள் காசிமாநகரிற் சேர்ந்தனர்.

வாரணுசி வந்ததும், சுக்கிரன், 'காசைக் கொடுத்து விட்டுக் காலெடுத்து அப்பால் வை' என அரிச்சந்திரனைத் தடுத்து உபத்திரவப்படுத்தினன். அதுகண்ட சந்திரமதி, தன் நாயகனை வணங்கி, 'ஆருயிர்த் துணைவரே! பணத்திற்கு வழி இங்கு யாதிருக்கின்றது? எவர் தருவார்! வீணே காலதாமதம் செய்வதென்னை? என்னையும், மகனையும் விற்றுக் கடனைத் தீர்த்துக்கொள்ளும்' என்று கண்ணீர் சொரியக்கதறினள். இம்மொழிகளைக் கேட்டதும், வேந்தன் தீயில் விழுந்த புழுவைப்போல் துக்கம் பொறுக்காதவனய்த் துள்ளித் துடித்தான். பிறகு ஒருவாறு மனந்தேறி வேறு கதியில்லாமையால், அவர்களை விற்கவே துணிந்தான். அவர்கள் தலையின்மேல் புல்லிட்டு, உடனழைத்துக் கொண்டு, அக்காசிமாநகர் வீதியெல்லாம் சுற்றித்திரிந்து இருவரையும்விலைகூறினன். இதனைக்கண்டு, அந்தத்தரகனைத் தவிர அத்தட நகர் முழுவதும் கண்ணீர்விட்டு உள்ளம் கரைந்தது. அப்பொழுது அரசன் முன், காலகண்டன் என்ற ஓர் அந்தணன் தோன்றி, அவன் கேட்ட விலைப்பொருள்களைக் கொடுத்து, சந்திரமதியையும், அவள் பிள்ளையையும் தன் வீட்டிற்குக் கூட்டிப்போய், கொஞ்ச

மும் இரக்கமின்றிக் கடுமையான வேலைகள் பல செய்யும் படி அவர்களை வற்புறுத்தினன்.

அரிச்சந்திரன் பெற்ற விலைப்பொருளைச் சுக்கிரனிடம் கொடுத்து, 'சுவாமி! போய்வருக' எனலும், அவன் 'முனிவர்க்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தாய். நான் உன்னுடன் இத்தனை நாளாக இழுப்புற்றேனே. எங்கே அதற்குக் கூலி? அதைக் கொடுத்துவிட்டுப்போ' என்று சொல்ல, வேந்தன், 'நியாயந்தான்; தருகிறேன்' என்று சொல்லிவிட்டு, சத்தியகீர்த்தியை நோக்கி, 'இந்த அந்தணர் கூலிகேட்பது உசிதமே. ஆனதால், நீ என்னை விலைக்கு விற்று இவருக்கும் பொருளைக்கொடு' என்றான். எனலும், மந்திரி அரிச்சந்திரனை விலைகூறி ஆவண வீதியெல்லாம் கடக்கலாயினன். அப்பொழுது வீரபாகு என்னும் ஒரு பறையன் அவர்கள் முன் வந்து, அரிச்சந்திரனை விலைக்குப் பெற்று, அவனை அழைத்துக்கொடு தன்னிடம் சார்ந்தான்.

தரகுப் பொருளைப் பெற்றுக்கொண்ட சுக்கிரன் சனியொழிந்ததுபோல், அவர்களை விட்டு விலகினன். சேரி சென்ற வீரபாகு, ஆங்குள்ள மயானத்தை அரிச்சந்திரனுக்குக் காட்டி, 'அடா! அடிமையாள! நீ இங்கேயே இருந்து எரிக்கவரும் பிரேதத்துக்குக் காற்பணமும், முழத் துண்டும், வாய்க்கரிசியும் வாங்கு. இவைகளிற் பணத்தையும் துண்டையும் எனக்குக் கொடுத்துவிடு. வாய்க்கரிசியை மாத்திரம் நீ எடுத்துக்கொள். இவ்வேலையில் அசட்டையாயிராதே' என்று சொல்ல, அவனும் அவ்வேலையைச் சாக்கிரதையாய்ச் செய்வதாக ஒப்புக்கொண்டு, ஆங்கோர் குடிசையிட்டு, அதிலிருந்து அந்த மயானத்தைக் காத்து வந்தனன்.

8. சந்திரமதி துன்புறல்.

இங்கு இவன் செய்தி இவ்வாறாக, காசியிற் காலகண்டன் தயா தாக்ஷண்யம் என்பன சிறிது மில்லாமல், சந்திரமதியை, வீடு வாசல்களைச் சுத்தம் செய்யவும், நெற்குத்தவும், மற்றுமுள்ள இழிவான பணிகளைச் செய்யவுமாக அடுத்துநின்று தூண்டிக் கஷ்டப் படுத்திக்கொண்டே வந்தான். தேவதாஸனை மாடு மேய்க்கவும், கொல்லை காக்கவும், ஒத்த சிறுரோடு காடு சென்று சமித்து, தருப்பை, விறகு முதலாயின கொண்டுவரவும் ஏற்பாடு செய்திருந்தான். ஒரு நாள், அவ்வேதியன் ஏவலால் தேவதாஸன் சிறுவர்களுடன் வனத்திற்சென்று சமித்து, விறகு மாவிலை முதலானவைகளை எடுத்துச் சுமைசெய்து, தலைமேல் தாங்கிக்கொண்டு வருகையில், ஒரு புதரில் பசுமையான தருப்பைப்புல் வளர்ந்திருப்பது கண்டு, அதனைக் கொய்யும் பொருட்டு அடுத்துச் செல்லுகையில், விசுவாமித்திரர் தூண்டுதலால் இங்குவந்து மறைந்திருந்த ஒருநாகம் அவன் காலில் தீண்டிற்று. தீண்டவே அவன் அலறிக்கொண்டு கீழே விழுந்தான். அடுத்து வந்த பிள்ளைகள் அவனை வந்து பார்த்து, பாம்பால் அவ்ன் இறந்து பட்டதைக்கண்டு, மிக வருந்தி ஊரை நோக்கிச் சென்றனர்.

மாலைப் பொழுதானதும், மகன் வாராமையைக் கண்ட சந்திரமதி, உள்ளம் உருகக்கண்ணீர் ததும்பத் தலைவாசலில் வந்து நின்றுகொண்டு, சிறுவர் வருகையை எதிர்பார்த்திருந்தாள். அப்பொழுது வந்துகொண்டிருந்த பார்ப்பனச் சிறுவர், சந்திரமதியைக்கண்டு, விழிநீர் பொழிய, நாக்குழற, அழுகுரலுடன், உன்னுடைய மகன் தருப்பை கொய்-

யும் பொழுது அரவுதீண்ட இறந்தான். அவனை எடுத்து ஆங்கோர் ஆலமரத்தடியில் இட்டிருக்கின்றோம்' என்று அதற்குரிய வழிகளையும், குறிகளையும் கூறிச் சென்றனர். இதனைக் கேட்டதும், சந்திரமதி இடி விழப்பெற்ற பூங் கொடிபோல் கீழேவிழுந்து, சோகத்தீயால் வெந்து மூர்ச்சை போனாள்; பிறகு தெளிந்தாள். 'ஐயோ! நாடிழந்தும் நாயகனை இழந்தும் மகனே! உன் முகத்தைப் பார்த்து உயி-ரைவிடா திருந்தேனே! நீயும் என்னை இவ்வாறு தவிக்க விட்டனையே!" எனப் பலவாறு புலம்பினாள்.

அப்பால் அவள் தன் எஜமானாகிய அந்தணனிடத்தில் நடந்ததைச் சொல்லி, 'இறந்த மகனை எடுத்து அடக்கம் செய்துவர உத்தரவு கொடுக்க வேண்டும்' என்று அழுது கேட்டுக்கொள்ள, அதற்கவன் 'அடி நீலி! என்ன பாசாங்கு பண்ணுகிறாய்? உன்மகன் இறந்தால் உனக்கென்ன நஷ்டம்? என்னுடைய பணமல்லவோ பாழாகப்போயிற்று. நீ எங்கும் செல்லக் கூடாது. அப்படி உனக்குச் செல்ல வேண்டி யது அவசியமா யிருக்குமானால், செய்யவேண்டும் வேலைகள் அனைத்தையும் செய்து முடித்துவிட்டுத் தொலைந்து போ' என்றான்.

அப்பால் சந்திரமதி, வேலைகளை யெல்லாம் செய்து முடித்துவிட்டுக் கொள்ளிக்கும் விள்ளாத அந்த நள்ளிரவில் காலால் வழிதடவி அந்தணப்பிள்ளைகள் சொன்ன குறிப்-பின்படி காடுபுகுந்து, ஆலமரத்தடியிற்கிடந்த மகனைக் கண் டனள்; வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டாள்; கோவென நெடுங்குரல் பாய்ச்சி அழலானாள்.

பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து
பசியால் அலைந்தும் உலவா
அனியாய வெங்கண் அரவால் இறந்த
அதிபாவம் என்கொல் அறியேன்?
தனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே!
இனியாரை நம்பி உயிர்வாழ்வம் என்றன்
இறையோனும் யானும் அவமே? (1)

நீராள வாவி செறிநா டனைத்தும்
நிறைமாத வற்கு தவினும்,
பாராளு நீர்மை தொடர்பற்ற தன்று;
படியாளும் எந்தை முடியில்,
காராளர் ஏர்கள் கடவோசை ஓய்வில்
கன்னேசி நாடதனைமேல்
ஆராள வல்லர்? அவமே வனத்தில்
அரவால் இறந்த மகனே! (2)

நல்லோர் வகுந்த முறையாம் அறங்கள்
நாலெட்டில் ஒன்று குறையேம்.
இல்லாரை அற்பம் இகழேம் இறுக்கும்
இறையின்றி யேற உகவேம்.
சொல்லோ மறுத்து முரையோம் உரைத்த
துறவோர்கள் புத்தி கடவோம்.
எல்லோர் தமக்கும் இனிதே விளைப்பம்
எதாக வந்த திதுவே? (3)

இங்ஙனம் பலவாறு புலம்பினுள். பொழுது விடிந்தாற் காலகண்டன் கண்டிப்பானே என்று நினைந்து பயந்து தகனம் செய்யும்பொருட்டு இறந்த மகனைத் தோளின் மேற் போட்டுக்கொண்டு மயானத்தை நோக்கிப்போனுள். இடை-

வழியிற் பேய்களும், பூதங்களும் இவளை வழிமறித்துப் பிணத்தைப் போடுபோடென அதட்டி உரப்பின. என்றாலும் சந்திரமதி சிறிது திடங்கொண்டு நடந்து பாடையும், எலும்பும், பறித்தெறிந்த பூமாலைகளும், புகையும், பிணநாற்றமும் மிகுந்திருக்கும் சுடலையை அணுகினாள்.

அங்குக் கிடந்த குறைக்கொள்ளிக் கட்டைகளைப் பொறுக்கி, அடுக்கி அதன்மேல் பிள்ளையைக் கிடத்தி, 'அப்பா மகனே! என்னையும், உன் தகப்பனையும் பரிதவிக்க விட்டனையே. நீ எனக்குச் செய்யவேண்டிய கடமையை நான் உனக்குச் செய்யும்படி செய்துவிட்டனையே. இனி எங்களுக்கு எள்ளும், நீரும் இறைப்பார் யார்? என்து எண்ணம் எல்லாம் பாழாயினவே' என ஏங்கியேங்கி அழுதாள். அந்த அழுகுரலைக் கேட்ட அரிச்சந்திரன், சந்திரமதியின் பக்கத்தில் வந்து, 'நீ யார்? இந்த மை இருளில் ஒருவரு மறியாதபடி கள்ளத்தனமாய்ப் பிள்ளையைத் தகனம் செய்கிறாய். கொடுக்க வேண்டிய பணமும், துண்டும் வாய்க்கரிசியும் எங்கே?' என்று அதட்டி அப்பிணத்தைக் காலால் எற்றிக் கீழே தள்ளினான்.

இது கண்ட சந்திரமதி அடக்கமுடியாத சோகத்தோடு அவனைப்பார்த்து, 'ஐயா! யான் அறவும் பாவி; யாதுமற்றவள்; யாரும் அற்றவள். யான் ஒரு அடிமை. எனக்கு இவன் ஒரு மகன். பாம்பு தீண்டி இறந்தான். சுடும்பொருட்டு இங்கு வந்தேன். உனக்குக் கொடுக்க என்னிடத்தில் ஒன்றுமில்லை. தயைசெய்து தகனஞ் செய்துகொள்ள உத்தரவு கொடுக்க வேண்டுகின்றேன்.' என்று அவனைக் கெஞ்சிக் கேட்டு வணங்கினாள்.

இப்படி அவள் வணங்கும்பொழுது, அவள் கழுத்தில் பளபள என்று மின்னிக்கொண்டிருக்கும் தெய்வீகத் திரு மங்கலியத்தைக் கண்ட அரிச்சந்திரன், அவளை நோக்கி, 'ஏ கள்ளி! என்னையோ நீ ஏமாற்றப்பார்க்கிறாய்? உன் கழுத்தில் சொலித்துக்கொண்டிருக்கும் தாலி விலைமதிக்க முடியாததா யிருக்கின்றதே! அதனை விற்றுப் பணத்தையும், துண்டை யும் கொண்டுவா' என்றான். இதைக்கேட்டதும் சந்திரமதி திடுக்கிட்டு, 'அந்தோ! இதென்ன கொடுமை! தேவ ரகசிய-மான இத்திருமங்கிலியத்தை ஒரு பறையனும் பார்க்கும்படி ஆயிற்றே! இப்படியும் ஒரு கெடுகாலம் உண்டோ?'' என்று சொல்லி ரோதனம் செய்கையில், அரிச்சந்திரன், அவளைத் தன் மனைவி என்றும், இறந்துபட்டவன் மகனென்றும் துணிந்து, கண்ணீர் சொரியக்கதறி அழுதான். சந்திரமதி-யும் அப்படி அழுவானைத் தன் நாயகன் எனவும் அவன் ஒரு பறையனுக்கு ஆட்பட்டுவிட்டான் எனவும் தெரிந்து சோக சாகரத்திற்பட்ட ஒரு துரும்பைப்போல் தத்தளித்தாள். அவ்-விருவரும் அக்காலத்தி அடைந்த வருத்தத்திற்கோர் அளவில்லை.

---

9. புகையிலை.

புகையிலை என்பது ஒருவகைச் செடியின் இலையே. உலர்ந்த இலை, புகை நிறமாயிருத்தலாலும், புகைத்து உப யோகிப்பதாலும் இதற்குப் புகையிலை என்ற பெயர் வந்தது. இது உஷ்ணதேசங்களில் உண்டாகும் புன்செய்ப் பயிர்க-ளில் ஒன்று. ஆதியில் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்-கும் பிறநாடுகளுக்கும் இதுபரவிற்றென்று சொல்லுகிறார்கள்.

இது இப்போது ஆசியாவில் இந்தியா, இலங்கை, சீனம், ஜாவா, முதலிய இடங்களில் அதிகமாகப் பயிராகின்றது. சென்னை மாகாணத்தில் கோதாவரி கிருஷ்ணா என்ற நதி தீரங்களிலும், மதுரை, திருச்சிராப்பள்ளி என்ற ஜில்லாக்களிலும் உண்டாகிற புகையிலை மிகவும் சிறந்ததாகக்கொள்ளப்படுகிறது.

புகையிலைப்பயிர், அதுவளரும் தரையின் தன்மைக்குத்தக்கபடி நான்கடி-முதல் ஒன்பதடிவரை ஓங்கிவளரும். இதன் இலை இயற்கையில் பச்சைநிறமுள்ளது. அவற்றுள் வேரையடுத்தவை பெரியனவாயும், மேற்பாகத்திலுள்ளவை சிறியனவாயுமிருக்கும். அதிகப்பெரிய இலை மூன்றரை அடி நீளமும், ஒன்றரையடி அகலமும் உள்ளது. இச்செடியின் புஷ்பமானது சிறிதாயும், மஞ்சள் வருணம் கலந்த வெண்ணிற-

மாயும், மணமுள்ளதாயும் இருக்கும். இப்பயிரின் இலை கார மாயும் அருவருக்கத்தக்க ஒருவகை நாற்றமுள்ளதாயும் இருந்தாலும், சிலர் இதைப் பக்குவப்படுத்திப் பலவேறு விதங்களில் உபயோகிப்பதால், இதைப்பயிராக்குகிறார்கள்.

புகையிலைச் செடியைப் பயிரிடும் முறைமையை அறிவோம். இதனைப் பயிரிடுவோர் சித்திரை, வைகாசி மாதங்களில், பண்படுத்திய பாத்திகளில், விதைகளைத்தூவி நீரிறைப்பார்கள். நாற்றுக்கு நன்றாக நீர் பாய்ச்சவேண்டும். இது கிருஷிகர்களுக்கு நன்குதெரியும். மழைபெய்தவுடன், முன் உழுது எருவிட்டுப் பண்படுத்திய புலத்தில் மூன்று அல்லது நான்கடிக்கு ஒரு குவியலாக மண்ணைக்குவித்து. அவை ஒவ்வொன்றிலும் நாற்றைப்பிடுங்கி ஒவ்வொன்றாக நடுவார்கள். பயிர் வளரும்போது, சரியானவிதம் தண்ணீர் பாய்ச்சிக் களையைக் களையாவிட்டால் இப்பயிர் நல்ல பலனைக் கொடாது.

புகையிலைச்செடியில் புஷ்பங்கள் உண்டாகுந்தோறும் அவற்றைக் கிள்ளிவிடுவார்கள். அங்ஙனம் செய்வதால், அவ்விடத்தில் புது இலைகள் உண்டாகும். ஆயினும் விதைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் செடியிலுள்ள மலர்களைக் கிள்ள மாட்டார்கள். செடியின் இலைகள் முற்றி அறுக்கிற காலத்தில் வெண்மை நிறமாகமாறும். அப்போது கிருஷிகர்கள் அச்செடியை அரிந்து, அங்கேயே இரண்டு மூன்று நாட்கள் இலேசாக உலர்த்துவார்கள். அப்பால் அவ் இலைகளை ஓரிடத்தில் குவியலாகவைத்துப் பாய்களால் மூடிவைப்பார்கள். இப்படிச் சின்னாட்கள் சென்றதும், அந்த இலைகளை எடுத்து நிழலில் ஆற்றி வியாபாரச் சரக்காக அனுப்புவார்கள்.

நமது நாட்டாரிற் சிலர் இப்புகையிலையை வறுத்துப் பொடியாக்கி நாசிகளில் உறிஞ்சுகிறார்கள். சிலர் தாம்பூலம் தரிக்கையில் இதனை வாயிலிட்டு அதுக்கிக்கொண்டு எச்சிலை அடிக்கடி புறத்தே உமிழ்ந்துவிடுகிறார்கள். வேறுசிலர் இவ்-இலையைச் சுருட்டாகவும், பீடி, சிகரட்டுகளாகவும் செய்து புகை பிடிக்கிறார்கள். இவ்விலையை இட்டுக் காய்ச்சியநீரைச் சிலவகைப் பூச்சிகள்பற்றிய தாவாரங்களின்மேல் தெளித்-தால் அப்பூச்சிகள் அழிந்துபோம்.

புகையிலையை உபயோகிப்பதால் உண்டாகும் கேடுகள் மிகப் பல. கஞ்சா, அபின் முதலியவற்றைப்போல இதுவும் மயக்கத்தைக்கொடுத்து மதியைக் கெடுத்துவிடுமாதலால், முன்பழகாதோர் இதை வாயிற்போட்டு உமிழ்நீரை விழுங்-கினால் சிலவேளை மரணமாவதுமுண்டு. புகையிலைப்பொடி-யை மூக்கில் நிரப்புவோர், இயற்கையில் தாங்களடைந்த பஞ்சேந்திரியங்களில் ஒன்றின்பயனை அந்தோ! பெரும்பா-லும் இழந்தவர்கள் ஆகிறார்கள். எங்ஙனமெனில், பொடி போடுவோர்க்கு அப்புகையிலையின் நாற்றம் தெரிவதன்றி, மற்ற நறுமணங்கள் நன்குதெரியா. சுவாசாசயத்திற்கும் இதனால் கேடு உண்டாகிறது. அன்றியும், பொடியில் நாசியை அடைப்பவர்கள் ஒருவகையில் அசுத்தத்திற்கு உறை-விடம் ஆவார்கள்.

இந்த இலையை உபயோகிக்கையில், அடிக்கடி உமிழ் நீரை வெளியில் துப்பவேண்டியதிருக்குமாதலால், அஜீரண-மும், நாவரட்சியும், நீர்வேட்கையும் உண்டாகும். அன்றி-யும் நரம்புகளும், இரத்தாசயமும் இதனை உபயோகிப்பதாற்

பலகேடுகளை அடைந்துவிடுகின்றன. இது இளமையிலேயே முதுமையை வரவழைத்து விடுகிறது. புகையிலையை உபயோகிப்போர் எப்போதும் மனஊக்கம் குன்றியே இருப்பார்களென்று உடற்கூறு சாத்திரங்களை உய்த்துணர்ந்த வைத்தியர்கள் துணிந்து உரைக்கிருர்கள்.

புகையிலையாற் செய்யப்படும் பொருள்களை வாங்குதற்குச் செலவிடும் பொருள் வீண்பணமே ஆகும். அதை உபயோகிப்பதால், எட்டுணையும் நமக்கு நன்மை உண்டாவதில்லை. ஆயினும் பழகின தோஷத்தாற் பலரிதை உபயோகிக்கிருர்களே தவிர வேறில்லை.

மாணவர்களே! நீங்கள் உங்கள் பகைவனைப்போலெண்ணிப் புகையிலையைப் புறக்கணித்துவிட்டால், தேகாரோக்கியமும், மனவலிமையும், சிக்கனமும், நீடிய ஆயுளும் பெற்று வாழ்ந்திருப்பீர்கள்.

மருந்தை முறித்துவிடும் வாய்வாளச் செய்யும்
திருந்து பலவீனம் சேர்க்கும்—பொருந்துபித்தம்
உண்டாக்கும் மார்படைக்கும் ஓது புகையிலையைக்
கண்டார்க்கும் ஆகாது காண்.

என்பது பதார்த்தகுண சிந்தாமணியார் துணிபு.

10. பூண்டி அரங்கநாத முதலியார்.

பூண்டி அரங்கநாத முதலியார், பூண்டி சுப்பராய முத-லியாரின் குமாரர். இவர் சென்னையிலே 1847-ம் வருஷம் பிறந்தவர். இவரது தந்தை சென்னையிலும், அவிநாசியிலும் மதராஸ் ரெயில்வேயில் உத்தியோகம் பார்த்தவர். அரங்கநாத முதலியார், குழந்தையாக இருக்கும்பொழுது, அவர் உயிருக்கே மோசமான அதிபயங்கர சம்பவமொன்று நிகழ்ந்தது. ஒருநாள் சில கொள்ளைக்காரர் ஒருங்குகூடி, முதலியார் வீட்டிற் புகுந்து, அங்கிருந்த எல்லாப்பொருள்-களையும் கொள்ளையிட்டும் திருப்தியடையாமல், மறைத்து வைத்திருக்கும் பிறவற்றையும் காட்டவேண்டுமென்று அச்சுறுத்த, அச்சுப்பராய முதலியார் தாம் ஒளித்துவைத்திருந்த மகனைத்தவிர வேறேதுமில்லையென்று அவனிருந்த இடத்தைக் காட்டினர். சிறு குழந்தையாக இருந்தாலும், முதலியார் கன்னெஞ்சம் படைத்த அக்கள்வர்களின் மனத்தை, கரும்பினுமினிய தமது மொழிகளாற் கனியச் செய்து உயிர் தப்பினர்.

சிறிது ஆங்கிலமே கற்ற சுப்பராய முதலியார் தம்மால் இயன்றவரை, அப்புத்திரனுக்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் ஆசையுண்டாக்கி, அதனை மென்மேலும் வளர்த்து வந்தனர். பதின்மூன்றுவது வயதில், தற்போதுள்ள 4-வது பாரத்துக்குச் சமமான ஒரு வகுப்பிற்படித்து, அறுபது ரூபா உபகாரச் சம்பளம் பெற்று, மறுவருஷமே, மெட்ரிகுலேஷன் வகுப்பிற் சேர்ந்தார். 'விளையும் பயிர் முளையிலேதெரியும்' என்றதுபோல அவரது அறிவு அக்காலத்திலேயே

விளங்கிற்று. கணக்கிலும், ஆங்கிலத்திலும் அவர் பல பரிசுகள் பெற்றனர். அவற்றில் முக்கியமானது, ராஜா. சர். தி. மாதவராவ் அவர்கள் அளித்த பரிசே.

இராஜதானி முழுதிலும், 1862-ல் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் முதல் தரத்தில் முதல் மாணவராகத் தேறி எட்மண்ட் தாம்ஸன் என்பவரால் அபிமானிக்கப்பட்டுச் சென்னை துரைத்தனகலாசாலையில் சேர்த்துக்கொள்ளப்பெற்றனர். அங்கு ஆங்கிலச் செய்யுள் நூலிலும், தத்துவ சாஸ்திரத்திலும், கணக்கிலும், தமிழிலும் இவர்க்கு மிஞ்சினவர் இல்லையெனப் பெயர் பெற்ருர். 1865-ஆ பி. ஏ. பரீக்ஷையில் முதல் வகுப்பில் முதன்மையாகத் தேறித் திருவாங்கூர் மகாராஜா வருஷந்தோறும் அளித்த பரிசாகிய ரூ. 300 பெற அருகர் ஆயினர். அவரது சாமர்த்தியத்தால் ஆங்கில உபாத்தியாயர்களும், பிறரும் அவர் கற்றுத் தேறிய துரைத்தன கலாசாலையிலேயே கணிதபோதகராக நியமித்தார்கள்.

1870-வருஷம் அவர் எம். ஏ. பரீக்ஷைதேறி 1872-ஆ சர்வகலாசாலை அங்கத்தினருள் ஒருவர் ஆயினர். 1875-ஆ முதல் தமது முடிவுகாலம்வரை, அவர் சிண்டிகேட்மெம்பராக இருந்து எண்ணிறந்த நன்மைகள் புரிந்தார். இவர் சம்பந்தப்படாத சங்கங்களாவது, ஆலோசனைச் சபைகளாவது இரா என்றால், இவரது பெருமையை விரித்துரைக்கவும் வேண்டுமோ? 1890-ஆ சென்னை துரைத்தன மொழிபெயர்ப்பாளராகி அவ்வருஷமே, சர்வகலாசாலைப் பட்டதாரிகளுக்கு உபதேச மொழிகள் உரைக்கும் உயர்வைப் பெற்ருர். இந்தப் பிரசங்க விஷயத்தை அறிந்து வியவாத ஐரோப்பியரும், இந்தியரும் இல்லை. அதற்கிரண்டு வருஷங்

களுக் கெல்லாம் சென்னை ஷேரிப் ஆனார். அப்போது ராவ் பஹதூர் என்ற பட்டம் அவருக்குக் கிட்டியது. அவரது ஆக்கத்தைக்கண்டு பொறாமையடைந்த கூற்றுவன், அவரை அதிவிரைவில், இவ்வுலகினின்றும் பிரித்து விட்டனன். திடீ-ரென்று பிணிவாய்ப்பட்ட இம்முதலியார் நான்கே தினங்-களில் நல்லுலகம் பெற்றனர்.

வருவாயுட் கால்பாகத்தை வழங்கிப் பல மாணவர்க்கு உபகாரச் சம்பளமாகவும், பரீக்ஷைப் பணமாகவும் தந்த-னர். அவரது நிரம்பிய தமிழ்ப் புலமைக்கு அவரியற்றிய கச்சிக்கலம்பகம் ஒன்றே போதிய சான்று. தமிழ்ப் புலவர்-களுக்கும், தேசத்தார்களுக்கும், பிறருக்கும் அவர் செய்த மஹோபகாரம், அவரது பிரிவாற்றாத மகா மஹோபாத்தி-யாய சாமிநாத ஐயர் அவர்களால் பாராட்டப்பட்டிருக்கிறது.

---

11. நத்தை.

நமது வீடுகளிலும், தோட்டந் துரவுகளிலும், நீரின்-கரைகளிலும் நத்தைகள் ஊர்ந்து செல்வதை அடிக்கடி-பார்த்திருப்பீர்கள். ஆயினும் நம்மில் அநேகர் அதைப்பற்றிய விஷயத்தை ஆராய்ந்திருப்பதில்லை. பிராணிகள் யாவும் முதுகெலும்புள்ளன, இல்லன என்னும் இரு பிரிவினுள் அடங்குமென முன் வகுப்புகளிற் படித்திருக்கிறீர்கள் அல்-லவா? நத்தை முதுகெலும்பு இல்லாதது. அது முழுதும் தசையால் ஆகிய சரீரத்தை உடையது. ஆயினும் எலும்பின் நிலையில் அதன் முதுகில் முருக்குகளுடன் கூடிய ஓடு இருக்கிறது. அந்த ஓட்டினுள்ளேதான் நத்தை அடங்கி-இருக்கும். நத்தை வளர்ந்து பருக்குந்தோறும் அதன்-

முதுகிலிருக்கும் ஓட்டில் புது அடுக்குகள் உண்டாகும். நத்தையின் தேகத்தில் உண்டாகும் ஒருவகைப் பசைப் பொருளும், அது உண்ணும் ஆகாரத்திலுள்ள சுண்ணாம்புச் சத்தும் சேர்ந்து இங்ஙனம் ஓடாகிறது. நத்தை இளைப் பாறுமிடமும், அபாயம் அணுகுங்காலத்தில் அரணாக அமைவதும் அந்த ஓடேயாகும். அவ்வோட்டுக்கு நத்தைக் கூடு என்று பெயர்.



அதன் உருவத்தை மேலுள்ள படத்திற் பாருங்கள். அதன் தலை வட்டமாய் நான்கு கொம்புகளோடு கூடியுள்ளது. அவற்றுள் மேலுள்ள இரண்டு கருவிகளும் பெரியனவாகவும், கீழுள்ளன சிறியனவாகவும் அமைந்துள்ளன. இவை நான்கும் தசையால் ஆனவை. நத்தையின் கண்கள், பெரிய கொம்புகளின் நுனியில் உள்ளன. நமக்குக் கையும், பாம்புக்குப் பிளந்த நாக்கும் உணர்ச்சிக் கருவிகளாக உதவுவனபோல, நத்தைக்குச் சிறிய கொம்புகள் போன்ற பரிசினிகள் பயன்படுகின்றன. அவற்றின் உதவியாலேயே அது தன் வழியைத் தெரிந்துகொண்டு செல்லுகின்றது. அதன் பரிசினிகளைத் தொடுந்தோறும், அவற்றை அது சுருக்கி உள்ளிழுத்துக்கொள்ளும். கழுத்திலுள்ள பிளவுகளே சுவாசிக்கும் உறுப்புக்கள்.

நத்தைகளுக்குக் கால்களேனும், நகங்களேனும் கிடையா. அதன் அடிப்புறத்திலுள்ள தோலால், முன் பகுதியை நீட்டுகையில் பின்பகுதியைச் சுருக்கியும், திரும்ப முற்பகுதியைச் சுருக்கும்போது பிற்பகுதியை நீட்டியும் ஊர்ந்து செல்லுகிறது. நகர்ந்துபோகும்போது உற்று நோக்கினால், அது சென்ற தடத்தில் வெண்மை நிறமான ஒரு பொருளைக் காணலாம். அது தன்னிடத்துக் கசியும் ஒருவகைப் பசைப் பொருளாற் பூமியைப் பூசிக்கொண்டே ஊர்ந்து செல்வதால் அது உண்டாவது. அதனாலேயே நத்தை இலகுவாய் ஊர்ந்து செல்லும் தன்மை பெற்றிருக்கின்றது. வேனிற் காலத்தில் அந்த வழுவழுப்பான பொருள் விரைவிற்காய்ந்து விடுமாதலால், நத்தை அதிகமாக இரவுகளிலும், பனிக்காலத்து அதிகாலையிலும், கார்காலத்தில் எக்காலமும் அதிகமாக ஊர்ந்து திரிகின்றது.

நத்தைக்குத் தடித்த மேலுதடும், படத்திற் காணப்படுவனபோல், இரண்டாயிரம் சிறு பற்கள் நிறைந்த நாக்குமுண்டு. இந்தப்பிராணி சாகபக்ஷணியாதலால், வனங்களிலும் தோட்டங்களிலுமுள்ள தாவரங்களை முற்கூறிய பற்களால் அரித்தரித்து வெகுவிரைவாக நாசப்படுத்திவிடும். தோட்டங்களைத் தொலைக்கும் சத்துருவென்று இதைச் சொன்னாலும் பொருந்தும். நிலத்தில்வாழும் தன்மை இதுவாக, நீரிலேயே வாழும் நத்தை அதிலுள்ள அழுக்குகளைத் தின்று வசிக்கின்றது.

சத்துருக்களைக் காணும்போது, நத்தையானது தன் உடல் முழுவதையும் ஓட்டினுள் அடக்கிக்கொள்ளுமென்று

முன்னரே கூறினேம். சிலவேளைகளில், அது இருக்குமிடத்திற்கும், அதன் ஓட்டிற்கும் வேறுபாடு காணமுடியாது. நத்தைக்குக் கொடிய சத்துருக்கள் பக்ஷிகளே. நத்தை ஓட்டிற்குள் பதுங்கியிருந்தாலும், அதை அவை அலகாற் குத்தி உள்ளிருக்கும் ஊனை உட்கொள்ளும்.

---

12. அரிச்சந்திரன் மேம்படல்.

பலவாறு துன்புற்ற அரிச்சந்திரன், மனைவியை நோக்கி, 'அன்பிற்கினியாய்! இப்பொழுது நாம் அனுபவிப்பதெல்லாம் உண்மைத் தெய்வத்தின் சோதனையென்றே நினைப்பாயாக. மேலும் விதிவழி வருவதை எவராலும் தடுக்கமுடியாது. நடப்பது நடந்தேதீரும். ஆதலால் நீ இப்பொழுதே அந்தப் பார்ப்பானிடம்சென்று காற்பணமும், ஒருதுண்டும் வாங்கிவா. இவ்விரண்டும் எனது யஜமானனைச் சேர்ந்தன. வாய்க்கரிசி எனக்குரியது. அது நீ கொண்டுவரவேண்டாம்' என்றான். அவளும் அவ்வாறே பெற்றுவரக் காசிப்பட்டணத்தை நோக்கிப் போனாள்.

இடைவழியிற் காசிராஜன் அரண்மனையிற் கொள்ளையிட்டு, அவனது சிறுவனையும் கொன்று, தூக்கிக்கொண்டுவந்த சில கள்வர், அவள்மேல் அக்குழந்தைப் பிணத்தை எறிந்துவிட்டோடினர். அப்பிணம் தன் மகன் களேபரம் போலிருந்தபடியால், அதனைக்கண்ட சந்திரமதி, 'ஹா! ஹா! மகனே! இறந்த பிறகும் உனக்கு இத்துணைத் சங்கடமா?' என்று பலவாறு புலம்புகையில், ஊர்க்காவலர், அவ-

ளையும், அவள் கையில், இறந்த அரசகுமாரன் இருத்தலை-யும் பார்த்து, அவளே கொலைபாதகி எனத் துணிந்து, கட்டி இழுத்துக் கொண்டுபோய் அரசன்முன் நிறுத்தினர். உண்மை அறியும் ஆற்றல் இல்லாத அவ்வேந்தன் அவளைக் கொலை செய்யும்படி உத்தரவு செய்தான். உடனே அவள் வீரபாகுவினிடம் ஒப்புவிக்கப் பட்டாள்.

அவனும் தனது அடிமையாளனாகிய அரிச்சந்திரனிடம் அவளைக்கொண்டுபோய்விட்டு, 'இவள் நம் அரசகுமாரனைக் கொன்ற படுபாவி யாதலால், இவளை வெட்டி விடும்படி நம் காவலர் நமக்கு உத்தரவிட்டிருக்கின்றார். ஆதலால், நீ இவ-ளைக் கொலைக்களம் கொண்டுபோய் வெட்டிவிடு, தாமதியா-தே' என்றான். அவனும் அவ்வாறே செய்வதாய்ச் சொல்லி-விட்டு, அவளை அழைத்துக்கொண்டு கொலைக்களஞ் சென்றான்.

அவ்விருவரும் அப்பொழுது முன்னிலும் பன்மடங்கு அதிகமான துக்கத்தால் வருந்தினர். தமதுவிதியையெண்ணி வெறுத்தனர். இப்படி இவரிருக்கையில், திடீரென விசுவா-மித்திரர் அங்குவெளிப்பட்டு, 'அடா! அரிச்சந்திரா! என்ன செய்ய எத்தனஞ்செய்கின்றாய்? இல்லாளைக்கொல்லத்துணிந் தவரை யான் எங்கும் கண்டதில்லை. இப்பொழுது வெட்டி-னால் இவளை இனி எப்பொழுது காண்பாய்? இஃதென்னமதி-யீனம்? இனியாவது யான் சொல்வதைக் கேள். எனக்குக் கொடுத்த நாட்டை மாத்திரம் கொடுக்கவில்லை என்று ஒரு வார்த்தை சொல். இறந்த மகனையும் பிழைப்பிக்கின்றேன். மனையாளும் கொலைக் குற்றத்தி னின்றும் நீங்குவள். அர-சாட்சியையும் அளிக்கின்றேன்' என்றார்.

இவைகேட்ட அரசன், 'முனிவரே! என்ன சொல்லுகிறீர்? அற்ப வாழ்க்கையை உடைய இவ்வுடலுக்கு வரும் இன்பத்தை நம்பி, அழியாத ஆனந்தத்தை அளிக்கவல்ல சத்தியத்தை ஒரு பொழுதும் யான் கைவிட மாட்டேன். பொய்ம்மையால் வராத தீமையும், மெய்ம்மையால் வராத நன்மையும் உளவேயோ? எனக்குரிய செல்வங்களை யெல்லாம் இழந்தேன். இனிக் கிடைப்பதான வீட்டின்பத்தை இழக்க நேர்ந்தாலும் சத்தியவிரதத்தினின்றும் ஒருபொழுதும் தவறவே மாட்டேன்' என்றனன்.

இவ்வாறு அரசன் கூறியவெல்லாம் கேட்ட விசுவாமித்திரர், மறுமொழிகூற வாயெழாதவராய் அப்பாற்பட்டு ஓரிடத்திலிருந்து, தான்முன் தேவேந்திரன் சபையிற்செய்த சபதத்தையும், அது நிறைவேறாது போனதையும் நினைந்து நினைந்து பச்சாத்தாபப் பட்டுக்கொண்டே இருந்தார்.

இவர் இவ்வாறிருக்கையில், அரிச்சந்திரன், சந்திரமதியைக்கட்டிய கட்டுடன் கொலைசெய்யக்கொணர்ந்து நிறுத்தி, 'பெண்கள் திலகமே! கல்யாண காலத்தில் எந்தக் கையால் உன்னைப் பற்றினேனோ, அந்தக் கையிலேயே உன்னைக் கொலைசெய்ய வாளேந்தி நிற்கின்றேன். என்னிலும் ஒரு பாவி எவ்விடத்தில் இருக்கின்றான்? என்னை நீ அடைந்து பெற்றபேறு இதுதான் போலும். என் அன்பே! இனிக்காலதாமதம் செய்யாமல் உன்னிஷ்ட தெய்வத்தை வணங்கிக் கிழக்கு நோக்கித் தலை சாய்த்துக்கொண்டு நிற்பாயாக' எனலும், சந்திரமதி அவனை வணங்கி, 'எனது ஆருயிர்த் தலைவரே! வருந்தற்க. எல்லாம் வினையின் விளைவே. தாங்

கள் என்னை இழந்துவிடலாம். இழக்கக் கூடாதது உண்மை ஒன்றேயாம்' என்றுரைத்துத் தலைசாய்த்து நின்றனள்.

அக் காலத்தில் அக்காசிப்பதியிலுள்ள யாவரும் அங்கு வந்து கூடிப் பற்பலவிதமான இரக்கமொழிகளைப் பேசிக்கொண்டிருந்தனர். தேவரும், தேவர் பெருமானும், முனிவர்களும் வானவெளியில் வந்து கூடி நிறைந்தனர். அப்பொழுது, அரிச்சந்திரன் வாளை ஓங்கிக்கொண்டு, 'யான் உண்மையே பேசுபவனானால், இவள் கற்புநிலை கடவாதவளேயானால், இவளுக்கு யாதொரு துன்பமும் வாராதிருக்கக்கடவது. இன்றேல் இவள் இங்கு இறந்தொழிவாளாக' என்றுரைத்து வாளை வீசினான். வீசவே அது ஒருமலர் மாலிகையாகி அவள் கழுத்தில் விழுந்தது. விழவே, தேவர் கூட்டமும், முனிவர் குழாங்களும், மற்றுமுள்ள மனிதர்களும் அங்குவந்து சூழ்ந்தனர்.

தேவேந்திரன், அரிச்சந்திரனது சத்தியத்தின் உறுதியையும், சந்திரமதியின் கற்பின் மேம்பாட்டினையும் சிலாகித்தான். முனிவர்களும் அவர்க்கு ஆசிகூறினர். வசிஷ்டர் தமதுசீடனை அணைத்துக்கொண்டு வாழ்த்தினர். காசிராஜன் தான் சந்திரமதியைக் கொல்லும்பொருட்டு உத்தரவிட்டதை நினைந்து கழிவிரக்கங் கொண்டான். விசுவாமித்திரர் அங்கு இருந்தவர் எல்லாரும் அறியத் தான் தேவர் அவையில், முன் பின் யோசியாமல் சபதம் செய்ததையும், சிறிதும் இரக்கமின்றி அரிச்சந்திரனைக் குடும்பத்துடன் பற்பலவிதமான துன்பங்கட் குள்ளாக்கியதையும் விரித்துரைத்தனர். பிறகு, அவர் தபோபலத்தால், இறந்த சிறுவர்களை உயிர்ப்பித்தனர். அரிச்சந்திரனைப் பலவாறு

புகழ்ந்து, முன் கூறியபடி தமது தவத்திற் பாதி அவனுக்கு நல்கி, இராச்சியாதிகாரத்தையும் அவனை ஏற்றுக்கொள்ளும்படி சொன்னார். அதற்கவன், 'நான் கொடுத்ததை மீளப்பெறேன்' என, முனிவர் அவனை நோக்கி, "வேந்தே! நான் மனதார இராச்சிய பரிபாலனம் செய்யவேண்டுமென்று பெற்றேனில்லை. உன்னைச் சோதிக்கவே பெற்றேன். இதனாலுன் பெருமையும், 'சத்தியம் தலைகாக்கும்' என்ற மெய்யும் இவ்வுலகத்தார் கண்டுணர்ந்தனர். துறவியாகிய எனக்கு மாநிலம் காவல் எதற்கு?" என்றார்.

பிறகு, அரிச்சந்திரன் அவரை வணங்கி, 'நான் பறையனுக்கு ஆட்பட்டு விட்டதால், அரசனாகும் பதவி இனி எனக்கில்லையே' என, முனிவர், 'அரசனே! நீ அறியாமற் கூறினை. உன்னை விலைக்குப் பெற்றவன் தர்மராஜன்; புலையன் அல்லன். நீ காத்த சுடலை யாகசாலையே. உன் மனைவியையும், மகனையும் வாங்கினவன் அக்கினிபகவானே. ஆனதால் நீ உன் நாட்டை ஆளக் கடமைப்பட்டவனே யாகிறாய்' என்றனர்.

அப்பால் திரிமூர்த்திகளும் ஆங்கு எழுந்தருளினர். அரிச்சந்திரன் அவர்களை வணங்கினன். அம் மூர்த்திகளும் அவனை ஆசீர்வதித்துப் பல வரங்களும் நல்கி, அரசியற்றும்படி ஆக்கினையிட்டு மறைந்தருளினர். அப்பால் எல்லோரும் தத்தம் இடங்களுக்குச் சென்றனர். காசிகாவலன் அரிச்சந்திரனைக் குடும்பத்துடன் தனது அரண்மனைக்கு அழைத்துச்சென்று உபசரித்தான். இரண்டொரு நாட் செல்ல, அரிச்சந்திரன், மனைவி மகனுடன் பொற்றேரில் ஆரோகணித்து, நால்வகைப் படையும் நாற்புறமும் சூழ்ந்து வரப் பேரிகை முழங்க அயோத்தியிற் சென்று,

முன்போல் சிங்காதனத்தில் வீற்றிருந்து, உலகமெல்லாம் ஒருகோல் செலுத்திச் சுகமாக வாழ்ந்து வரலாயினன்.

---

13. ஆந்தை.

ஆந்தை எந்தப் பிரதேசத்திலும் வசிக்கும் ஒரு பறவை. அதன் குரலை இராக்காலங்களிற் கேட்டிருப்பீர்கள். அச்சத்தம் எவ்வளவு பயங்கரமானது! அது பாழிடங்களிற் காணப்படுவதால், அவ்விடங்கள் அதனால் பாழாயினவென்று சிலர் கருதுகிறார்கள்.



உங்களில் யாராவது ஆந்தையைக் கண்டிருக்கிறீர்களா? அதன் உருவை இப்பாடத்தின் தலைப்பிற் பாருங்கள். அதன் தலை பருத்து உருண்டையா யிருக்கிறது.

அதன் பெரிய உருட்சியான கண்கள், நீண்ட தூரத்திலுள்ள பொருளையும் எளிதிற் காணுமாறு கூரியனவாக இருக்கின்றன. அது இரவில் இரை தேடும் பறவை யாகையால், அதன் கண்கள் பகற்காலத்தைப் பார்க்கிலும் இரவிலேயே நன்றாகப் பார்க்கக் கூடியன.

ஆந்தையின் கண்களை இரவிற் பார்த்தால், அவை சொலித்துக்கொண்டிருக்கும். அதன் அலகு தடித்தும், குறுகியும், வளைந்தும், மாமிசத்தைக் கிழித்து உண்ணுமாறு கூரியதாகவு மிருக்கும். காதுகளோ, சிறு ஒலியையும் தெள்ளிதிற் கேட்கக்கூடிய நுட்ப முடையவை. ஆந்தையானது பறக்கும்போது புறாவைப்போல் செட்டைகளைப் படபடவென்று அடித்துக்கொண்டு பறந்துசென்றாலும், சத்தம் சிறிதும் கேட்பதில்லை. இப்பறவையின் சிறகின் உட்புறத்திற் பஞ்சுபோன்று மெத்தென்றிருக்கும் சிறு இறகுள்ளது. அது, சிறகுக் குட்புறம் முளைத்து உடலோடு சேர்ந்து உள்ளது. அதன்மேல் சிறகுகள் அடிக்கப்படுவதால் சத்தம் உண்டாவதில்லை. இப்பஞ்சுபோன்ற இறகு, அதனுடலுக்கோர் போர்வை போற் பயன்படுகிறது.

ஆந்தையின் வலிய கால் குறுகிச் சற்று பருத்திருக்கும். காலின் முன்பக்கம் மூன்று விரல்களும், பின்பக்கம் ஒரு விரலும் உள்ளன. அந்த விரல்களில் கூரிய நகங்கள் உண்டு. இப்பறவை தன் பகைப் பிராணிகளோடு போர்புரிகையில், தன் நகத்தையே ஆயுதம்போல் உபயோகிக்கிறது. ஆந்தையின் கூச்சல், கேட்போரை அச்சுறுத்தக் கூடியது. இப்பறவை எப்போதாவது பகலில் வெளிப்பட்டால், மற்ற சிறு பறவைகள் கத்தும்.

வீடுகளில் மார்ச்சாலம் என்ன தொழிலைச் செய்கிறதோ அதையே ஆந்தையும் காடுகளிற் செய்கிறது. ஆயினும் குடியானவர்கள் அதைக்கண்டாற் கொன்றுவிடுவார்கள். திருப்தி யின்மையாலோ, பயத்தாலோ அது கத்துகிறதென்பதை அறியாதவர்கள், அதன் சத்தத்தினுற் கேடுண்டாகுமென்று நினைக்கிறார்கள்.

பருமன்பற்றியும், நிறம்பற்றியும் ஆந்தைகளைச் சில பிரிவுகளாகப் பிரிக்கலாம். நமது நாட்டிற் காணப்படும் ஆந்தைகள் பெரும்பாலும் வெள்ளையும் கறுப்பும், மஞ்சளும் கறுப்பும் கலந்த நிறமுள்ளன. இப்பறவை சாதாரணமாகப் பெரும் புறுவின் அளவுள்ளது. இது பாழான கட்டிடங்களிலும், கோபுரங்களிலும், மரப்பொந்துகளிலும், வைக்கோற் போர்களிலும் வசிக்கும். கடைசியிற் கூறியதை வைக்கோற் போர் ஆந்தையென்றே கூறுவர். இதனுற் குடியானவர்களுக்கு அதிக நன்மையுண்டு. ஏனெனில், இது விளைச்சலுக்குக் கேடுசெய்யும் வெள்ளெலி, சுண்டெலி முதலியவற்றைப் பிடித்துத் தின்றுவிடும், மற்ற பறவைகளோடு போர்புரிய நேரிடின், இது மல்லாந்து படுத்துக்கொண்டு, கத்திபோலும் அதன் நகங்களாலும் அலகாலும் பகைவரை எதிர்த்துப் பொரும். இது ஒரு முறைக்கு மூன்று, நான்கு முட்டைகளையிடும். வளையில் வசிக்கும் ஒருவகை ஆந்தையும் உண்டு. இது உருவிற் சிறியது. தரையில் ஆழமான வளைகளில் வசிப்பதால் இதை வளையாந்தை என்பார்கள். இது பகலிலேயே இரை தேடுகிறது. ஆந்தையின் ஆகாரம் எலி, தவளை, வண்டு முதலியன. கோட்டானும் கூகையும் ஆந்தையினத்தைச் சேர்ந்தவை.

வெண்ணிறமான ஒருவகை ஆந்தை சீதள மண்டலங்களிலுள்ள நார்வே, ருஷியா, வட அமெரிக்கா முதலிய நாடுகளில் வாழ்கின்றது. குஞ்சாக இருக்கும்போது அதன் சிறகுகளின் மேற்புறத்தில் நெருக்கமும் மங்கலுமான சிறு புள்ளிகள் காணப்படினும், நாளடைவில் அவை மறைந்துவிடுகின்றன. பிறகு அப்பறவை வெண்ணிறத்தோடு விளங்குகின்றது. இதன் நீளம் இரண்டடிக்கும் அதிகம். இந்தியநாட்டிற் காணப்படும் ஆந்தையினும் அது மிகப் பெரியது. அதன் உருவத்தையும் மேலுள்ள படத்திற் காணுங்கள்.

சாதாரணமாகப் பனி நிறைந்த இடங்களில் வாழும் பிராணிகள் வெண்ணிறமாயிருத்தல் இயல்பு. அவற்றுக்கும் பனிக்கட்டிக்கும் வேறுபாடு புலப்படாததால், அவை தங்கள் பகையினங்களின் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. சிலவேளைகளில் விரோதிகள் சமீபிக்கும்வரை, அவற்றுக்குத் தெரியாமல் இருத்தலும், இந்த நிறத்தாலேயே ஆம். வெள்ளையாந்தைக்கு இறகுகள் கால்வரை அடர்ந்திருப்பதால், அதற்குப் பனியின் கொடுமை அதிகமாகத் தோன்றுவதில்லை. அது இரவிலும் பகலிலும் இரைதேடும். முயல், குழிமுயல், மீன், எலி முதலியன அதன் ஆகாரங்கள். மீன் முதலியவற்றை அது பிற பறவைகள்போல், அலகாற் பற்றுமல், கால் நகங்காளாற் பற்றிப்பிடித்துக்கொண்டு பறந்து விடுகிறது. பகலிலும் அதற்கு நேத்திரம் நன்கு தெரியும்.

சீதள மண்டலத்தில் சேர்ந்தாற்போற் சிலகாலம் சூரியன் அஸ்தமியாமலும், சிலகாலம் உதியாமலும் இருக்கும் அன்றோ? ஆதலின் இவ்விரு பருவங்களுக்கும் தக்க-

வாறு இந்த ஆந்தையின் நேத்திரம் அமைந்துள்ளது. இவ்வாந்தை ஒரு முறைக்கு இந்தியாவின் ஆந்தையைப்போல் மூன்று அல்லது நான்கு முட்டையிட்டாலும், அவற்றில் ஒன்று அல்லது இரண்டுக் கதிகம் குஞ்சு பொரிப்பதில்லை.

ஆந்தை இனத்திற் பெரியது கழுகு ஆந்தை. இது மற்ற இடத்து ஆந்தைகளைக் காட்டிலும், உருவிலும் வலிமையிலும் பெரியது. முயல், சிறுமான் முதலியவைகளை இதன் ஆகாரம். இவ்வின ஆந்தையும் பனியுறையும் நாடுகளில் வாழ்கிறது. இது மனிதர் ஏறிச் செல்லமுடியாத மலைப்பிளவுகளில் முட்டையிடும்.

---

14. ஆகுபெயர்.

பெயர்கள், பொருள் உணர்த்தும் முறைபற்றி ஆறு வகைப்படும். உதாரணமாக தாமரை, ஊர், கோடை, வெற்றிலை, வெண்மை, வற்றல் என்னும் மொழிகளைக் கவனியுங்கள். இவைகள் முறையே பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற் பெயர்களாக இருக்கக் காண்பீர்கள்.

இந்த ஆறுவகைப் பெயர்களும் அளவை, சொல், தானி, கருவி, காரியம், கருத்தன் முதலிய பெயர்களும் தம்மோடு சம்பந்தமுடைய வேறொரு பொருளை உணர்த்தும்போது அவை ஆகுபெயர் எனப்படும். ஒன்றன்பெயர் மற்றொன்றுக்கு ஆவது ஆகுபெயராம்.

பொதுவாகத் தாமரை என்ற சொல், இலை, பூ, நாளம் முதலியவற்றோடு கூடிய கொடி விசேட முழுவதையும் உணர்த்தும். ஆனால் 'தாமரை மலர்ந்தது' என்ற வாக்-

கியத்தில், மலர்தல் வினையால், தாமரை என்ற சொல் அதன் அவயவமாகிய (பாகமாகிய) மலரை உணர்த்து-கிறது. இது பொருளாகு பெயர் அல்லது முதலாகு பெயர் என்னப்படும்.

வெற்றிலை நட்டான்—இங்கு வெற்றிலை என்ற சினை அதன் முதலாகிய கொடிக்கு ஆகியதால், இச்சொல் சினை-யாகு பெயராம்.

பொருளாகு பெயரில், முதற்பொருள் அதன் சினையையும், சினையாகு பெயரில், சினை (உறுப்பு) அதன் முதற்பொருளையும் உணர்த்துதல் காண்க.

ஊர் ஒன்று கூடிற்று — ஊர் என்றது அதிலுள்ள மனிதருக்கு ஆனமையால், இது இடவாகுபெயர்.

இடம், ஸ்தானம் என்ற இரண்டு சொற்களுக்கும் பொருள் ஒன்றே. ஸ்தானம் என்பது தானம் என்று தமி-ழில் வழங்கும். இங்கே ஊர் என்றது ஸ்தானம்; மனிதர் என்றது தானி. தானி-தானத்தில் (இடத்தில்) உள்ளது.

விளக்கு முறிந்தது - சாதாரணமாய் விளக்கென்பது எரியும் சுடரை உணர்த்தும். அச்சுடர் தானியாம். இது இருக்கும் தானம் தண்டு. இவ்வாக்கியத்தில், முறிந்தது, எரியும் சுடர் அன்று. அதன் தானமாகிய தண்டேயாம். இங்கே விளக்கு என்ற தானியின் பெயர், அது இருக்கும் தானமாகிய தண்டுக்கானதால், தானியாகுபெயர்.

கோடை அறுத்தான்— இங்கே கோடை என்னும் காலப்பெயர், அக்காலத்து விளையும் பயிருக்கு ஆனதால், காலவாகுபெயர்

வெள்ளை கொண்டு வந்தான்—வெள்ளை என்ற பண்புப் பெயர், அந்தக் குணத்தைவிட்டுப் பிரியாத துணிக்கு ஆகியதால், பண்பாகு பெயர்.

வற்றல் உண்டான்—இங்கே வற்றல் என்ற தொழிற்பெயர், வற்றுதலாகிய தொழிலையுடைய ஒரு பொருளுக்கு ஆனதால், தொழிலாகுபெயர்.

'உண்பது நாழி, உடுப்பது நான்குமுழம்'-என்பவற்றில் நாழி, முழம் என்ற அளவின் பெயர்கள், அவ்வளவினையுடைய பொருளுக்கு ஆனமையால், அளவையாகுபெயர்.

இந்தப் பாட்டுக்கு உரை எழுது—உரை என்ற சொல்லின் பெயர், அந்தச் சொல்லாற் குறிக்கப்படும் அர்த்தத்துக்கு ஆனதால், சொல்லாகு பெயர்.

திருவாசகம் படித்தான்—இங்கே வாசகம் என்றசொல்லின் பெயர், பல சொற்காரணமாக முற்றுப்பெறும் நூலாகிய காரியத்திற்கு ஆனமை காண்க. திருவாசகம் என்பதில் காரணமாகிய வாசகத்தின் பெயர், காரியமாகிய நூலுக்காயிற்று. இதுவே காரணவாகு பெயரென்றும், கருவியாகு பெயர் என்றும் சொல்லப்படும். இங்கு வாசகம் காரணம்; நூல் காரியம்.

பட்டினத்தார் படித்தான்-பட்டினத்தார் என்ற நூலாசிரியர் பெயர், அவரியற்றிய நூலுக்கானதால், கருத்தாவாகுபெயர்.

இலக்கணம் கற்றான்—இங்கு இலக்கணமாகிய காரியத்தின் பெயர், அதையுணர்த்தும் நூலுக்கு ஆனமையால், இது காரியவாகு பெயர்.

காளைவந்தான்-இங்குக்காளை என்பது, காளைபோல்வாஞ கிய மனிதனுக் கானமையால், இது உவமையாகு பெயர்.

பொருள்முத லாறோடு அளவைசொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரால் அதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன ஆகு பெயரே.

பயிற்சி—அடியில் வருவனவற்றில் எச்சொற்கள் ஆகுபெயர் கள் என்றும் அவை என்ன ஆகுபெயர்கள் என்றும் கூறுக.

1. காட்டுக்குச் சென்ற இராமர் திரும்பிய செய்திகேட்டு, அயோத்தியடைந்த மகிழ்ச்சிக் களவில்லை. 2. அவன் திருவள்ளு-வர் படித்தான். 3. அங்குள்ளவர்க்குத் தலைக்குக் காலணகொடு. 4. எண்பதுகோடி நினைந்தெண்ணுவன. 5. உன் அரையிலுள்ள துணியின் விலை என்ன? 6. நல்லவர் நாவில் விழாதே. 7. பாவை வந்தாள். 8. இக்குளத்தில் நீலம் பூத்திருக்கிறது. 9. பறவையில் அழகியது தோகை. 10. தைப் பொங்கலுக்கு வீடுகளில் வெள்ளை யடிப்பார்கள்.

---

15. முத்து.



நமது நாட்டுப் பெண்கள் சிலர் முத்துமாலைகளை அணிந்திருக்கப் பார்த்திருப்பீர்கள். அம்மாலைகளில் கோக்-கப்பட்ட முத்துக்கள் எங்குண்டாகின்றன வென்றும், நமக்கு அவை எப்படிக் கிடைக்கின்றன வென்றும் ஆராய்-வோம்.

முத்து என்பது, ஒருவகைச் சலசரத்தினின்று கிடைக்கின்றது. அந்தச் சலசரம் சிப்பி அல்லது முத்துச்சிப்பி என்று சொல்லப்படும். அதன் அமைப்பை, நீங்கள் நதிகளிலும், குளங்களிலும் இருக்கும் கிளிஞ்சலையும் அதனுள் வாழும் சதைப் பற்ருன பூச்சியையும் பார்த்து ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ஆயினும் சிப்பியின் உருவமும் பருமனும், கிளிஞ்சல் உருவத்திலும் பெரியனவாயும் நீளப் போக்காயன்றி, வட்ட வடிவமாயும் இருக்கும். இந்தச் சிப்பியின் புறத்துள்ள ஓட்டிற்கும் உள்ளிருக்கும் பூச்சியின் தோலுக்கும் இடையே ஒருவகைப் பொடிமணல் புகுந்து எரிச்சலைக் கொடுக்கிறது. அவ்வெரிச்சல் பொருமல், பூச்சி புரளுகையில், சுண்ணும்பின் இயல்புள்ள நீர் வெளிப்பட்டு மணலை மூடிவிடுகிறது. அதுவே ஒள்ளிய முத்தாக மாறுகிறது. சிப்பியின் உள்ளிருக்கும் முட்டைகள் வெளிப்படாமல் உள்ளே தங்கிய வேளையிலும் முற்கூறியபடி முத்துண்டாகிறதென்று கூறுகிருர்கள். இவ்விஷயத்தை முதன் முதலில் ஆராய்ந்தறிந்தவர்கள் சீனர்களே. நித்திலம் கிடையாத சமயத்திலும், அவர்கள் முத்துச் சிப்பிகளைப் பிடித்து அவற்றுள் மணலைப் புகுத்தி எரிச்சலை உண்டாக்கி முத்தை ஈனச் செய்து மெத்த இலாபம் பெற்ருர்கள்.

இயற்கையில் உண்டாகும் முத்து, சாதாரண பருவத்தை நான்கு வருடங்களிலும், பூரண முதிர்ச்சியை ஏழு வருடங்களிலும் அடையும் என்கிருர்கள். முற்கூறிய சிப்பியில் இருந்தன்றி வேறிடங்களிலும் முத்துண்டாகிறதென்றும் சொல்லுகிருர்கள். அவற்றுட் சில, சங்கு, பாம்பின்தலை, பன்றியின் கொம்பு, கரும்பு, யானைக்கொம்பு முத-

வியனவாம். பர்த்துருஹரி போன்ற வடமொழிப் புலவர்கள் கூறியவாறு முத்துண்டாகும் விதம் நோக்கத்தக்கது. சிப்பியானது மழை நீர்த்துளியைப் பெறுதற்குச் சமுத்திர மட்டத்தின் மேல்புறம் வந்து மழை நீர்த்துளி ஒன்று தன்னிடத்து விழுந்தவுடன் அது ஒட்டை மூடிக்கொள்ளுமென்றும், அதுவே ஒளிபடைத்த முத்தாகிறதென்றும் கூறினர். நமது நாட்டு நாவலர் மட்டுமேயன்றிப் பாரஸீகரும் முற்காலத்துப் பிறபுலவரும் இவ்வண்ணமே எண்ணினர். ஆயினும் இக்காலத்து ஆராய்ச்சி வல்லவர், சிப்பிகள் எப்போதும் பாறைகளைப் பற்றிக்கொண்டிருக்குமேயன்றி நீர்ப் பரப்புக்குமேல் என்றும் வருவதில்லை என்று துணிந்து உரைக்கிறார்கள்.

பருவத்துக்குத் தக்கவாறு நாவியின் பரிமாணம் ஒளி இவை வெவ்வேறாக இருக்கும். பூச்சியின் எரிச்சலுக்குத் தக்கபடியும் அவை மாறுபடும். உஷ்ண தேயங்களில் உண்டாகும் சிப்பி முத்துக்களே அதிக பளபளப்பாயும் பெரியனவாயும் உள்ளன. குளிர்ந்த தேயத் தரளங்கள் அங்ஙனமின்றி ஒளி குறைந்தும், சிறுத்தும் காணப்படுவதால் சீதோஷ்ண நிலைக்குத் தக்கவாறும் முத்தின் மாண்பு மாறுபடும் என்று தெரிகிறது.

முத்துச் சிப்பிகள் இலங்கையை யடுத்த மன்னார்குடாவிலும், தூத்துக்குடிக்குச் சமீபத்திலும் உள்ள பரவையிலும், பாரஸீகக் குடாக்கடல் முதலிய இடங்களிலும் உண்டாகின்றன. முற்கூறிய இடங்களில் கிடைப்பவை வெண் முத்துக்களே யாம். கறுப்பு நிற முத்துக்களும், கபிலநிற நித்திலங்களும் முறையே கலிபோர்னியாவிலும், மெக்ஸிகோவிலும் கிடைக்கின்றன.



முத்துக் குளித்தல்.

முத்துக்களை மானிடர் எங்ஙனம், பெறுகிறார்கள் என்று இனி ஆராய்வோம். இரண்டு விதமாக முத்துக்களைக் கடலில் மூழ்கி எடுக்கிறார்கள். இதற்கு முத்துக்குளித்தல் என்றுபெயர். இந்தியர் முத்துக்குளிக்கும் முறையை முதலிற் கூறுவோம். முத்துச்சிப்பிகளை மூழ்கி எடுப்பார் சாதாரணமாக இருபது பேர்கள் படகில் ஏறிக்கொண்டு கடலிற் செல்லுவார்கள். முத்தெடுக்க மூழ்குபவர், நீரில் நெடுங்காலம் பயின்று அதிக நேரம் மூச்சு அடக்கும் பழக்கத்தை அடைந்திருப்பர். அவருடல் முழுதும் ஆமணக்கு நெய்யைத் தடவிக்கொண்டு சிறிய உடையுடன் கடலில் மூழ்குகின்றனர். தங்கள் தங்கள் பழக்கத்துக்குத் தக்கபடி இரண்டு நிமிஷம் முதல் நான்கு நிமிஷம்வரை 24 அடி முதல் 50 அடிவரையுள்ள ஆழத்தில் மூழ்கி விரைவில் கடலின் தரை அல்லது பாறையை அடைகின்றனர். அதற்கு அனுகூலமாக ஒரு கல்லை உபயோகிக்கின்றனர் அந்தக் கல் 50 இராத்தல் நிறையுள்ளது. அதன் ஒரு நுனியிலுள்ள துவாரத்தில் ஒரு கயிறு கோத்துக் கட்டப்பட்டிருக்கும். முத்துக் குளிப்பவன் அக்கயிற்றைத் தனது வலது கால் விரல்களால் பிடித்துக் கொள்ளுகிறான். அவனது இடது கால் விரலில் முத்துச் சிப்பிகளை வைக்கும் வலைப்பையைக் கோத்துக் கொள்ளுகிறான். பிறகு, முற்கூறிய கயிற்றை இருகைகளாலும் இறுகப் பற்றிக்கொண்டு கடலில் இறங்குகிறான். கடலின் தரைமட்டத்தைச் சேர்ந்தவுடன், மிக்க விரைவில் கல்லினின்று கீழிறங்கிக் கால்விரலில் கோத்திருந்த பையைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு, தான் மூச்சடக்கக்கூடிய காலம்வரை, சிப்பிகளை வாரி வாரி வலையிற் போட்டுக்கொண்டு, ஏறிவர விரும்பும்போது கயிற்றை ஆட்டுகிறான். அவ் அடையாளத்தை அறிந்த படகிலுள்-

ளோர், கல்லோடு கட்டப்படாத கயிற்ருல் அவனை உடனே வெளியேற்றுகிருர்கள். அவன் ஏறிச்சென்ற கல், பிறகு வெளியே இழுக்கப்படும். மேல்நாட்டார் குளிமணிகளில் உட்கார்ந்துகொண்டு முத்துக் குளிப்பார்கள்.

முத்துக் குளிப்போர் எடுத்துவந்த சிப்பிகளை மணலில்லாத இடங்களில் இரண்டடி ஆழமுள்ள குழிகளிற்போட்டு வைப்பார்கள். அச்சிப்பிகள் அழுகிக் காய்ந்த பிறகும் சிப்பிகளைத் திறக்கமுடியாவிட்டால், வெந்நீரில் வேகவைத்துப் பிற்பாடு அவற்றைப்பரிசோதித்து உள்ளே முத்திருந்தால் எடுத்துக்கொள்ளுகிருர்கள். எல்லாச் சிப்பிகளிலும் முத்து இருக்குமென்பதில்லை. சிலவற்றில் சிறியனவும், சிலவற்றில் பெரியனவும் இருக்கும். சிப்பிகளைக் கழுவும்பொழுதும், சோதிக்கும்பொழுதும் உண்டாகும் துர்நாற்றம் பொறுத்துக்கொள்ளும் திறத்ததன்று. ஆயினும், அதன் உள்ளிருக்கும் பொருளுக்காக எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளுகிருர்கள்.

எந்நாட்டாரும் ஆபரணமாக முத்தை அணிகிருர்கள். நமது நாட்டுப் புரவலரும், செல்வச் சீமான்களும் தாளத்தை மாலைகளாகவும், பிறவற்ருேடு கலந்த ஆபரணமாகவும் அணிகிருர்கள். சமீபகாலத்தில் இரண்டங்குல நீளமும் ஓரங்குல அகலமும் வாய்ந்த முத்தொன்று அரேபியாவில் பதிஞெருலக்ஷம் வெண்பொற்காசுகளுக்கு விற்கப்பட்டது. நமது அரசரின் அன்னையாகிய அலெக்ஸாண்டரியாவுக்கு நித்திலத்தில் மெத்தப் பிரீதி உண்டு. அவர்களுடைய கிரீடமும், உடையும், அரைக்கச்சும் நித்திலங்கள் நிரம்பப் பெற்றனவாம். அவற்றின் விலை நான்கு லக்ஷம் பவுனென்று மதிக்கின்றனர். அணிகளுக்கு உபயோகமாகாத முத்துக்கள்

இந்தியராலும், சீனராலும் புடமிடப்பட்டு மருந்தாக உபயோகப்படுகின்றன. மேனாட்டார் சிலர் திருஷ்டி கழியவும், மலடு நீங்கவும் முத்துமாலைகளை மிகுதியாக அணிகிறார்கள்.

நகைக்கு உபயோகமாகாத கடுகுபோன்ற சிறு முத்துக்களைச் சுண்ணாம்பாக நீற்றித் தாம்பூலத்தோடு சில இந்தியர் உபயோகிக்கிறார்கள். முத்துடன் சில பொருள்களைச் சேர்த்துத் தென் ஐரோப்பாவில் வசிப்பவர் ஒருவிதத் தைலம் இறக்கி முகத்தில் பூசிக்கொள்ளுகிறார்கள். அதனால் முதிர்த்த வயதில் வரும் நரைதிரைகள் முகத்திற் காணப்படாவாம்.

---

16. பொன்னப்பன் அன்னப்பனைது.

தொண்டை நாட்டிலே, மயிலை என்னும் மாநகரிலே பின்னப்பன், பொன்னப்பன் என்ற இரண்டு வைசியர் இருந்தனர். அவர்கள் குலத்தாலும் வயதாலும் தொழில்முறை தெரி வன்மையாலும் சரிசமானமானவர்கள். மேலுமவர்கள் உறவினர்; அண்டை வீட்டுக்காரர்கள்; இனிய மொழிகூறி, எவரையும் தம் வசப்படுத்திக்கொள்ளும் சதுரர்கள். இப்படிப்பட்ட இந்த இரண்டுபேர்களும் கூட்டு வியாபாரஞ் செய்துவந்தனர். வருகையில் கால விசேஷத்தாலும், ஊணுறக்கமின்றி ஒரு காசுங்கூட அப்பாலிப்பாற் பிதுங்கவிடாமற் கொடிய உலோபத்தனத்தை மேற்கொண்டொழுகி வந்தமையாலும் அவர்களுக்குச் செல்வம் கோடிக்கணக்கிற் பெருகத் தொடங்கிற்று. நாற்பது வருஷ வியாபாரத்தில் பத்துக்கோடி பொற்காசுவரை அவர்கள் சேர்த்துவிட்டனர். அப்பாலவர்கள் தமக்கு வார்த்திகதசை வந்து விட்டதைத் தெரிந்து வாணிபத்தை நிறுத்திப் பேருக்கு ஐந்து கோடி நாணயமாகப் பங்கிட்டுத் தங்கள் தங்கள் வீட்டில்

இருப்புப் பெட்டியிலிட்டுப் பூட்டிப் படுக்கையும் இருப்பும் அப்பெட்டியின் பக்கத்திலேயே வைத்துக்கொண்டிருந்தார்கள்.

இவர் ஐங்கோடி செல்வத்துக் கதிபர்களாயிருந்தும், தர்மமாக எவர்க்கும் எக்காலத்திலும் ஒரு காசுங்கூடக் கொடுத்தறியமாட்டார்கள். தங்கள் வயிற்றுக்குங்கூடச்சரியான வேளையில் உருசியான உணவு கொடுப்பதில்லை என்ருல், வேறு என்ன சொல்ல வேண்டியிருக்கிறது! கல்வியறிவில்லாதவர் செல்வம் நல்வழிப் படுவதெப்படி? அவர்கள் புகழ் புண்ணிய முதலிய சகல புருஷார்த்தங்களும் தாங்கள் இருப்புப் பெட்டியில் துருப்பிடிக்க வைத்திருக்குஞ் 'செல்வமே என்று நினைத்துவிட்டார்கள். மறுமையொன்று உண்டென்பதைப்பற்றி அவர்கள் கனவிலுங்கூடக் கருதவில்லை.

இப்படி யிருக்கையில், பின்னப்பன் செட்டியாருக்குக் கொடுமையான நோயொன்று கண்டது. காணவே அவர் வைத்தியனை அழைத்து மருந்துகேட்டார். ஆயுர்வேதியும் நாடி முதலானவைகளை நன்கு பரிசோதித்து அவரை நோக்கி, 'வணிகரே! இன்று பகற்பொழுது போகு முன், உமது ஆவி, உடலைவிட்டு நீங்கிவிடும்' என்று சொல்லிப் போய்விட்டார். விடவே, செட்டியார் தமது ஆப்தராகிய பொன்னப்பரை அருகிலழைத்து, 'ஐயா! இளமைமுதல் ஆடியோடித்தேனீயைப்போல் சேர்த்துக் குவித்திருக்கும் செல்வங்களையெல்லாம் அநியாயமாய் விட்டுவிட்டுப் போகவேண்டியிருக்கிறதே. இந்த வருத்த மிக்ககாலத்தில் என் நெஞ்சைப் பிளக்கின்றதே. என்ன செய்வேன்? ஹா! ஹா!!

கஷ்டம்! கஷ்டம்!!' அடடா! இப்பாவி, திடமாயிருக்கும் காலத்தில் வயிறாரவுண்டேனு? அரையார வுடுத்தேனு? பிற-ருக்கேதாவது கொடுத்தேனு ஒன்றுமில்லையே' என்று பிரலாபிக்க, பொன்னப்பர் அவரை நோக்கி, 'நண்பரே! இனிமேற் சொல்லி என்ன பிரயோசனம்? வாயை மூடும்' என்று அழுதுகொண்டே ஆறுதல் கூறினர். சிறிது நேரஞ் செல்ல மீண்டும் பின்னப்பர், 'ஹா! ஹா!' என்றலறிக்-கொண்டே யிருந்துவிட்டு, கடைசியில், 'ஐயோ! ஐயோ! இப்பாவி பொருளைவிட்டுப் போகிறேனே! போகிறேனே! ஓ பணமே! பணமே!' என்று சொல்லிக்கொண்டே பிரா-ணனை விட்டார். அவருக்குச் சந்ததியில்லாததால், அவ ருடைய தாயாதிக்காரர்கள் பிணத்தைக் கொண்டுபோய்ப்-பொசுக்கிவிட்டுப் பணத்தையெல்லாம் பங்குவைத்துக்-கொண்டனர்.

இவையெல்லாம் நேரிற் கண்டிருந்த பொன்னப்பரும் பிள்ளையில்லாதவர் ஆதலால், அவர் 'நாமிறந்தாலும் நம்மு டைய செல்வமு மிப்படியே பலராலும் பங்கிடப்பட்டுத் தானே போகும்' என்று பெரிதும் விசனங்கொண்டாரே யன்றி, இனியாவது தனத்தால் தருமத்தை சம்பாத்தியம் செய்து கொள்வோமென்று நினைக்கவேயில்லை. ஆனல் இற-ந்து போகும் பொழுதும் தம்முடைய திரவியத்தை உடன்-கொண்டுபோக வழியேதேனு முளதா என்பதைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினர். இவ்விஷயத்தைப்பற்றிப் பல-ரிடத்திலும் கேட்டார். கேட்டவர்களெல்லாரும் அவரை நோக்கிச் செட்டியாரே! உமக்கென்ன பைத்தியம் மண்டை முட்டிப் போய்விட்டதா? மட்டித்தனமான கேள்வி கேட்கி றீரே? 'மனு மாந்தாதா முதலிய சக்கரவர்த்திகளுங் கூடப்

போட்டது போட்டபடியே கிடக்கப் புகைந்துபோனார்கள் என்றதைக் கேட்டிலீரோ? 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்ற பெரியோர் வாக்கியம் அனுபவசித்தமல்லவா ? இப்படியெல்லாமிருக்கப் பணத்துடன் பரலோகஞ் செல்ல நெறி உசாவுகிறீரே! நன்று! நன்று!! உமக்குண்டாயிருக்கும் பொருளாசையைப்பற்றி என்ன சொல்ல?'' என்று வெறுத்தார்கள். என்றாலும் அந்த வைசியர் தாங்கொண்ட முயற்சியைக் கைவிடவில்லை. இப்படி இருக்கையில் ஒருநாள் தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் அவ்வீதிவழி வருதலை அவர் கண்ணுற்று வணங்கி வீட்டுக்குள் அவரை அழைத்துச் சென்று, ஆதனமளித்து உபசரித்துக் கூறலானார்:

'சுவாமி பொய்யில் புலவரே! அடியேன் அரை வயிற்றுக்குங்கூட உணவுகொள்ளாமல் அரும்பாடுபட்டுத் தேடிக்குவித்திருக்கும் செல்வங்களைக் கணப்பொழுதுங்கூட விட்டுப் பிரிய மனமில்லாதவனா யிருக்கின்றேன். ஆனதால், இனி இறந்து எந்தவுலகத்துக்குப் போனாலும், எனது அருமைத் திரவியங்களையும் நான் கைக்கொண்டே போகவேண்டுமென்று நினைக்கின்றேன். அதற்கேதாவது வழியுளதா? கூறியருளவேண்டும்' என்றான். அப்புலவர் அந்த வணிகர் கொண்டிருக்கும் பணத்தாசையைக் கண்டு சிறிது, புன்னகைகொண்டு, அவரை நோக்கி 'வைசியரே ! ஏன் அஞ்சுகின்றீர் ? நீர் இறந்திறந்து எங்கெந்த உலகங்கட்குச் சென்றாலும், அந்தந்த உலகங்கள்தோறும் வட்டிவாசியுடன் உமது நிதி கூடவே தொடர்ந்து வரச்செய்ய இலகுவான மார்க்கமொன்றிருக்கிறதே' என்றார். எனவே, செட்டியார் மட்டில்லா மகிழ்ச்சி கொண்டவராய் மீண்டும்

அவரை வணங்கி, 'எமது ஐயா! அந்த நெறியை இப்பொழுதே அருளவேண்டுகிறேன். அம்முறை தவறாது நடப்பேன்' என்றார். என்னவே, தேவர், 'வைசியரே! நீர் இவ்விஷயமாய்ச் செய்யவேண்டிய வேலை அவ்வளவு அசாத்தியமானதன்று; மிகவும் இலகுவானதே. என்னவென்றால், நீர் நிதியை இருப்புப் பெட்டியில் வைத்திருக்கிறீரே, அது சரியன்று. இருப்புப்பெட்டியில் வைத்த பொருள் இருப்பிலேயே இருந்துபோமே யன்றிக் கூட வரமாட்டாது. ஆனதால் இக்கணமே உள்ள பொருள்களை யெல்லாம் அரிசி, உப்பு, புளி முதலான உணவுப்பொருளாக மாற்றி அவைகளை நல்லவண்ணம் பக்குவப்படுத்திப் பசியுடன் வந்தவர் எவராய் இருந்தாலுஞ்சரி அவரது வயிறாகிய பெட்டிகளில் வாரி நிரப்பிவைக்க வேண்டும். இவ்விஷயத்தில் சாதி மதவேற்றுமைகளைச் சிறிதும் கவனிக்கவே கூடாது. இப்படி உமது தங்கப் பணத்தை யெல்லாம் அங்கப்பெட்டியில் நாடோறும் சேமித்து வருவீரேயானால், அவை வட்டி வாசியுடன் மாத்திரமல்ல, ஒன்றிரண்டாக விருத்தியாகி உமது பிறப்புக்கள் தோறும் விடாது உம்மைத் தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும். இது சத்தியமேயாம். இதுபற்றியே நாமும் எமது திருக்குறள் என்னும் நூலில்,

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

எனக் கூறியுள்ளோம். பூர்வ சன்மத்தில் புண்ணியம் பண்ணாதவன் இப்பிறப்பில் பாக்கியவானா யுதிப்பதில்லை யென்-

பது உறுதியேயாம். வெறும்பானை மேலெழுந்து பொங்குவதுண்டோ?' என்றார்.

எல்லாங் கேட்டிருந்த செட்டியார் வள்ளுவரைப் பார்த்து, "தேவரீர் அருளிய வெல்லாஞ் சரியே. என்றாலும், இவ்வேழைக்கு ஒரு சந்தேகமிருக்கிறது. அதனை மாத்திரம் நிவர்த்திக்க வேண்டுகிறேன். 'முற்பிறப்பில் தருமஞ் செய்தவனே இப் பிறப்பில் தனிகனாகச் சனிக்கிறான்' என்றீர்களே! இவ்விஷயம் ஆகமப் பிரமாணத்தாலன்றிப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் தெளிவிக்க முடியுமோ?" என, புலவர், 'இதனைப்பற்றியும் திருக்குறளில்,

அறத்தா றிதுவென வேண்டா, சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை

என்று விளக்கி இருக்கிறேன். அதனை நீர் பார்க்கவில்லை போலும்' என்று சொல்லிக்கொண் டிருக்கையில், அவ்வழியே சென்றுகொண் டிருக்கும் பல்லக்கைச் சுட்டி, 'வைசியரே! இப்பல்லக்கின் மேலிருந்து சுகத்தை அனுபவித்துக்கொண் டிருக்கும் ஒருவனும், அதனைத் தாங்கிச் செல்லும் பலரும் மக்கட் பிறப்பினரே யாவர். இப்படியிருக்க, ஒருவன் மாத்திரம் சுகத்தையும், மற்றவர் துக்கத்தையும் அனுபவிக்கக் காரணமென்ன? யோசித்துச் சொல்லவேண்டும்' என்றார். உடனே செட்டியாருக்கு உண்மை விளங்கிவிட்டது. விடவே, அவர் அந்தத் தெய்வப் புலவருக்குச் சாஷ்டாங்க தண்டஞ் சமர்ப்பித்து, 'தாங்கள் உத்தரவு கொடுத்த பிரகாரமே இதோ எனது இருப்புப்பெட்டிப் பொருள்களையெல்லாம் வயிற்றுப்பெட்டிப்-

பொருள்களாக்கி விடுகிறேன்' என்று அவரிடத்தில் விடைபெற்று வீடுபோய் அவ்வண்ணமே செய்துகொண்டு வரலானர். அன்றுமுதல் அந்தப் பொன்னப்பன் செட்டியார் பேர் 'அன்னப்பன் செட்டியார்' என மாற்றப்பட்டது.

---

17. நம்மாழ்வார்.

தண்டமிழ் வளர்த்த சங்கமிருந்த பாண்டிய நாட்டில், பொருநையாற்றின் கரையிலே, திருக்குருகூர் என்ருேர் தலமுண்டு. அங்கே தொன்றுதொட்டுத் திருமாலுக்குத் தொண்டு செய்து வருமொரு வேளாளர் மரபினில் வாழ்ந்த பொன்காரியார் என்பவர், தம் புத்திரர் காரியார் என்பவருக்குக் கடிமணம்புரிய வெண்ணித் திருவண் பரிசாரம் என்னும் ஊரில் உறையும் திருவாழ் மார்பரது புத்திரியாகிய உடைய நங்கையை மணம்பேசி முடித்தனர். மணவினை இனிது நடந்தேறியது. காரியார் தமது பத்தினியுடன் வண்பரிசாரம் என்னும் திரு நகரையடைந்து தமது மாமனர் மனமகிழ ஆங்குச் சிலகாலம் அமர்ந்து இருந்தனர். பின் திரும்பி வரும்போது திருக்குறுங்குடி என்னும் திவ்விய தலத்தையடைந்து, ஆங்குள்ள பெருமானை நோக்கி, 'எனக்கோர் மகவளிக்கவேண்டும்' என வேண்ட, அவர் 'நாமே வந்து பிறப்போம்' எனத் திருவாய் மலர்ந்தருளினர். பிறகிவர்கள் திருக்குருகூர் அடைந்தனர். சிலகாலம் கழித்துத் திருமாலின் அம்சமாகவும் அவரது கௌஸ்துவமணியின் அம்சமாகவும், சேனை முதலியாருடைய அம்சமாகவும் அவர்கட்கு ஒருமகவு உதித்தது.



நம்மாழ்வார்

'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்பதை உணர்ந்து பகவானுக்கும் பக்தர்களுக்கும் பணிவிடை செய்யக் கருதிய திருவனந்தாழ்வான் முற்கூறியபடி அவதரித்த அம்மகனுக்கு வெயில், மழை முதலியவற்ருல் இன்னல் நேராதபடி அங்கே ஒரு புளியமரமாக அவதரித்தனர். பிறந்த குழந்தை அழாமலும், பால் அருந்தாமலும் இருந்தது. ஈன்ருேர் இவை ஈசன் செயலென்ன எண்ணி வாளா இருந்தனர். குழந்தை பிறந்த பன்னிரண்டாம் நாளில், அதைக் கோயிலுக்குக் கொண்டுபோய் மாறன் என்ன நாமகரணம் செய்து, அருகிலிருந்த புளிய மரத்தின் நிழலில் ஒரு தொட்டிலில் வைத்து இனிது காத்து வந்தனர்.

இந்நிலவுலகில் எந்தக் குழந்தையும் தாயின் கருவில் மிக்க ஞானத்துடன் இருப்பினும், அது வெளிப்பட்டுத் தோன்றின அக்கணமே, அதை அஞ்ஞானக் கடலில் ஆழ்த்தி, அழல், உண்ணல் முதலியனவற்றிற்கு இலக்காக்கும் சடமெனும் வாயு இவரை அணுக, இவர் தம் வல்லமையினல் அதைக் கோபித்து ஒழித்துவிட்டனர். ஆதலால் இவர்க்குச் சடகோபர் என்னும் திருநாமம் உண்டாயிற்று.

இம்மகவு பதினறுண்டு கழிந்தும் பேசவில்லை. தாங்கள் செய்த வினை யாதோ எனவெண்ணிப் பெற்ருேர் மிகவும் துயருற்றனர். அச்சமயம் திருமாலினது திருக்கருணையால், சேனைத்தலைவர் அம்மகவுக்குத் திருமாலின் மகிமையையும், சகல மந்திரங்களையும் உபதேசித்தனர். சகல கலைகளும் உணர்ந்த இப்பெரியார் அந்த உறங்காப்புளி நிழலிலே பதுமாசனமிட்டு உட்கார்ந்து, திருமாலின் பெருமகிமையை நினைத்து யோகு செய்திருந்தனர்.

இவர் இங்ஙனமிருக்கத் தீர்த்த யாத்திரை போயிருந்த மதுரகவி என்னும் பெயரையுடைய பெரியார், இவரது வல்லமையைக் கேள்வியுற்று, இவரையடைந்து, சடம்போல் இருந்ததைக் கண்டு இவர்க்கு உணர்ச்சி உளதோ, இலதோ என உய்த்துணருமாறு இவர் முன் ஒரு கல்லை எறிய, உடனே இவர் கண்விழித்துப் பார்த்தனர். பின்னர், 'இவருக்குப் பேசுமாற்றல் உளதோ' என அறியுமாறு, 'அசித்தாகிய சரீரத்திலே, அணுவைப்போலுள்ள ஆத்துமா சம்பந்தித்தால் அது எதனை அனுபவித்து எங்கே இருக்கும்?' என்னும் கருத்துடன், 'செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால், அது எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?' என, உடனே இவர், 'அத்தைத் தின்று அங்கே கிடக்கும்' என்றார். அதனைக் கேட்ட மதுரகவியார் அகமிக மகிழ்ந்து அவரது திருவடிகளில் முடிபட வணங்கி, 'அடியேற்கு இதமான புருஷார்த்தங்களை உபதேசித் தருள்க' என வேண்டினர்.

அங்ஙனமிருக்க, வைகுந்த நாதர் சடகோபருக்குக் காட்சி கொடுக்கக் கருடன்மீது இலக்குமியுடன் ஆரோகணித்து அற்புதவழகுடன் ஆங்குத் தோன்றினர். அங்கே நூற்றெட்டுத் திருப்பதிகளிலுள்ள தேவர்களும் ஆழ்வாருக்குத் தரிசனம் தந்தனர். அப்பொழுது அப்பரம பக்தர் சாம வேத மொழிந்த மற்ற வேதங்களின் தாற்பரியத்தைத் திருவாசிரியம், திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்னும் பிரபந்தங்கள் வாயிலாகப் பிரசித்தப்படுத்திச் சாம வேதத்தைத் திருவாய் மொழியாற் செய்து மதுரகவியார்க்கு உபதேசித்தனர். யாவரும் ஆங்குற்ற பெரியாரைப் 'பொலிக பொலிக' என வாழ்த்தினர்.

தமது சமீபத்தில் உலக நாயகர் வந்து தந்த மகிழ-மலர்மாலையை யணிந்ததால், வகுளாபரணர் எனவும், பிற மதமாம் மதயானையைத் தம் பிரபந்தமென்னும் அங்குசத்-தால் அடக்கியதுபற்றிப் பராங்குசர் எனவும், அரங்க நக-ருறையும் பெருமாள் நம் சடகோபனைப் பாடினையோ?' என இராமாயணம் அரங்கேற்றுகையில், கம்பரை வினவிய போது, கடவுளாலேயே நம் எனப் பாராட்டப்பெற்றன-ராதலின், நம்மாழ்வார் எனவும் பெயர்பெற்ற இப்பெரியார் கடவுளின் தன்மையையும், ஜீவநிலையையும் ஜீவன் பரமாத்-மாவை யடையும் வழியையும் வெளியிட்டு, முப்பத்தைந்து வயது வரையிலுமிருந்து பின்னர் அந்தமில் இன்பத்து அழிவில் வீடெய்தினர்.

இப்பெரியார் மற்றைய ஆழ்வாராதிகள் போலல்லா-மல், பிறக்கும்போதே ஞான பக்தி வைராக்கியங்களுடனி-ருந்ததால், யாவர்க்கும் தலைவராகக் கொண்டாடப்படுகிறார். இவரது பெருமையை விரித்துரைக்கும் நூல் கவிச்சக்கர-வர்த்தியாகிய கம்பரால் இயற்றப்பட்ட சடகோபரந்தாதியே ஆம். எம்பெருமானை வணங்கும்பொழுது அஞ்சலி செய்யப் படும் கரங்கள் உயர்வதினும், இவர் நாமப் பாசுரங்கள் ஓதப் படும் காலத்தில் அதிக முயர்த்தப்படுவதே, இவரது பெரு-மையை நன்கு விளக்கும்.

18. இந்திய இராஜாங்க காரியதரிசி

இந்தியா தேசமானது மாட்சிமை தங்கிய 5-வது ஜார்ஜ் சக்கரவர்த்தி யவர்களால் ஆளப்பட்டு வருகிறதென்பது நாம் அனைவரும் அறிந்த விஷயம். இவர்கள் அரசாட்சி பல அங்கங்களை யுடையது. இவர்களுக்குக் கீழுள்ள *ஹௌஸ் ஆப் லார்ட்ஸ் † ஹௌஸ் ஆப் காமன்ஸ் என்ற இரு சபைகள் அடங்கிய பார்லிமெண்ட் என்ற மகாஜன சபையின் உதவியால் இது ஆளப்படுகின்றது. இந்து தேச ராஜ்யத்தின் நன்மைகளைத் தேடுவதற்கும், மேல் விசாரணை செய்வதற்கும், இங்கே நடக்கும் காரியங்களை உள்ளபடி அறிந்து ஆங்கிலேய துரைத்தனத்தாருக்குத் தெரிவிப்பதற்கும், இங்கிலாந்தில் சில அதிகாரிகள் இருக்க வேண்டியது அவசியமானதால், அங்கே இந்திய காரியதரிசி ஒருவரை நியமித்து அவருக்கு ஓர் உத்தியோக சாலையும் அமைத்திருக்கின்றனர். அதற்கு இந்தியா ஹௌஸ் என்று பேர். இது பார்லிமெண்டார் கூடும் கட்டிடத்திற்குச் சமீபத்தில் ‡ ஒவிட் ஹால் என்ற கட்டிடத்தில் இருக்கிறது. அதன் படம் அடுத்த பக்கம் அச்சிடப்பட்டிருக்கிறது பாருங்கள்.

இந்த இந்திய காரியதரிசிக்கு ஏறக்குறைய பதினைந்து அங்கத்தினர் அடங்கிய ஒரு மந்திராலோசனைச் சபை உண்டு. அவர்கள் ஆவார் $ இந்திய இராஜாங்க காரியதரிசி ஒருவர், அண்டர் செக்ரட்டேரிகள் 2 பேர், சாதாரண அங்கத்தினர்கள் 12 பேர். ஆக ·15 பேர். இந்தச் சபையின்

---

* House of Lords. ‡ House of Commons
‡ Whitehall. $ Secretary of State for India.



ஓவிட் ஹால்.

அங்கங்களாக இருப்பவர்கள் இந்தியாவில் 10 வருடத்-துக்குமேல் வசித்து, இந்நாட்டின் விஷயத்தில் அதிக அனுபோகமுற்ற சமர்த்தராக இருப்பவர்களே.

இப்பொழுது மூன்று இந்திய கனவான்கள் இச்சபை-யின் அங்கத்தினராக நியமனம் பெற்றிருக்கின்றனர். இச்-சபைக்கு வருஷச் செலவு 250,000 பவுன். இத்தொகை இந்தியாவின் அரசிறைத் தொகையிலிருந்தே செலவு செய்யப்படுகிறது.

கேட்கப்படும் விஷயங்களில் தங்கள் அபிப்பிராயத்-தைச் சொல்லவும், காரியதரிசி கொடுக்கும் வேலையைச் செய்யவுங்கூடுமே யன்றி, தாங்களாகவே ஒரு காரியத்-தைச் செய்ய இவ் அங்கத்தினர் அதிகாரம் பெற்றவர்கள் அல்லர். இச்சபையின் அபிப்பிராயம் காரியதரிசியைக் கட்டுப்படுத்தமாட்டாது ஆனால் இவர்களுடைய சம்மத-மில்லாமல் காரியதரிசி இராச்சியச் செலவுகள் செய்யக் கூடாது. அந்தரங்கமாக நடத்தவேண்டிய அரசு முறை-களில் அங்கத்தினருக்குத் தெரிவிக்காமலே எந்தக் காரியத்தையும் காரியதரிசி செய்து முடித்துவிடலாம். இந்தி-யாவின் சம்பந்தப்பட்டவரை சட்ட விஷயமாயும், பண விஷயமாயும் அடக்கி ஆள இவருக்கு அதிகாரமுண்டு. ஆனால் இவ்விஷயங்களில் இவர் சக்கரவர்த்தியவர்களுடன், காபினெட், பார்லிமெண்டு இவைகளின் மூலமாகக் கலந்து கொண்டு, அவர்கள் அனுமதிப்படி நடப்பார். இந்தியா-வுக்கு கவர்னர்களையும், ஹைக்கோர்ட்டு ஜட்ஜு போன்ற உயர்ந்த உத்தியோகஸ்தர்களையும் நியமிப்பதில் சக்கர-வர்த்தியவர்களுக்குத் தம்முடைய அபிப்பிராயத்தைக் காரியதரிசி தெரிவிக்கலாம்.

பிரிட்டிஷ் இராஜாங்கத்துக்கு, முதல் மந்திரியும் உபமந்திரிகளும் சேர்ந்துள்ள சபையைக் காபினேட் என்று சொல்லுகிறார்கள். இச்சபையில் இந்திய காரியதரிசி ஒரு அங்கத்தினர். பார்லிமெண்டில் ஜனப்பிரதிநிதிகளாற் கேட்கப்படும் கேள்விகளுக்கெல்லாம் இவரே உத்தரம்சொல்லி, இந்திய வரவு செலவு விஷயங்களை அவர்கள் ஒப்புக்கொள்ளும்படி செய்வதுமல்லாமல், இந்து தேசத்திலுள்ள சட்ட நிர்மாண சபைகளிற் செய்யப்படும் தீர்மானங்களுக்குத் தம்முடைய சம்மதத்தைக் கொடுத்து, ஆங்கில அரசருடைய அபிப்பிராயத்தையும் கலந்துகொள்ள வேண்டும். சுருக்கமாய்ச் சொல்லப்போனால், இந்தியாவின் அரசாட்சிக்குப் பொறுப்பான அதிகாரிகள், இந்திய காரியதரிசியும், பார்லிமெண்டு மகாசபையும், மாட்சிமை தங்கிய நமது சக்கரவர்த்தியவர்களுமே ஆவர்.

---

19. கரிகாற் சோழன்.

நீர்வளமும் நிலவளமும் நிரம்பிய சோணாட்டின் தலைநகர் உறையூர். அந்நகர் கல்வியும் செல்வமு மிக்கது. அங்கொரு காலத்தில் இளஞ்சேட் சென்னி என்னும் மன்னவன் ஒருவன் அரசாண்டான். அவன் அழுந்தூர் வேள்மான் மகளை மணஞ்செய்து கொண்டவன். அவனாட்சியில் குடிகளுக்கு ஐவகைப் பயமும் இல்லை.

இந்நிருபனுக்கு ஒரு அருமைப் புதல்வன் தோன்றினான். அம்மகவை மடிமீதும் தோள்மீதும் முடிமீதும் தாங்கிப்பெற்றோர் வளர்த்தார்கள். உரிய பருவத்தில் அவனைப்

பள்ளியில் வைத்தார்கள். கல்வி கேள்விகளிலும், படைப்பயிற்சி முதலியவற்றிலும் அவன் சிறந்து விளங்கினான். சில வருஷங்களில் இளஞ்சேட்சென்னி இறக்கவே, அவன் உறவினருள் ஒருவன் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டு, சோழன் மகனைக் கொல்லவும் வழிதேடினன். அதனை யறிந்த இளைஞன் தான் உயிர்தப்புமாறு பல இடங்களும் சென்று கடைசியிற் கரூரில் வந்து மறைந்து வசிக்கலானான். அரசை அபகரித்துக்கொண்டவன் கொடுங்கோலனாதலின், குடிகள் அவனைப் பலவிதத்தும் துன்புறுத்திக் காட்டுக்கு ஓட்டிவிட்டனர்.

பின்னர், உறையூரிலிருந்த அறிஞர் ஒருங்குகூடித் தமது நாட்டை ஆள ஒரு நல்ல அரசனைப் பெறக்கருதி அவ்வூர் ஆலயத்துட் சென்று இறைவனைத் துதித்து, 'எந்தாய்! தக்க அரசன் இல்லாத இந்நாடு பெரிதும் வருந்துகிறது. எமக்கோர் செங்கோல் வேந்தனை அளித்தருள்க' என்று வேண்டினர். அப்போது, 'கழுமலத்து முழுமுதற் கடவுளைத் தொழுது அக்கோயில் யானையையே ஒரு பார்த்திபனைத் தேடிக் கொணருமாறு அனுப்புமின்' என்று ஓர் அசரீரி வாக்குத் தோன்றியது. அங்ஙனமே அவ்வறிஞர் சீர்காழி நகர் சென்று இறைவனை ஏத்தி அசரீரி கூறியவாறு செய்தனர்.

புரவலனைத் தேடிப் புறப்பட்டுச் சென்ற அந்த யானை கரூர்வந்து அங்குக் கரந்துறையும் அரசனைக் கண்டு துதிக்கையால் அவனைத் தூக்கித் தன் பிடரியில் ஏற்றிக்கொண்டு உறையூர் வந்து சேர்ந்தது. சோழும், யாவரும் மகிழ்ந்து அச்சிறுவனை அரியணை மீதேற்றினர். வயதில் இளையான் ஆன அவன், செங்கோல் செலுத்தும் திறமையிலும் எவர்க்

கும் இளையான் என்றுலகம் போற்ற இறைமை புரிந்தான். ஆயினும், நாடிழந்த கொடுங்கோலன் இளஞ் சோழனது இறைமையிற் பொறாமை கொண்டு, பல அரசர்களை அடுத்து அவர்கள் படைத்துணையால் உறையூரைக் கைப்பற்றிச் சிறுவனைச் சிறையிட்டுச் சிங்காதனத் தமர்ந்தனன். அரசிளங் குமரனும் தனக்காம் கால நோக்கி அருஞ்சிறையில் வருந்தி இருந்தனன்.

சின்னாட்களுக் கெல்லாம், அக்கொடுங்கோலன், சோழன் மகன் இறந்தொழியுமாறு சிறைச்சாலையில் தீயிட்டனன். ஆயினும் அவன் எண்ணம் பலிக்கவில்லை. சிறைப்பட்ட சிறுவன் தன் தாள்வலியால் தாளிட்ட கதவைத் தூளாக்கினான்; கேளாரை வாளாலே வீழ்த்திக் கோட்டை முதலியவைகளைத் தாண்டி, நாட்டார் அகமகிழ வியாக்கிரமென ஆக்கிரமித்து நின்றான். அவன் தீயினின்றும் தப்பி வருங்கால் காலில் ஒரு பாகம் கரிந்து போயினமையின், அவனைக் கரிகாலன் என்று யாவரும் இயம்பலாயினர்.

கரிகாலன் வெளிப்பாட்டை உணர்ந்த வெங்கோல் வேந்தன், தன் சேனைகளோடு வந்து எதிர்த்துப் பொருது பின்னிட்டான். அவனது வீரர்களிற் சிலர் ஓடினர், சிலர் உரு மாறினர். சிலர் பிணக்குவைகளில் ஒளித்துக் கொண்டனர். பலர் பின்னிட்டார்க்கு முன்னிட்டனர். சிலர் கையிழந்தனர். சிலர் காலிழந்தனர். வேறுபலர் கரிகாலனைச் சரணம் அடைந்தனர். இவ்வாறு தனது சேனை சிதறுண்டதால் மனமுடைந்த தகவிலா மாற்றரசன், மானமுந்தவந்து தன்னந்தனியே பொருதான். கரிகாலன் அவன் சென்னியைச் சேதித்து செயத்தம்ப நாட்டிச் சிங்கமெனச் சிங்காதனத்தமர்ந்தனன்.

தன்னாட்சியை மீண்டும் எய்திய கரிகாலனுக்குத் திக்கு விசயத்தில் விருப்பமுண்டாயிற்று. நால்வகைச் சேனைகளும் நாற்கடல்போற் சூழ்ந்துவர, நன்னாளில் தென்திசை நோக்கிச்சென்று மதுரையை முற்றுகை இட்டான். இடலும், பாண்டியன் அரிகாணும் கரியென அஞ்சித் திறையளந்தான். பிறகு மேற்றிசை நோக்கிச் சென்று வழியில் தன்னை எதிர்த்தோரை இறுமாப்படங்க வென்று, வஞ்சி நகரைச்சூழ்ந்தான்.

அந்நகர வேந்தனாகிய பெருஞ்சேரலாதன், அவனை எதிர்த்துத் தோற்றுப் புறப்புண் நாணி உயிர்துறந்தான். பிறகு, இடையில் எதிர்த்த மன்னவரையும், குறுநிலக் நரிசிலரையும் மறுநிலமன்னராக்கி வெற்றிமாலை விளங்க வடதிசை நோக்கிச் சென்றான்.

ஆங்கு ஆரியநாட்டு மன்னவர் பலரை மேற்கொண்டு தன்போக்குக்கு இடையூறாகநின்ற இமயவரையைச் செண்டு என்னும் படையால் திரித்து, அதன்மேல் அவனுக்குரிய புலிக்கொடியை நாட்டித் திரும்பி வச்சிரநாட்டு வேந்தனையும், அவந்திநாட்டு அரசனையும், மகதநாட்டு மன்னவனையும் வென்று விளங்கினான். இங்ஙனமே இமசேது உள்ளிட்ட உலகம் முழுதும் தன் கீழ்ப்படுத்தி, வெற்றிச் சின்னங்கள் முழங்கவும், அந்தணர் வாழ்த்தவும் உறையூரிற் புகுந்தான். நாமகள் நாவிருக்கவும், சயமகள் புயத்திருக்கவும், மாமகள் மார்பில் விளங்கவும் கரிகாலன் பின்னர் மன்னர்மன்னனாய் மாநிலம் முழுதும் ஒரு குடையின்கீழ் ஆண்டனன்.

சிறுபருவத்திலேயே திக்குவிசயம் செய்து விளங்கிய இவ்வளவனது அவையைச் சில முனிவர் ஒருநாள் வந்து

அடைந்தனர். அடைதலும், செம்பியன் அவர்களை எதிர் சென்றழைத்துஉபசரித்து, நீங்களிங்குவந்தது என் மாதவப் பயனே! வந்த காரணம் யாதோ?' என்று விசாரித்தான். முனிவர் அவனை நோக்கி, 'உனக்கோர் இதம் கூறுதற்கு இங்கு வந்தோம்; இவ்வுலகில் இடம் பொருள் ஏவல் அறிவு வலிமை முதலியவற்றால் ஒருவருக்கு எவ்வளவு ஏற்றம் ஏற்பட்டு இருப்பினும் மக்களில்லை யாயின், அவையாவும் பயனற்றனவாம். ஆதலின் நீ விரைவில் ஒரு மனைவியை யடைந்துமக்கட்பேற்றைப்பெறுக' என்று கூறிச்சென்றனர்.

அவ்வான்றோர் ஆணையைத்தலைமேற்றாங்கி நாங்கூர்வேள் மகளை நல்லோரையில் அவன் நன்மணம் புரிந்துகொண்டு, உலகத்திற்கோர் தந்தைதாய் என்னுமாறு ஒரே சந்திர வட்டக் குடையின் கீழ் நீண்டகாலஞ் செங்கோல் செலுத்தி வந்தனன். அக்கால் இவ்வளவன் உறையூரைவிட்டுக் கடற்கரை யடுத்த காவிரிப்பூம் பட்டினத்தைக் கட்டி அதைத் தலைநகர் ஆக்கினான். அப்பட்டினம் இருபிரிவாகக் கட்டப்பட்டது. கடற்கரையடுத்த பாகம் மருவூர்ப்பாக்கம் என்றும் அதற்குக் குடக்கிலிருந்த பாகம் பட்டினப்பாக்கம் என்றும் பெயரிடப் பெற்றன. பட்டினப் பாக்கத்திற் கரிகாலனது அரண்மனை இருந்தது. மருவூர்ப் பாக்கத்தில் பல தொழிலாளரும், வர்த்தகர்களும் குடியேறியிருந்தனர். இவ்விரு பாகங்களுக்கும் இடையில் உள்ள வெளியிடத்தில் ஒரு சந்தை கூடி இருந்தது. இது நிற்க.

ஒருநாள் இருவர் தங்கள் வழக்கை எடுத்துரைக்கக் கரிகாலன்பாற் சென்று, அவன் இளையவனாக இருத்தலை நோக்கி 'இவன் நீதியை ஆய்ந்து உரைக்கும் ஆற்றல் பெறா இளைஞன்' என்று பேசிக்கொண்டே திரும்பிவிட்டனர்.

அதனை அறிந்த அரசன் அவர்களை அழைத்து, 'என்பால் வந்த நீங்கள் எதும் சொல்லாது திரும்பியதற்குக் காரணம் யாது?' என்று வினவினன். அவர்கள், 'எங்கள் வழக்கைக் கூற வந்தோம். நீதி கூறுபவர் மனுமுறையிற் சிறந்து, வந்தவர்கள் செயலைக் கண்டறிந்து, நுட்ப புத்தி மிகவாய்ந்து, உள்ளத்தைத் துலாக்கோல் ஆக்க வல்ல முதியவராக இருக்கவேண்டும். ஆண்டில் நீ சிறியனாதலால், உன்னிடம் நீதிபெறமுடியாதென்று நாங்கள் திரும்பினோம்' என்றார்கள்.

இதனைக் கேட்ட பொன்னி நாடன், 'அன்பரே! நீவிர் விரும்பியவாறு சூழ நரைத்த ஒரு கிழவனையே வழக்கைத் தீர்க்கச் சொல்லுகிறேன். நாளையேவந்து வழக்கைச்சொல்லி நீதியைப் பெறுக' என்றுரைத்தான். மறுநாள் அவ்விருவரும் நீதித்தலம் அடைந்தனர். ஆங்கு ஐங்குழுவோர் தன்னைச் சூழ்ந்திருக்க ஒரு கிழ நீதிபதி ஆதனத் தமர்ந்திருந்தனன். வழக்குரைப்போர் அவன்பால் தத்தம் வழக்கைப் பின்வாங்காமல் எடுத்துரைத்தனர். அவர்கள் கூறியவற்றில் உண்மை இதுவென உய்த்துணர்ந்த முதியவனான நீதிபதி, எள்ளின்காய் பிளந்ததுபோல் நியாயமுடிவை எடுத்தியம்ப, வழக்கில் தோற்றோனும் அவன் கூறிய முடிவால் மனமகிழ்ந்தான்.

அந்த வேளை கிழவுருவுடன் இருந்த அந்நீதிபதி, கண்டோர் யாவரும் வியக்குமாறு அக்கிழவுருவை நீக்கி இளவுருவுடன் அவர்முன் நின்றார். அவன் யாரென அறிவீர்களோ? அவனே நம் கரிகாற் புரவலன் என்னும் காவலர் பெருந்தகை! அவனது செயலைக் கண்டோர் யாவரும் பெரிதும் கொண்டாடி, 'சோழகுல விச்சை கல்லாமற் பாகம் படும்' என்று ஒருசேர எடுத்தியம்பிச் சென்றனர்.

20. இராமன் வனம் அடைதல்.

இராமனுக்கும் அவன் தம்பியர்க்கும் கடிமணம்முடிந்த கொஞ்ச காலத்தில், தசரதன் இராமனுக்கு முடிபுனைந்துவிட்டுத் தவம் செய்ய நிச்சயித்தான். ஒருநாள் கொலுமண்டபத்தில் தன் குலகுருவாகிய வசிஷ்ட முனிவரும், சுமந்தரன் முதலிய மந்திரக்கிழவரும் கூடியிருந்தனர். அப்போது அத் தசரத சக்கரவர்த்தி, அவர்களை நோக்கி, 'உங்கள் உதவிபெற்று இவ்வளவு காலமும் நீதிமுறை வழுவாது அரசு புரிந்தேன். நீண்டகாலம் பிள்ளை யில்லாமலிருந்து, அரிய யாகம் செய்து இராமன் முதலியோரைப் புத்திரராக அடைந்தேன். இவ்வுலகில் துய்க்கவேண்டிய எல்லா நன்மைகளையும் துய்த்தேன். இராமன் சீதேவியை மணம்செய்த சிறப்பைக் கண்டு களித்த என் கண்கள், அவன் பூதேவியையும் மணஞ்செய்துகொள்வதைக் காண அவாவுகின்றன. அவனுக்கு மகுடாபிஷேகம் செய்துவிட்டு, என்னுயிர்க்கு உறுதிதரும் தவத்தைத் தாங்க எண்ணுகிறேன்' என்றான்.

யாவரும், மன்னர் மன்னனது மனநிலையின் மேன்மையை உணர்ந்து, ஒருவாறு அதற்கிணங்கினர். அரசன் சோதிடரை அழைப்பித்து, மகுடாபிஷேகத்திற்கு ஏற்ற முகூர்த்த நாளைக் குறிப்பிடச் சொன்னான். அவர்களும் அங்ஙனமே கணக்கிட்டு, 'நாளைத் தினமே காளைக்கு முடி சூட்டுதற்கு ஏற்ற நாள்' என்று களிப்புடன் கூறினர். அரசன் வசிஷ்டரை வணங்க அதற்கு வேண்டியவற்றைச் சேகரிக்கச் சொன்னான்.

இந்த விஷயத்தை அறிந்தாள் மந்தரை என்னும் கூனி, அவள் கைகேசியின் பணிப்பெண். இராகவன் சிறுவனும்

இருக்கும்போது, அவள் கூன்மேல் வில்லுண்டை எறிந்த காரணத்தால், அவன்மேல் உட்பகை வைத்திருந்தாள். அவனுக்குத் தீங்கு விளைப்பதற்கு ஏற்ற காலத்தை எதிர்பார்த்திருந்த அத்தீயள், அடுத்து வைத்துள்ள பட்டாபிஷேகத்தைக் கெடுத்துவிட எண்ணிக் கைகேசிபாற் சென்றாள். அச்சமயம் கைகேசி அயர்ந்து தூங்குவதையும் நினையாமல், அவளைத் தட்டி எழுப்பி, 'என்ன அம்மா! தூங்குகிறாயே? உனக்குக் கேடுகாலம் குறுகிவிட்டது அம்மா!' என்றாள்.

கைகேசி எழுந்து அவளை வெகுண்டு, 'என் கணவனும், நான்கு வேதங்களை யொத்த இராமன் முதலிய நான்கு புத்திரர்களும், தமக்கை கோசலையும், தங்கை சுமித்திரையும் சௌக்கியமா யிருக்கையில், எனக்கு என்னடி கேடுண்டாகும்? என்ன பிதற்றுகிறாய்?' என்றாள். கொடுமனக் கூனி, 'அம்மா உனக்குத் தெரியாதா? விடியற்காலம் உன் சக்களத்தி மகனாகிய இராமனுக்கு மகுடாபிஷேகம் நடக்கப்போகிறதே' என்றாள்.

இச்சொற்களைக் கேட்ட கைகேசி மனம் மிகக்களித்துத் தன் கழுத்தில் அணிந்திருந்த உயர்ந்த முத்துமாலையை எடுத்து, இராமனுக்கு நாளை மகுடாபிஷேகம் என்று சொன்ன உனக்கு இதைப் பரிசளிக்கின்றேன்' என்று கூறிக் கொடுத்தாள்.

மந்தரைக்குக் கோபமும் பெருமூச்சும் உண்டாயின. நிலம் குழிய அந்நிலத்தில் மாலையைச் சுழற்றி எறிந்தாள். 'அடி பேதாய்! நீயும் உன் தனயன் பரதனும், உன் மாற்றாளாகிய கௌசலைக்கு ஊழியம் செய்ய நான் தரியேன். இராமன் அரசைப் பெற்றால், உங்களுக்கு இங்கென்ன மரி-

யாதை உளது? இராமனும் சீதையும் சிங்க வணையில் சிறந்து வீற்றிருக்க, உன் மகன் வெறுந்தரையில் இன்னல் அடைந்து வீற்றிருக்கப் பார்த்துக்கொண்டிருப்பதில், உனக்குச் சந்தோஷமா? ஐயோ! உன் வயிற்றிற் பிறந்ததினால், பாதன் பிறந்தும் பிறவாதவன் ஆயினன். அவன் இருப்பதினும் இறப்பதே நன்று' என்றாள். பிறகும் 'பரதா! உன்னைச் சக்கரவர்த்தி கேகயநாட்டிற்கு அனுப்பியதன் உண்மை இப்போதுதான் தெரிந்தது. உன்னை நெடுந்தூரம் போக்கிய தந்தையும் கொடியன். உன்னைப்பெற்ற தாயும் கொடியள். குழந்தாய் பரதா! என்ன செய்யப்போகிறாய்?' என்று அரற்றினள். அப்பால் கைகேசியை விளித்து, 'அம்மா! அரசர் குடியிற் பிறந்து, அரசர் குடியிற் புகுந்த நீ, இன்னற் கடலுள் வீழ்கின்றாய். என் சொற்களைத் தள்ளுகின்றாய்' என்றாள்.

கூனியின் கொடுமொழிகள் கைகேசி செவியில் நாராசம் காய்ச்சி ஊற்றியதுபோல் இருந்தன. அவள் முகத்தைப் பார்க்கவும் கைகேசி விரும்பவில்லை. தன் தாதியாதலால் ஒருவாறு பொறுத்துக்கொண்டு அவளைப் பார்த்து, 'அடி பொல்லாதவளே! ஏற்கனவே உன்னுடல் கூனியுள்ளதுபோல, இப்போது உன் மனமும் கூனியுள்ளது. நீ சொன்ன வார்த்தைகளை வேறு யாரேனும் கூறியிருப்பின், அவர்கள் நாவை அறுத்துக் காரம் வைத்திருப்பேன். நீ யாதலின் பொறுத்தேன். கொடியவளே! நீ எனக்கேனும் என் மகன் பரதனுக்கேனும் நல்லையல்லை. அதர்மத்தைப் போதிப்பதால், நரகம் அடைவாய். ஆதலின், நீ, உனக்கும் நல்லையல்லை. உன் தீவினை தூண்ட இங்ஙனம் கூறினை.

மூத்தவன் இருக்க, இளையவன் அரசாளல் இரகு குலத்-துக்கு ஏற்றதாகுமா? இனி என்முன் நில்லாது ஓடிப்போ' என்றாள்.

இச் சினமொழிகளைக் கூனிகேட்டும் அப்பாற் செல்லாமல், அவள் அடிகளில் விழுந்து வணங்கி, "அம்மா! உனக்கு உறுதி கூறாமல் ஒழியேன். மூத்தவனுக்கே அரசு உரியதென்றாய். மூத்தவராகிய சக்கரவர்த்தி இருக்கும் போது, இளையவனாகிய இராமன் முடிசூட இசையவில்லையா? அங்ஙனமாயின், இராமன் இருக்கப் பரதன் ஏன் முடிபுனையக் கூடாது? 'அருள் நிரம்பிய அருளுடை அருந் தவர்க்கேனும் பெறலரும் திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்' என்பர். இராமனும் அவனைச் சேர்ந்தவர்களும், உன்னையும் பரதனையும் இப்போது நடத்துவதுபோல் பின்னரும் நடத்துவார் என்று எண்ணுகிறாயா? அது ஒரு நாளும் இல்லை" என்று இங்ஙனம் பல விஷயங்களைக் கல்லும் உருகும்படி எடுத்துரைத்தாள்.

அவற்றை யெல்லாங்கேட்ட கைகேசி மனம் மாறுபட்டு, மந்தரையை நோக்கி, 'தோழி! நீ கூறுவது உண்மைதான். ஆயினும் பரதன் முடிபுனையுமாறு செய்வது எங்ஙனம்? சொல்' என்றாள். மந்தரை, "அம்மா! நீ என்மொழியை அங்கீகரித்தால் எல்லா உலகங்களையும் உன் மகனுக்குச் சொந்தமாக்குவேன். சம்பராசுரனொடு உன் கணவன் போர்புரிகையில் நீ இரதம் ஊர்ந்தாய் அல்லவா? அன்று சக்கரவர்த்தி உன் சாமர்த்தியத்திற்கு மெச்சி இரண்டு வரங்களை நீ கேட்கும் சமயம் அளிப்பதாகச் சொல்லியது உன் ஞாபகத்திருக்குமே? அவற்றில் ஒன்றால் 'இராமன் பதினான்கு வருஷங்கள் காட்டுக்குப்போக.

வும், மற்றொன்றால் உன் மகன் பதினான்கு வருஷங்கள் உலகத்தை ஆளவும் வேண்டும்' என்று கேட்டுக்கொள்'' என்றாள். கைகேசியும் அங்ஙனம் செய்ய உடன்பட்டனள்.

அன்றியும் தசரதன் தன் அரண்மனை அடையவே, அலங்கோலத்துடன் இருந்த கைகேசி ஏதோ தான் ஒரு குறை உள்ளவள்போல் நடித்து, முடிவில் தசரதனிடம் அவன் முன் கொடுப்பதாகச் சொன்ன வரங்கள் இரண்டையும் வேண்டினள். அவள் கேட்கும் வரங்கள் யாவெனத் தசரதன் கேட்டனன். கூனி கூறியபடி, கைகேசி வரங்களை வேண்டினள். அப்போது தசரதனுக்கு உண்டான துக்கத்துக்கு அளவில்லை, ஆயினும், அவன் கைகேயியை நோக்கி, 'என்னருமைக் கேகயன் மகளே! நீ கேட்கும் வரங்களை நான் கொடுத்தால் இராமனைப் பிரியநேரிடும். அதனால் என் உயிரும் நீங்கும். ஆதலால் நீ கூறிய வரங்களைவிட்டு வேறு எவ்வரங்களையும் கேள். நான் தரக் காத்திருக்கிறேன்' என்று வேண்டினான்.

கைகேசி, 'அரசே! தங்கள் குலத்துதித்த அரசர்கள் இதுவரை சொன்னசொல் தவறாதவர்கள். தாங்கள் தருவதாக வாக்களித்த வரங்களைத் தரத் தயங்குகிறீர்கள்' என்றாள். தசரதன் அவள் பிடிவாதத்தை எண்ணி மனம் உளைந்து, 'அடி பாவி! நீ கேட்ட வரங்களைக் கொடுத்துவிட்டேன்; கொடுத்துவிட்டேன். இராமன் கானம் செல்லின், என்னுயிர் வானம் செல்லும். கன்னெஞ்சினள் ஆன நீ, இந்த உலகம் உள்ள அளவும் தீராத வசையை ஏற்றாய்' என்றுகூறி மூர்ச்சை அடைந்தான். கைகேசியோ தன் எண்ணம் பலித்தது என்று எண்ணிக் கவலையற்றுக் கண்வளர்ந்தனள்.

125874

மறுநாள், கைகேசி இராமனைத் தன் இல்லத்துக்கு வருமாறு சொல்லி யனுப்பினள். அவனும் அக்கணமே வந்து தன் அன்னையை வணங்கிநின்றான். அப்போது கைகேசி அவனை நோக்கி, 'இராமா! இவ்வுலக முழுவதையும் பரதன் ஆளவும், நீ மரவுரி தரித்துச் சடைமுடி தாங்கிச் சென்று பதினான்கு வருஷம் வனவாசம் செய்து திரும்பிவரவும் உன் தந்தை பணித்திருக்கின்றார்' என்றாள்.

அதனைக்கேட்ட இராமனது முகம் அப்பொழுது அலர்ந்த செந்தாமரைபோல் விளங்கியது. 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்பதை அவன் இதமாகக்கொண்டு நடப்பவன் ஆதலின், அப்பொழுது நாடுநீங்கிக் காடுசெல்ல நிச்சயித்து, 'அன்னையே! இப்பொழுது இட்ட கட்டளை என் பிதாவின் ஆணை அன்றாயினும், நான் மறுப்பேனோ? என் தம்பியடைந்த செல்வம் யான் பெற்றதன்றோ?' இதனைப் பார்க்கிலும் எனக்கு நன்மை தருவது யாண்டுளது?' என்று சொல்லி அவளைத் தொழுது தன் தந்தையைக் காணின், தனக்காக வருந்திக் காட்டுக்குப் போகவேண்டாமென்று சொல்லிவிடுவான் என்றஞ்சி, அவன்பால் விடைபெறுமுன், அவனிருந்த திக்கை நோக்கி வணங்கிவிட்டுத் தன் அன்னையை அணுகினான்.

அரச சின்னங்கள் ஒன்றுமின்றித் தன்னை அடைந்த இராமனைக் கோசலை பார்த்து, 'இராமா! நீ முடிபுனைதற்கு ஏதேனும் இடையூறு தோன்றிற்றோ?'' என, இராமன், 'அன்னையே! நின்மகனும் என் தம்பியுமாகிய பரதன் முடி புனைகின்றான்' என்றான். கேட்ட கோசலை ஆனந்தக்கடலில் மூழ்கினாள். பின்னரும் இராமன், 'தாயே! அரசனால் இன்னும்

ஒரு கட்டளையும் பெற்றுள்ளேன்: நான் பதினான்கு வருடம் தவவேடம் பூண்டு காடு செல்கின்றேன்' என, அவள் அதைக்கேட்டதும் ஏங்கினாள், இளைத்தாள், களைத்தாள், மனம் வீங்கினாள், விம்மினாள், விழுந்தாள். 'என்னப்பா! நீ காடேகில் நானிங்கு உயிர்வாழ்வேனோ? நீண்டகாலம் பிள்ளையில்லாது வருந்திப்பெற்ற உனக்குப் பட்டங்கட்டுவதாய் அரசன் கூறியது வஞ்சனையோ? அன்றி உன்மேல் அன்புகொண்ட தந்தைக்குத் தவறிழைத்தனையோ? என்றாள்.

அப்படி வருந்தும் தன்னன்னையைச் சொன்னயங்களால் தேற்றிப் பிறர்பால் விடைகொண்டு இராமன் வனமேக மனந் துணிந்து நின்றான். அதனைக்கண்ட இலக்குமணனும் சீதையும் அவனோடு காடுசெல்லத் துணிந்தனர். பலர் வேண்டாமெனத் தடுத்தும், இலக்குமணன் தன் எண்ணத்தையே திண்ணமாகக் கொண்டு பின் தொடர்ந்தான். இராமன் சீதையைத் தன்னைப் பின்தொடர வேண்டாமெனக் கேட்டுக்கொண்டனன். சானகியோ தன் புருஷன் நாடிழந்ததற்கும், காடுநாடற்கும் வருந்தாது, தன்னைப்பிரிந்து செல்வதாகச் சொன்ன கடுஞ்சொற் காதிற் படவே, அனலிற் பட்ட மெழுகு ஒத்து, உருகி, 'சுவாமி! தாய் கூறியதைச் செய்யத் தாங்கள் எண்ணியது எனக்கு ஆனந்தம் விளைத்தது. ஆயினும் என்னை இங்கு இருக்குமாறு சொல்லக் கேட்டது என் உயிரை வருத்துகிறது' என்றாள்.

இராமன், 'கண்மணி சீதா! இலக்குவனும் நானும் ஆடவர்; நீயோ பெண். ஆதலின் நீ எம்முடன் வருவாய் ஆயின், காட்டிற் பலவாறு துன்புறுவாய்; மலர்மேலேகும் மாண்புவாய்ந்த நின்பதங்கள், மணியாம் பருக்கைக் கற்கள்

காலிற் குத்தப்பெற்று வருந்துவாய். பூப்பந்தரின்கீழ் வசிக்கும் உன்னைச் சூரிய வெப்பந் தகிக்குமே' என, சீதை 'உங்கள் பிரிவாகிய அனலினும் வேறு பெருந்தீ அதிகம் வருத்துமோ?' என்று கூறி இராமனைப் பின்பற்றத் துணிந்தனள். அப்போது இராமன் சீதையை நிறுத்திச்செல்ல எண்ணினன். அக்குறிப்பைக் கண்ட சீதை, 'தேவரீர் காட்டுக்குச் செல்வதாகிய துன்பமானது என்னைப் பிரிந்திருத்தலால் குறையும்போலும்' என்று கூறிக் கண்ணீரால் கால் கழுவி நிற்க, இராமன் பிறிது மாற்றம் கூறாது, அவளைத் தன்னோடு வருமாறு கருணைகூர்ந்தான்.

மூவரும் நகரினின்று புறப்பட்டனர். பின்தொடர்ந்து வந்த சுமந்திரன் என்ற மந்திரி முதலியோரைத் திரும்புமாறு பணிந்தனுப்பிவிட்டு நடந்துசென்று கங்கைக்கரையை அவர்கள் அடைந்தனர். அங்கே பல படகுகளை ஓட்டும் ஆயிரம் பேர்களுக்குத் தலைவனான குகனைத் துணைபெற்று அந்த நதியைக் கடந்து சென்றார்கள். பலபல பேசிக்கொண்டே சென்ற இவர்கள் வழியில் பாரத்துவாசரின் ஆச்சிரமம் அடைந்து, அங்கிருந்து காளிந்தி நதியையும், கடம்பாலை வனத்தையும் தாண்டிச் சித்திரகூடம் அடைந்தார்கள்.

21. விஷபேதி.

பல்லாண்டுகளாக விஷபேதி அல்லது காலரா என்னும் கொடியநோய் நமது நாட்டிற் பலவிடங்களிற் பரவி அநேக மனிதரைத் தனக்கு இரையாக்கி வருகிறது. நீர் இறங்காமல் மிகுதியாகப் பேதியாகிறதே இதற்கு அறிகுறி. சிலர்க்குப் பேதியாவதுடன் வாந்தியாவதும் உண்டு. அடிக்கடி பேதி-

யாவதால் காலறாக் கண்டவர்கள் வலியற்றுச் சோர்ந்து போவதோடு கால் கை ஜில்லிட்டுச் சில மணிநேரத்தில் உயிரும் விடுகின்றார்கள். இந்த வியாதி, காளி அல்லது மாரியம்மனுடைய கோபத்தால் உண்டாகின்றது என்று பலர் நினைக்கிறார்கள். காலறாக் கண்டவர்க்கு மருந்து கொடுத்தால் அத்தெய்வம் கோபிக்கும் என்றெண்ணி மருந்தே கொடாமலிருப்பவர்களு முண்டு. இது அறியாமையே.

ஒருவிதக் கிருமிகள் நாம் உட்கொள்ளும் அன்னபானாதிகளுடன் வயிற்றுட் சென்று, அவை அதிவிரைவில் ஒன்று பலவாகப் பல்கி இந்த வாந்திபேதியை உண்டாக்குகின்றன. இந்தக் கிருமிகளை ஈக்களே நமது உடலுட் சேர்த்து விடுகின்றன. எங்ஙனமெனில், காலறாக் கண்டவர்களின் வாந்திபேதிகளின்மேல் இக்கிருமிகள் ஏராளமாயிருக்குமன்றோ? அவ்வசுத்தங்களை உணவாகக்கொள்வதற்கு ஈக்கள் அவற்றின்மேல் உட்காரும். அப்போது அக்கிருமிகள் ஈக்களைப் பற்றிக் கொள்ளுகின்றன. அந்த ஈக்கள் பிறகு நமது உணவின்மேல் உட்காரும்போது அக்கிருமிகளை உணவில் சேர்த்துவிடுகின்றன. அவை நமது உணவுடன் சென்று பல்கிக் காலறாவை உண்டாக்குகின்றன. எனவே, ஈக்கள் இல்லை என்றால், காலறா அதிகமாய்ப் பரவ வழியில்லை.

மற்றுமொரு விதமாகவும் இவ்வியாதி பரவுகின்றது. ஒரு ஊரில் காலறாக்கண்டால், அவ்வூரார் அசுத்தமான துணிகளை அவ்வூர்வழிச்செல்லும் நதிகளில்கழுவிச்சுத்தம் பண்ணினால், அதிலுள்ள கிருமிகள் ஜலத்துடன் சேர்ந்து, அந்நதி செல்லும் இடமெங்கும் செல்லுமன்றோ! அங்கங்கே அந்நீரைஉட்கொள்ளுவோருடைய குடலில் அக்கிருமிகள் சென்று

இவ்வியாதியை உண்டுபண்ணி விடுகின்றன. அவ்விதமே குளங்கள் முதலிய நீர்நிலைகளில் முற்கூறிய துணிகளைத் தோய்த்தலும் அந்த ஜலத்தில் இக்கிருமிகள் சேர்ந்து

விஷபேதிக் கிருமிகள்.

பல்கி, அதனை உட்கொள்ளுவோரைப் பீடிக்கின்றன. இவை-களைப் பூதக்கண்ணுடியாற் பார்த்தாலன்றி இவை சாதாரண-மாகத் தெரியமாட்டா. இங்குப் படத்திற்காட்டியுள்ள அக்கி-ருமிகள் இயற்கை உருவினும் 750 மடங்கு பெரியனவாகக் காட்டப்பட்டுள்ளன. அன்னபானுதிகள் மூலமாய் அன்றி, வேறுவிதமாக இக்கிருமிகள் நமது உடலிற் செல்லவழியில்லை.

இந்த வியாதி ஒரு ஊரில் இருக்கக்கண்டால், அங்குள்ள-வர்கள் தங்கள் வீடுகளில் நன்ருய் வேகவைத்த உணவு-களையே உட்கொள்ளவேண்டும். பழஞ் சோற்றையும், பழைய கறிகளையும் உண்ணல் ஆகாது. கடைகளில் மூடாமல் வைத்-திருக்கும் பக்ஷணங்களைச் சாப்பிடக்கூடாது. நீரை நன்ருய்க் காய்ச்சி ஆற்றி மூடிவைத்தே குடிக்கவேண்டும். இங்ஙனம் செய்தால், அவ்வூரில் விஷபேதி தலையெடாது ஒழியும். குடிக்கும் நீரில் பொட்டேஷ் பெரிமேங்னீஸ் என்னும் மருந்-தைக்கொஞ்சமாகப்போட்டுக் கலக்கிக்குடித்தால், நீரிலுள்ள கிருமிகள் அழிந்துபோம். அழுகிய காய் கனிகளையும், செங்-

காய்களையும், அழுகின மீன், இறைச்சி முதலியவற்றையும் வாங்கித்தின்றால், முதலில் அஜீரணத்தால் வயிற்றுப்போக்கு உண்டாகும். அது காலராவாகவும் மாறக்கூடும். ஆதலால் அப்பொருள்களை வாங்கி உட்கொள்ளல் ஆகாது. சாதாரண பேதிக்கு மருந்து சாப்பிடல் ஆகாது. ஒரு வேளை சாப்பிட அவசியம் ஏற்பட்டால், ஆஸ்பத்திரியில் மருந்துபெற்றுச் சாப்பிட வேண்டும்.

காலராப் பரவிய காலங்களில் தூங்காமல் நெடுநேரம் விழித்திருக்கக் கூடாது. வயிற்றைக் கம்பளியால் மூடி வைத்துக்கொள்ளவேண்டும். கிருமி சம்ஹாரிகளாகிய கிரிஸலின், லைஸால், பினைல் ஆகிய இவற்றில் ஏதேனும் ஒன்றைக் குளிர்ந்த ஜலத்தில் கலந்து புழைக்கடைகளிலும், மற்றும் அசுத்தமான இடங்களிலும் தெளித்தல்வேண்டும். புழைக்கடைகளையும், கிணற்றுப் பக்கங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்வதோடு வீடு முழுதையும் வெள்ளையடிக்க வேண்டும். அவ்வாறு செய்யின் விஷக்கிருமிகள் பரவா. கிருமிகளைக்கொல்லும் மருந்துகளை உபயோகிக்கும்பொழுது, அவை நமது ஆகாரத்திற் சேர்ந்துவிடாதபடி கவலையாய் இருக்கவேண்டும்.

இந்த நோய் நாகரிகமுள்ள நாடுகளிலும் சில வேளைகளில் தோன்றுதல் உண்டு. அங்ஙனம் உண்டானால் பல வைத்தியர்கள் ஒன்றுகூடி, அவ்வியாதி அங்குப் பரவுதற்கு உரிய காரணங்களை ஆராய்ந்தறிந்து, உடனே அவற்றை நீக்கிவிடுவார்கள். ஆனால் நமது நாட்டிற் சிலர் அத்தகைய காலங்களில் தூக்கத்தைப் போக்கிக்கொண்டு ஆடு கோழிகளைத்தெய்வங்களுக்குப் பலியிட்டுக் கரகமெடுத்து ஆடுகிறார்-

கள். அதனால் இந்த வியாதி ஒழியும் என்பது அவர்கள் எண்ணம். தெய்வபக்தி நல்லதுதான். ஆயினும் நமது அறிவீனத்துக்குத் தெய்வமென்ன செய்யும்? இது நிற்க.

இந்த நோய் பரவுதற்குக் காலரூக் கண்டவர்களிடம் இருந்துஉண்டாகும் அசுத்தங்களும் காரணமாதலால், அவற்றில் கிருமி சம்ஹார மருந்துகளை ஊற்றிச் சிறிது நேரத்தில் அப்புறப்படுத்தி நெருப்பிலிட்டு எரித்துவிடவேண்டும். அங்ஙனம் செய்வதாற் பக்கத்தில் உள்ளார் உணவுப்பொருள்களில் அவற்றிலுள்ள கிருமிகள் வருவதற்கு வழியில்லாமற் போம்.

இந்த வியாதி கண்டவுடனே, தக்க வைத்தியரை அழைத்துவந்து சிகிச்சை நடத்துவது அத்தியாவசியம். வைத்தியர் வரும்வரையில் சில மருந்துகளைக் கொடுத்தல் நலம். காம்பர்டைன், குளோரடைன் என்ற இரண்டு மருந்துகள் உண்டு. அவற்றில் ஏதேனும் ஒன்றைச் சுத்தநீரில் 10 முதல் 15 சிறுதுளிகள்வரை ஊற்றிக் கொடுக்கலாம். இங்குக் கூறிய அளவு, பதினாறு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே ஏற்றதாம். சிறு குழந்தைகளுக்கு ½ சொட்டுமுதல் 5 சொட்டுகள் வரை கொடுக்கவேண்டும். 'அளவுக்குமிஞ்சினால் அமுதமும் நஞ்சு ஆம்' என்ற பழமொழி இம்மருந்துகளுக் குரியது என்று அறிக. தாகம் அதிகமாக இருந்தால், உயர்ந்த சோடாநீரைத் தாராளமாய்ப் பருகக்கொடுக்கலாம். அது கிடையாவிட்டால், கொதிக்கவைத்துப் பிறகு ஜில்லென்று குளிரவைத்த நீரைக்கொடுக்கலாம். வாந்தி அதிகமாய் இருந்தால், கடுகை நன்றாய் அரைத்துத் துண்டுத் துணியில் அதைத் தடவி, மார்புக் குழியில் அப்பினால், அது நின்றுபோம்.

வியாதி வந்தபின் காப்போனினும், வருமுன் காப்பவனே விவேகி. ஆதலால் காலராக் கண்டபிறகு வருந்தி, ஒருவேளை குணமடைவதினும் வராமலே தடுக்கும் முறைகளைக் கவலையோடு கையாளுதல் அறிவின் பாற்படும்.

---

22. புஷ்பம்.

தாவரத் தொகுதியில், மலர் அல்லது புஷ்பம் மிகவும் முக்கியமான பாகம். மலர்களைக்கண்டு களியாத கண்களும், அவற்றில் ஈடுபடாத மனமும் இரா. மனிதர் மட்டுமேயன்றி மதுகரங்கள் முதலியனவும் அவற்றை விரும்புகின்றன. மனிதர் மனத்தைமலர்கள் எங்ஙனம் இழுக்கின்றன என்று பார்ப்போம். மலர்கள் யாவும் ஒரே நிறத்தைக்கொண்டன அல்ல. பூவரசம்பூ மஞ்சள் நிறமாயும், மல்லிகை வெண்மையாயும், முள்முருங்கை சிவப்பாயும், குவளை நீலநிறமாயும் உள்ளன. எல்லா மலர்களும் ஒரே மணத்தைக் கொண்டன அல்ல. சாதாரணமாக மல்லிகைப்புஷ்பத்தின் மணமும், ரோஜாவின் வாசனையும் ஒன்றுபோலிருப்பதில்லை. இவைபற்றியே நாம் மலர்களை விரும்புகிறோம். மதுகரங்களோ, மலர்களின் நிறத்தாற் கவரப்பட்டு, அவற்றுள் இருக்கும் இனிய தேன் போன்ற பொருளை உட்கொள்ளுவதால் அவற்றை விரும்புகின்றன.

நறுமணமும், பலநிறமும் கொண்டமையால், மலர்களை நாம் பறித்து மாலைகளாகத் தொடுத்து அணிகிறோம். மதுகரங்களுக்கு அவற்றிலுள்ள தேன் உணவாகின்றது. இவற்-

ருல் புஷ்பங்கள் பிற உயிர்ப் பிராணிகளுக்காகத்தான் உண்டாக்கப்பட்டுள்ளன என்று எண்ணலாகாது. தாவர-வர்க்கம் பெரும்பாலும் எவ்வாறு விருத்தியாகிறதென்று நாம் கவனித்தால் மலர்களின் பயன் நமக்குத் தெரியும். மா, மொச்சை என்ற தாவரங்கள் விதையிலிருந்து உண்-டாகின்றன. வாழை முதலியன பக்கத்தில் வெடிக்கும் கன்றுகளாலும், சர்க்கரைவள்ளி, கோவை முதலியன கிழங்குகளாலும், பூவரசு, முல்லை முதலியன கிளைகளை ஒடித்து வைப்பதாலும் விருத்தியாகின்றன.

வித்து அல்லது விதை எங்கிருந்து கிடைக்கிறதென்-பது உங்களுக்குத் தெரியுமா? வித்து பழத்திலிருந்தும், பழம் காயினின்றும், காய் பிஞ்சினின்றும், பிஞ்சு மலரி-னின்றும் படிப்படியாய்த் தோன்றின. எனவே, விதைக்கு மூலம் மலரையன்றி வேறில்லை. கத்திரி, மிளகாய் முதலிய காய்களின் அடியிற் பார்த்தால், இதழ்கள் ஒட்டிக்கொண்-டிருப்பதைக் காணலாம். இவற்றிற்குத்தான் புறவிதழ் என்று பெயர். காய் புஷ்பத்தின் பாகம் என்பதை அறி-கிறோம். புஷ்பமானது குருத்திலை உண்டாகும் இடத்தில் உண்டாவதாலும் உருவத்தில் இலையை ஒத்திருப்பதாலும், இலை அல்லது கிளையின் மாறுபாடு என்றே அதைச் சொல்-லலாம். ஆயினும் இலைகளின் தொழிலும், மலர்களின் தொழிலும் மாறுபட்டவை.

இலை செய்யும் காரியம் இன்னதென்று முன் வகுப்-பிற் படித்திருப்பீர்கள். அது தனக்காகவே வேலை செய்-கிறதென்று அறிந்தோம். ஆனால் மலர்களோ, தம் குலத்-தின் அபிவிருத்திக்காகப் பாடுபடுகின்றன. அங்ஙனம் செய்-கையில், தமக்கு வரும் கேட்டையும் அவை பொருட்-

படுத்துவதில்லை. உதாரணமாக நெல், கம்பு, சோளம் முதலிய தாவரங்களிற் கதிர் முற்றியவுடன், அத் தாவரங்கள் அழிகின்றன. இதுவே முற்கூறியதற்குப் போதிய சான்றாகும்.

புஷ்பங்கள் தனிப் புஷ்பம், கோத்துப் புஷ்பம் என்ற இரு பிரிவுகளுள் அடங்கும். ஊமத்தை, பறங்கி, செம்பருத்தி, பூசணி, பூவரசு என்பன தனிப் பூவாகவும், அவரை, ஆமணக்கு, மொச்சை என்பன கொத்துமலர் அல்லது மஞ்சரியாகவும் உள்ளன.



மயிற்கொன்றை மலர்.

பொதுவாக மலர்கள் எத்தனை பாகங்களை உடையன என்றும், அவை வமிசவிர்த்திக்கு எவ்வாறு உதவுகின்றன என்றும் அறிவோம். ஒரு புஷ்பத்தில் சாதாரணமாக ஆறு பாகங்கள் உண்டு. அவை மலரின்காம்பு, பூவின் காம்பிலை, புறவிதழ், அகவிதழ், பூந்தாள்கள், கர்ப்பகோசம் என்பன ஆம். அவற்றில் காம்பும், புறவிதழும், அகவிதழும் எவை என்றும், அவற்றால் என்ன பிரயோஜனமென்றும் சொல்லுவீர்களா?

பூவரசு, பருத்தி முதலிய மலர்களில், புறவிதழுக்கு வெளிப்புறத்தில்,காம்பின் நுனியில் சிறிய இலைகள்போன்றவை காணப்படும். அவற்றைப் பூவின் * காம்பிலை என்பர். சிலமலர்களில் இந்தக் காம்பிலையின் தொழிலைப் புறவிதழ் செய்கிறது. முதிர்ந்த மலர்களில் புறவிதழ், அகவிதழ் என்பனவற்றை நீக்கிவிட்டுப் பார்த்தால், பல பூந்தாள்கள் காணப்படும். இவற்றைக் † கேசரக் குழாய்கள் என்றும் கூறுவர். இப்பூந்தாள்கள் ஒவ்வொன்றும் ஒரு கம்பிபோன்று அமைந்து நுனியில் பெட்டிபோன்ற ஒரு பையைத் தாங்கி நிற்கும். அந்தப் பையினுள்ளே மகரந்தப்பொடி இருக்கும். பெட்டியிலுள்ள மகரந்தத்தின் உதவியால், புஷ்பத்தில் விதை பிடிக்க இந்தத் தண்டுகள் சாதகமானவை. மகரந்தத்தைப் பூந்தாது என்றும் கூறுவர். உதி, பூசணி, தாழை, வாகைப் புஷ்பங்களில் மகரந்தம் அதிகமாக உண்டு என்பதை நேரிற் பார்த்து அறியுங்கள்.



பருத்திப் பூ.

ஒரு பூதக்கண்ணுடியை வைத்துப் பார்த்தால், இப்பொடியில் ஒவ்வொரு அணுவும் ஒரு கடுகுஅளவு காணப்படும். ஒவ்வொரு அணுவிலும் ஒரு ஜீவ பரம அணு அடங்கியிருக்கிறது. தாதுப்பொடியை நீரிற் போட்டால் அணுக்கள் நீரில் ஊறிக் கொஞ்சம் பருக்கும். கொஞ்சம்

---

* Bract † Stamens.

சர்க்கரை கலந்த நீரிற்போட்டால், இவ்வணுக்கள் பருத்து-விரியாமல், மெல்லிய கம்பிகளை வெளிவிட ஆரம்பிக்கும். இத்தாது அணுக்கள் புஷ்பத்தில் ஆண்பாகம் என்னப்படும். இவை மழை, பனி, காற்று என்பவற்றால் உண்டாகும் துன்பங்களினின்றும் தப்பியபின், கர்ப்பகோசத்தைப் போய் அடைதற்கே பூந்தாள்கள் ஏதுக்களாக உள்ளன.

மலரின் மத்திய ஸ்தானத்தில் இருப்பது கர்ப்பகோசம். இது மூன்று பிரிவுள்ளது. அடியிலுள்ள பாகத்துக்கு அண்டாசயம் என்றும். அதற்குமேல் நீண்ட பாகத்துக்குக் கீலம் என்றும், கீலத்தின்மேல் அகன்று அமைத்திருக்கும் பாகத்துக்குக் கீலாக்காரம் என்றும் பெயர். அண்டாசயத்-தின் உட்புறம் குழிந்து பைபோன்றிருக்கும். இதனுள் சினைகள் அல்லது கருப்பைகள் அடங்கி இருக்கின்றன. ஒவ்வொரு கருப்பையிலும் ஒரு ஜீவ அணு இருக்கும். இவைகள் அண்டாசயத்தின் உட்புறத்தில் வரிசையாயும், அதன் உட்சுவரில் பல பக்கங்களிற் பலவிதமாயும் அமைந்-திருக்கும். சில மலர்களில் அண்டாசயமானது கீலமின்றிக் கீலாக்காரத்தோடு சேர்ந்திருக்கும். கீலமும் கீலாக்காரமும் அமைப்பிற் பலவகைப்படும். ஆயினும், கீலம் கீலாக்காரம் என்றவற்றின் எண்ணிக்கை, அண்டாசயத்தின் எண்ணிக்-கையைச் சார்ந்திருக்கும். கீலம் குழாய் போன்றது. இது மேலேயுள்ள கீலாக்காரத்தையும் கீழேயுள்ள அண்டாசயத்-தையும் சேர்க்கிறது. கீலாக்காரம், கீலத்தைப் போன்றில்-லாமல், சற்று அதிகமாக அகன்று தட்டுப்போலிருக்கும். முதிரும் காலத்தில் இந்தக் கீலாக்காரம் பிசுபிசுப்புள்ளதா யிருக்கும்.

புஷ்பம் எப்படி விதை பிடிக்கிறதென்றும், விதை பிடித்தற்குரிய சாதனங்கள் எவை என்றும் ஆராய்வோம். விதை பிடித்தற்குரிய சாதனங்கள் பல உள. சில புஷ்பங்களின் காம்பிலே மிக அழகாயிருக்கின்றன. வாகை முதலிய அலர்களின் பூவிதழ்கள் கண்ணுக்குப் பகட்டாக இருக்கின்றன. மல்லிகை, ரோஜா போன்ற சில மலர்கள் நறுமணம் வாய்ந்துள்ளன. அகத்தி, பூசணி முதலிய புஷ்பங்களில் பூந்தாளின் அடியில் தேனிருக்கிறது.

இத்தகைய பல காரணங்களால், மதுகரங்கள் மலர்களை விரும்பி அவற்றினிடம் வருகின்றன. ஆகையால் அவற்றின் மூலமாக ஒருமலரிலுள்ள மகரந்தங்கள், வேறுமலர்களுக்குக் கொண்டுபோகப்பட்டுக் கருப்பிடிக்க ஏதுவாகின்றன.

இதுகாறும் விதையை உற்பத்தி பண்ணக்கூடிய பாகங்களையும், விதைபிடித்தற்குரிய சாதனங்களையும் அறிந்தோம். இனி விதை எப்படி உண்டாகிறதென்று அறிவோம். சிதறி வரும் பூந்தாதுகளை ஏற்றுக்கொள்ள, கீலாக்கரம் தன் மேற் பாகத்திலுள்ள பிசுபிசுப்புத் தன்மையால் கவர்ந்துகொண்டு கீழுள்ள கீலத்துக்கு அனுப்புகிறது. கீலம்குழாய் போன்ற தன்றோ? ஆதலால் பூந்தாதுகள், கீலாக்கரம் கீலம் என்பவற்றிற் பட்டவுடனே, நீள ஆரம்பித்துக் கீழேயுள்ள அண்டகோசத்தை நோக்கிக் கம்பியைப்போல் ஜீவப் பரம அணுவை முன்வைத்துச் செல்லுகிறது. இந்த ஜீவப் பரம அணு கருப்பையில் ஏற்கனவேயுள்ள அணுவோடு ஐக்கியப்படுகிறது. இவ்விதம் சேரும்போது கருத்தரிக்கிறது. கருத்தரித்த கொஞ்சகாலத்துக்குப்பிறகு விதை முற்ற ஆரம்பிக்கிறது. விதைமுற்றுவது அண்டாசயத்தின் பருமனால்விளங்கும்.

மலர்கள் தங்கள் மரபை எவ்வாறு விர்த்தி செய்கின்றன என்று இதுகாறும் அறிந்தோம். நமக்கு மலர்களால் சில உபயோகங்கள் உள்ளன. அழகுக்காகவும், வாசனைக்காகவும் சில வகை மலர்களை நாம் அணிந்து கொள்ளுகிறோம். மருந்தாகச் சில மலர்கள் பயன் படுகின்றன. சிலவகைப் புஷ்பங்களைக் கறிசமைத்து உண்கிறோம். மலர்களினின்று மதுகரங்கள் சேர்க்கும் தேனை, நாம் அபகரித்துக்கொண்டு, மருந்துகளுடனும், மற்ற தின்பண்டங்களோடு கலந்தும், தனித்தும் அருந்துகிறோம்.

---

23. கனி மரங்களை ஒட்டவைத்தல்.

நாமெல்லோரும் இன்சுவையுள்ள பழங்களை விரும்பித் தின்கிறோம். வாழை, மா, பலா, என்ற மூவகைப் பழங்களும் நம்முடைய நாட்டாரால் புகழப்படுகின்றன. கிச்சிலி, திராட்சை, கொய்யா, மாதுளை முதலிய அநேகவிதமான கனிவகைகளையும் ஆவலோடு நாம் உட்கொள்ளுகிறோம். இங்ஙனம் நாமுண்பது அக்கனிகளின் நற்சுவையைக் கருதியேயாயினும், அவற்றால் நமக்கு வேறு பல நன்மைகளும் உண்டாகின்றன. உதாரணமாகத் திராட்சைப் பழம் தாகத்தைப்போக்கி உற்சாகத்தைக்கொடுக்கிறது; வாழைப்பழம் பசிக்கு நல்ல உணவாவதோடு சில பிணிகளுக்கு மருந்துமாகிறது. கிச்சிலி இனத்தைச்சேர்ந்த கனிகள் தாகத்தையும் களைப்பையும்போக்கிச் சீரணசக்தியையும் உண்டாக்குகின்றன. பழங்களின் இரசங்களைக்கொண்டே பல ஔடதங்கள் செய்து பிணியாளர்க்குக் கொடுக்கப்படுகின்றன.

ஒவ்வொருவகைக் கனிக்கும் இயற்கையில்அமைந்துள்ள குணங்களை எடுத்துச்சொல்லக் காலமும் அறிவும் அதிகம் வேண்டும். பொதுவாக பழவகைகளை உட்கொள்ளுவதால் நமக்குத் தேகாரோக்கியம் உண்டாகிறதென்பதற்கு ஐய மில்லை. பழங்களை விரும்புவோர் நன்றாய்ப் பழுத்தகனிகளைத் தின்னவேண்டும். அவைகளே உருசியாயும் உடலுக்கு ஏற்றனவாயுமிருக்கும். நன்கு பழுக்காத கனிகளும், அழுகின பழங்களும் தேகத்துக்குக்கேட்டையே கூட்டுவிப்பன. நன்கு கனிந்தாலும் சில மரங்களின் கனிகள் நல்ல உருசியுடன் இருப்பதில்லை. உதாரணமாகச் சில மாமரங்களின் கனிகள், புளிப்பும், நாருமாயுள்ளன. சில மஞ்சள் மண முடையன. சில கொய்யாப் பழங்கள் விதை நிரம்பிச் சதைப்பற்றுள்ள பாகம் குறைந்திருக்கின்றன. சில ஆரஞ்சுப் பழங்கள் புளிப்பாக உள்ளன. இப்படிப்பட்ட பழங்களைத் தரும் மரங்களை உண்டாக்குவோர் நல்ல பழங்களையும், அதிக இலாபத்தையும் அடைதல் முடியாத காரியம். ஆயினும் எல்லா மரங்களும் நல்ல கனிகளைக் கொடுக்குமாறு செய்யத்தக்க வழி ஒன்று உண்டு. அதுதான் கனிமரங்களை ஒட்டவைக்கும் முறையாம். அதாவது ஒரே இனத்தைச் சேர்ந்த கீழ்த்தரமான மரத்தையும், அதே இனத்தின் நயமான இனத்தையும் ஒட்டவைத்தலாம்.

உதாரணமாக மாமரத்தை எங்ஙனம் ஒட்டவைத்து நல்ல கனிகளைப் பெறுகிறார்கள் என்று அறிவோம். சாதாரண மாங் கொட்டைகளை முறைப்படி முதலில் நாற்றுப்பாவி அவை முளைத்துக் கொஞ்ச காலம் சென்றவுடன், அக்கன்றுகளைப் பெயர்த்துத் தொட்டிகளில் வைத்து

1. பெரிய மாமரக் கிளையையும், சிறு கன்றையும் அரிந்த விதம்.
2. மரக்கிளையையும், கன்றையும் ஒட்டவைத்த விதம்.

இரண்டு, அல்லது மூன்றடி உயரம் வளரவிடுகிறார்கள். அவற்றைச் சுவையுள்ள பழந்தரும் வேறொரு பெரிய மரத்தோடு ஒட்டுகிறார்கள். இப் பெரியமரத்தின் ஒரு கிளையின் நுனிக்குக் கீழேயுள்ள வெளிப் பட்டையையும், வளர்ச்சிப் பட்டையையும் சீவி எடுத்துவிடுகிறார்கள். தொட்டியிலுள்ள கன்றின் தலைப்பக்கத்தை ஒரே வீச்சில் படத்தில் காண்பது போல் அரிந்து விடுகிறார்கள். இப்படி இவ்விரண்டையும் சீவியெடுத்த இடத்தை நன்றாய் இணைத்து அந்த இடத்தில் ஒட்டுமெழுகைப் பூசி மெல்லிய நூலாற் கட்டிவிடுகிறார்கள்.

மெழுகுக்குப் பிரதியாகச் சாணத்தையும், களிமண்ணையும் பிசைந்து அப்பிவிடுவதும் உண்டு. எதைப் பூசினாலும் ஒட்டப்பட்ட இடத்தில் காற்று உட்செல்லாமல் இருக்கவேண்டியது அவசியம். அன்றியும் பொருத்தப்பட்ட இரண்டு கிளைகளும் நெருங்கியும் இடம்விட்டு ஆடி அசையாமலும் இருக்கவேண்டும். ஒட்டப்பெற்ற இடத்துக்குமேல் வைக்கோல், கோணி, மெல்லிய வாழைமட்டை இவற்றில் ஏதேனும் ஒன்றைச் சுற்றி மறுபடியும் கட்டிவிடுகிறார்கள். இப்படிச் செய்வதால் ஏறக்குறைய ஒன்று அல்லது ஒன்றரை மாதத்திற் பெரிய மரத்தின் நல்லியல்கள் சிறுகன்றிற் சேர்ந்துவிடுகின்றன. அதன் பிறகு பெரிய மரத்தின் கிளையை அது ஒட்டிய இடத்திற்குக் கீழ்ப்பாகத்திற் பாதியை வெட்டி விடுகிறார்கள். அப்பாற் சில வாரங்கள் கழித்து மீதியையும் சேதித்து விடுகிறார்கள். இவ்வண்ணமே ஒரே சமயத்தில் ஒரு மரத்திற் பல கன்றுகளை ஒட்டவைப்பது வழக்கம்.

இவ்வொட்டுக் கன்றுகள் பெரியனவாகும்போது, அவை ஒட்டப்பட்ட பெரிய மரத்தின் கனிகளைப்போலவே சிறந்த பழங்களைக் கொடுக்கின்றன. மாமரங்களைப் போலவே மற்றெல்லா மரங்களையும் ஒட்டவைக்கலாம். ஒட்டு முறைகளும், விதங்களும் பலவகைப்படும்.

இந்த முறையானது மேனாடுகளில் வெகு காலத்துக்கு முன்னரே கண்டு பிடிக்கப்பட்டுப் பழக்கத்தில் வந்துவிட்டாலும், நமது நாட்டிற் சென்ற ஐம்பது ஆண்டுகளாகத்தான் கையாளப்படுகிறது. நமது சென்னை மாகாணத்திற் சேலம், சித்தூர், பங்களூர் என்ற இடங்களில் இம்முயற்சி விசேஷமாக நடைபெறுகிறது. இங்கிருந்து ஒட்டு மாக்-

கன்றுகள் எங்கும் வரவழைக்கப்பட்டு உண்டாக்கப்படு-
கின்றன. ஆயினும் பலர் இவ்வித ஒட்டு மாங்களின் உயர்-
வை நன்கு உணர்ந்துகொண் டிருப்பதாகத் தெரியவில்லை.

இங்ஙனம் ஒட்டுமரங்களை உண்டாக்குவதால் உருசி-
யற்றபழங்களைப் பயக்கும் கனிமரங்களையும் நற்சுவையுள்ள
பழமரங்களாக ஆக்கிவிடலாம் என்றுமட்டும் இதுவரை கூறி
னோம். இம் முறையாலேயே சிற்றுருவுள்ள பழந்தரும்
தருக்கள் பெரிய கனிகளைக் காய்க்குமாறு செய்துவிடலாம்.
நாருள்ள மாங்கனி காய்க்கும் மரங்களை மாப்போல் பழங்-
காய்க்கும் மரங்களாக மாற்றிவிடலாம். மஞ்சள் மணம்
நாறும் மாவை நறுமணமுள்ள பழந்தரும் நல்ல மரங்க-
ளாகச் செய்யலாம்.

ஒட்டு மரங்களை உண்டாக்குவதால் வேறு நன்மைக-
ளும் உண்டு. விதையால் இயற்கையாக உண்டாக்கப்பெ-
றும் மரங்கள் பலனை அளிக்கும் காலத்
துக்கு முன்னரே, ஒட்டு மரங்கள் காய்க்க
ஆரம்பிக்கின்றன. முதிர் பருவத்தாற் காய்
க்கும் சக்தியற்ற மரங்களுடன் இளங்கன்று
களை ஒட்டவைப்பதால் அவ்வயது சென்ற
தருக்களும் பலனளிக்கும் பலத்தை அடை
கின்றன. போதிய மாவுணவு நிலத்தி
னின்று பெறுமையாலோ, உரமிகுந்த விதைகளினின்று
உண்டாகாமையாலோ வளர்ச்சி மிகக் குன்றியுள்ள மரங்-
களை வேறு நல்ல மரங்களுடன் ஒட்டவைப்பதால், அவை
நல்லவைகளின் வலிமையைப் பெற்றுச் செழித்து வளர்-
கின்றன. சிறுபருவத்தில் தாவரங்களுக்குச் சில நோய்கள்
உண்டாவதுண்டு. ஒட்டுக் கன்றுகளுக்கு இவை பெரும்-

ஒட்டுமாங்கன்று

பாலும் வருவதில்லை. அப்படி வந்தாலும் பெரிய மரங்களின் வலிமையை ஒட்டுக் கன்றுகளும் பெற்றிருப்பதால், அவை எளிதில் அழிவதில்லை. விதைகளால் உண்டாக்க முடியாத சில தாவரங்களை ஒட்டவைத்து விரைவில் உண்டாக்கலாம். ஆயினும் வாழை, பனை, தென்னை முதலிய தாவரங்களை ஒட்டவைத்து உண்டாக்க முடியுமென்பது தெரியவில்லை.

இம்முறை எவ்வளவுக் கெவ்வளவு விரைவிற் பரவுகிறதோ; அவ்வளவுக் கவ்வளவு நாமும், நமது தேசத்தாரும் உருசியுள்ள கனிகளை அடைவதோடு, அதிக ஊதியத்தையும் பெறலாம். இங்ஙனமே புட்பச் செடிகளையும் ஒட்டவைக்கலாம். அப்படிச் செய்வதால், நன்மணமும், நன்னிறமும் பேருருவும் வாய்ந்த மலர்களை நாம் பெற்று மகிழலாம்.

---

24. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி.

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன், முதுகுடுமிப் பெருவழுதி என்பவன், மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டிய நாட்டைப் பரிபாலித்து வந்தான். வழுதி வேந்தரில் கீர்த்திபெற்றவரில் இவனும் ஒருவன். பல்யாகசாலை ஏற்படுத்தி வேள்விகளைச் செய்ததாற் 'பல்யாகசாலை என்னும் அடைமொழி பெற்றான்.

இமயவரைமுதல் கன்னியாகுமரிவரை இவன் கீர்த்தி பரவியிருந்ததன்றி மேலுலகத்திலும், கீழுலகத்திலும் விளங்கியிருந்தது என்று ஒரு புலவர் இவனைப் புகழ்ந்திருக்கின்றனர். சில அரசர்பால் திறைப்பொருள் பெற்றுப்

பல யாகங்களைச் செய்து, தேவர்களுக்கு அவிப்பாகம் கொடுத்திருப்பவன் ஆதலின், மண்ணுலகில் அன்றி, விண்ணுலகிலும் இவன் புகழ் விளங்கிற்றெனக் கூறப்பெற்றதுபோலும்.

போரில் முன்வைத்த காலைப் பின் வைத்தறியாத சுத்தவீரனாதலின் இவன், பெயரைக் கேட்டாலும், பகைவர் நடுங்குவர். ஆயினும் நீதிபுரிவதில் இவன் துலாக்கோலை ஒத்தவன். பகைவர் நாடுகளைத் தனதாக்கிக்கொள்ளவேண்டும் என்னும் பேராசை இவனுக்கில்லை. செங்கோல் முறை தவறிய வேந்தரே, இவனது வெங்கோபத்துக்குட்படுவர். அப் பகைவரையும் இவன் சட்டெனச் சென்று அழித்துவிடாமல், முதலில் அவர்பால் தூதர்கள் அனுப்பி, அறமொழிகளைக் கூறுவான். அதற் கிணங்காவிட்டால், பிறகே அவரோடு போர்தொடங்குவான். போர் நடுவில் சரணடைந்தாலும், அவர்களைக் காப்பாற்றுவான்.

ஒளித்திருந்து போர்செய்யும் வஞ்சகரை இவன் பஞ்சாகப் பறக்கடித்துவிடுவான். அவர் விளை நிலங்களில், தன் களிறுகளைச் செலுத்தி அவற்றை நாசமாக்கச்செய்வான். நீர்நிலைகளிற் கார்நிறக் கரிகளைப்போக்கிக் கூழாக்கிவிடுவான். கோட்டைகளைப் பாழாக்கி அங்குத் தன் தேர்களைச் செலுத்துவான். நகர்களைத் தகர்த்து வீதிகளைக் கழுதைகளால் உழச்செய்வான். இங்ஙனம் பலமுறை பகைவரை அழித்தும், அடக்கியும், வாகை புனைந்து அக்கால வழக்கின்படி பல கள வேள்விகளைச் செய்திருக்கின்றான்.

இகலரசரை வென்றாலும், அவர் பொருள்களை இவன் தனக்கு உரிமையாக்கிக் கொள்வதில்லை. அவற்றைக் கொணரச்செய்து, தன் புகழ்பாடும் பாணர்க்கும், கவி-

வாணர்க்கும் பரிசிலாகக் கொடுப்பான். காரிகிழார், நெட்டி மையார், நெடும் பல்லியத்தனுர் முதலிய புலவர்கள் இவனைப் பாடியிருக்கிருர்கள். தன் பெருமைகளைத் தானே எடுத்துச் சொல்லல் ஆகாதென்பதை நன்கு உணர்ந்தவன் ஆதலின், இவன் மறந்தும் தற்புகழ்ச்சி செய்து கொண்டதில்லை.

"நினது குடை, பரமசிவன் கோயிலை வலம்வரும் போது அன்றி வேறு இடங்களில் தாழாதிருக்கக்கடவது. 'ஈயும் தன்மை வாய்ந்த உன் கைகள் நீடுவாழ்க' என வாழ்த்தும் அந்தணர் முன்னன்றி வேறு வணங்காதிருக்கக்கடவன. நீ அணிந்த பூமாலை பகையரசர் நகரங்களை எரிக்கும்போது, புகையால் வாடுதலை அன்றி வேறுவிதத்தில் புலராதிருக்கக் கடவது" என்று ஓர் ஆன்ருேர் இவனைப் பாடியிருக்கின்றனர்.

இவன் சிவபெருமானை வழிபடும் கொள்கை யுடையவன். முத்தமிழையும் மெத்தவும் இவன் வளர்த்தவன் என்பது நாம் கூருமலே விளங்கும்.

செய்யுட்பாடங்கள்.

1. கடவுள் வாழ்த்து.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே. (1)

—மாணிக்கவாசகர்.

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்,
நிலவு லாவிய நீர்மலி வேணியன்,
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்—சேக்கிழார். (2)

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே—கம்பர். (3)

---

2. ஆரணிய காண்டம்.

விடங்கொள் வேற்கைவி ராதனை வீட்டிப்போய்த்
தடங்கொள் வீடு சரபங்க னுக்களித்
தடங்கு ஆவம்அ கத்தியன் தந்தபின்,
இடங்கொள் பஞ்ச வடியிற் சென் றெய்தினான். (1)

மங்கை சூர்ப்ப நகைப்பெயர் மாதராள்,
துங்க னற்குழை மூக்கிவை தோற்றபின்,
அங்கை யாற்றன் வயிறலைத் (து) ஆ ! எனக்
கங்குல் வாழ்க்கைக் கரனுக் குரைசெய்தாள். (2)

கரனும் தூடண னும்கலி னப்பரித்
திரிசி ராவும் சினப்படைக் கூட்டமும்
வரதன் இராமன்கை மாண்டதெல் லாம்கடி
துரைசெய் தாள்சென்றி ராவணற் கோடியே. (3)

சீதை மற்றவன் தேவியைக் கொண்டியான்
போதல் உற்றனன் புகுந்ததி தென்றலும்,
காத லுற்றனன் காண்குறும் ஆசையால்,
மாது லற்கொரு மாற்றஞ்சென் றோதினன். (4)

மறுத்து ணர்த்தினன் மாமன்மா ரீசனும்
வெறுத் தூரப்பினன் வெஞ்சொல் இராவணன்
பொறுத்தி நீயெனப் பொன்இள நவ்வியாய்
நிறுத்த சீதை நிலையிற்சென் றெய்தினன். (5)

கண்டு சீதை கவர்ந்தது தாவென,
அண்டர் கோனும் அதன்பின்னர் ஏகினன்,
கொண்ட மாயை அறிந்து கொலைசெய்தான்;
ஒண்டொடீஇ! இளை யோய்! என் றுரைத்ததே. (6)

அன்னம் அன்னவள் அவ்வுரை கேட்டலும்,
தன்ன நாயகன் தம்பியை ஏவினள்,
பன்ன சாலையிற் பார்ப்பன வேடமாய்
இன்னல் செய்ய இராவணன் எய்தினன். (7)

மான மீது மடந்தையைக் கொண்டனன்
போன போது புகுந்த சடாயுவை
ஈன மாக்கித்தான் ஏறிய தேர்விடா
மீன வேலை இலங்கையை மேவினன். (8)

மன்னன் ராகவன் தம்பியை வந்தவா
றென்னை என்ன இயன்ற துரைசெய்தான்
பன்னும் வீரரும் பாவியை நாடிப்போய்
முன்னம் வீழ்ந்த சடாயுவை முன்னினர். (9)

வேறு.

இறந்தளரு வைக்கரசை ஈமஎரி மூட்டி
முறஞ்செவி யயோமுகியை மூக்கினை யரிந்து
மறந்தரு கவந்தனையும் வானினிடை வைத்திட்
டறந்திகழ் தரும்சவரி யாச்சிரமம் உற்றார். (10)

---

3. தனிப் பாடல்கள்.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம். (1)

கார்என்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது
நீர்என்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்
வார்ஒன்று கூந்தலார் ஆச்சியர்கை வந்ததற்பின்
மோர் என்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே. (2)
—ஔவையார்.

கண்ணுதலான் கைலையையும் கார்வண்ணன் பாற்கடலும்
எண்ணும் பிரமன் எழின்மலரும்—நண்ணியதென்?
வஞ்சகமூட் டுப்பூச்சி வன்கொடுமைக் காற்றதே
அஞ்சியவர் சென்றார் அறி.—ம. கோபாலகிருஷ்ணையர். (3)

தேங்காய்க்கும், நாய்க்கும் சிலேடை.

ஓடும் இருக்குமதன் உள்வாய் வெளுத்திருக்கும்
நாடும் குலைதனக்கு நாணாது—சேடியே!
தீங்காய தில்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயும் நாயும் தெரி. (4)

பாம்புக்கும், வாழைப்பழத்துக்கும் சிலேடை.

நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாதே—விஞ்சுமலர்த்
தேம்பாயும் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம். (5)

—காளமேகப் புலவர்.

---

4. இனியது நாற்பது.

பிச்சைபுக் காயினும் கற்றல் மிக இனிதே
நற்சபையில் கைகொடுத்தல் சாலவும் முன்னினிதே
முத்தேர் முறுவலாய்! சொல்லினி தாங்கினிதே
தெற்றளவும் மேலாயார்ச் சேர்வு. (1)

கொல்லாமை முன்னினிது, கோல்கோடி மாராயன்
செய்யாமை முன்னினிது செங்கோலன் ஆகுதல்
எய்தும் திறத்தால் இனிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு. (2)

குழவி தளர்நடை காண்டல் இனிதே
அவர்மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே
வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்து
மனன் அஞ்சான் ஆகல் இனிதே. (3)

கற்றார்முன் கல்வி யுரைத்தல் மிக இனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே
எட்டுணை யானும் இரவாது தானீதல்
எத்துணையும் ஆற்ற இனிது. (4)

வருவாய் அறிந்து வழங்கல் இனிதே
ஒருவர்பங் காகாத ஊக்கம் இனிதே
பெருவகைத் தானும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்தல் இனிது. (5)

எல்லியம் போது வழங்காமை முன்னினிதே
சொல்லுங்காற் சோர்வின்றிச் சொல்லுதல் மாண்பினிதே
உற்றபே ராசை கருதி அறனொரூஉம்
ஒற்கம்இல் லாமை இனிது. (6)

—பூதஞ்சேந்தனார்.

---

5. இன்னா நாற்பது.

முக்கண் பகவன் அடிதொழாற் கின்னா
பொற்பான ஊர்தியை உள்ளா தொழுகின்னா
சக்கரத் தானை மறப்பின்னா தாங்கின்னா
சத்தியான் தாள்தொழா தார்க்கு. (1)

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா
நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா
கடுமொழி யாளர் தொடர்பின்னா இன்னா
பெருவலியார்க் கின்னா செயல். (2)

பொருள் உணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா
இருள்கூர் சிறுநெறி தாம்தனிப் போக்கின்னா
அருள்இல்லார் தம்கண் செலவின்னா இன்னா
பொருள்இல்லார் வண்மை புரிவு. (3)

பெரியாரோ டியாத்த தொடர்விடுதல் இன்னா
அரியவை செய்தும் எனவுரைத்தல் இன்னா
பரியார்க்குத் தாம்உற்ற கூற்றின்னா, இன்னா
பெரியார்க்குத் தீய செயல். (4)

நெடுமரம் நீள்கோட்டு உயர்பாய்தல் இன்னா
கடுஞ்சின வேழத் தெதிர்சேறல் இன்னா
ஒடுங்கி அரவுறையும் இல்இன்னா, இன்னா
கடும்புலி வாழும் அதர். (5)

பண் அமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா
எண் அறியா மாந்தர் ஒழுக்குநாள் கூற்றின்னா
மண்இல் முழவின் ஒலியின்னா ஆங்கின்னா
தண்மை இலாளர் தொடர்பு. (6)

—கபிலர்.

சிங்கத்தை முயல் கொன்ற கதை.

குறுமுயல் சிங்கம் தன்னைக் கொன்றதொன் றுண்டே தென்னில்
செறியும்ஓர் காட்டிலே, ஓர் சிங்கம்உண் டந்தக் காட்டில்,
உறுவிலங் கனைத்தும் வேட்டை ஆடிஊண் மிகவும் தின்று,
வெறிகொடு திரியும் நாளில் விலங்கெலாம் ஒருங்கு கூடி. (1)

ஆண்இளம் சிங்க மே! உன் அடவியில் விலங்கை எல்லாம்
வீணிலே கொல்ல வேண்டாம்; விதத்தினில் தினம்ஒன் றாக
ஊன்உனக் களிப்போம் என்ன, உண்மையாய்க் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்டொவ் வொன்றாய் அருந்தி அங்கிருக்கும் நாளில். (2)

தனிமுயல் ஒன்றுக் கோர்நாள் தன் முறை வருதல் ஓடும்
இனிஅது விடாது நம்மை எனினும் ஓர் எடுப்பெடுத்து
வினையைஇப் போது செய்து வென்றுநாம் உய்ந்தோம் ஆகில்,
நனிவிலங் கனைத்தும் உய்யும், நமக்கும்நற் புகழ்உண் டென்றே (3)

கருதிஅச் சிங்கத் தின்தன் கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி மன்னன்நம் பசிவே ளைக்குப்
பெருமத வேழம் ஏனும் பிந்துவ(து) இல்லை பிந்தி
வருவ(து) என் உரைநீ என்று, மனம்தனில் சினந்து கூற. (4)

ஐய! நின் பசித்தவேளைக் கடியனேன் வந்தேன் ஆங்கோர்
வெய்ய சிங் கத்தைக் கண்டு வெருவி அங்(கு) ஒளித்(து)இருந்தேன்.
பைய வே சிங்கம் ஆங்கோர் பருமுழை புகுந்த பின்னர்,
துய்யஉன் பக்கல் வந்தேன். சுவாமி! என்றிறைஞ்சி நிற்க. (5)

சிங்கம் நாம் அல்லால் வே(று) ஓர் சிங்கம் நீ கண்டாய் ஆகில்,
அங்கு அதைக் காட்டுவா என்(று) அழைத்தலும் அழைத்துப் போய்
பங்கமும் புனலும் சேர்ந்த பாழ்ந்துர வதனைக் காட்ட, [ஓர்
அங்(கு) அதை எட்டிப்பார்த்(து) அதன் நிழல் உருவம்தோன்ற.(6)

தன்உரு நிழலைத் தானே சத்துரு என்று பாய்ந்து
துன்னுபங் கத்த முந்தித் துளங்கியே உயிர் இழந்த(து)
என்னலால்; உபாயத் தாலே யாவையும் வெல்ல லாம்என்
றின்னம் ஓர் நண்டு கொக்கை ஈர்ந்ததோர் கதையும் சொல்லும். (7)

7. பூனைக் கிடம் கொடுத்துக் கழுகு இறந்தது.

திரைகெழு கங்கா தீரத் திரிகூட மலைப்பால் இத்திப்
பெருமரப் பொந்தில் கண்ணும் பைத்தகூர் நகமும் இல்லா
ஒருகிழக் கழுகு மற்றைப் பறவைகள் உணவு நல்க
மருவுநாள் பார்ப்பைஉண்பான் மார்ச்சாலம்வந்ததாங்கே. (1)

அதைச்சிறு பார்ப்பெ லாம்கண் டஞ்சியே இரைதல் கேட்டுப்
பதைப்புறு கழுகு நீர் ஏன் பயமுறுகின்றீர் என்ன
இதற்குள்ளே பூனை உய்வ தெண்ணிஅக் கழுகின் பாற்போய்
விதிர்ப்பொடு வணங்க நீயார் விளம்பெனப் பூனை கூறும். (2)

எனதுபெயர் நெடுஞ்செவியன் எனக்கடிது நீயிவண்விட்
டுனதிடத்திற் கோடிலையேல் சாவாய்என் றுரைத்திடலும்,
நினதிடத்தில் வருமென்றன் வரலாற்றை நீகேட்டுச்
சினவுகினும் நன்றென்னச் செப்புமால் அப்பூனை. (3)

பேதமாம் சாதியினால் பிராணிகளைக் கொல்லுவதும்
நீதியால் உபசாரம் நிகழ்த்துவதும் நன்றன்றால்:
ஆதலால் அவனவன்றன் ஆசாரம் தனைக்கண்டே
யாதுசெயத் தக்கதோ அதுசெய்தல் இயல்பென்ன. (4)

ஆக்கமிகு கழுகரசன் அதைக்கேட்டப் பூனையினை
நோக்கியா னல்நீயிங் குற்றபடி நுவலென்னத்
தேக்குபுனல் கங்கைநதி தீரத்தில் தினந்தோறும்
ஆக்கைஅமிழ்ந் திடமூழ்கிச் சாந்திரா யணம்ஆற்றி. (5)

தங்குற்றேன் நீமிகவும் தருமவான் எனக்கேட்டே
இங்குற்றேன் ஏனென்னில் வயதுமுதிர் இயற்புலவர்
எங்குற்றார் எனவினவி எய்தியறம் கேட்டிடுதல்
பொங்குற்ற மரபென்று புகலுவர்எந் நூலோரும். (6)

அறம்விடுத்திட் டெனைக்கொல்ல அகந்துணியாய் இல்லறத்தின்
திறம் அடுத்தோர் நடைநின்போல் கண்டதில்லை தெவ்வருந்தம்
புறம்அடுத்து வந்தவர்க்குப் புரிந்திடுவர் உபகாரம்
மறம்அடுத்து வெட்டுகின்ற வருக்கும்நிழல் செயுமரமே. (7)

அதிதிஎவன் பால்எய்த முகம்வாடு மோஅவன்தன்
மதிதருபுண் ணியம்கொண்டு பாவத்தை அவற்கீவான்
மதிகொடிய சண்டாளன் மனைக்கண்ணும் கதிர்எரிப்பான்
புதியர்எவர் வந்திடினும் பூசிப்பார் பெரியோரே. (8)

என்றிசைப்பக் கழுகதைக்கேட் டியம்பும்இறைச் சிகள் அருந்திக்
கொன்றுழல்வ துமதுகுலக் குணமெனமுன் குறித்ததென
நின்றவன்மற் றதைக்கேட்ட நெடுஞ்செவியன் தரைதொட்டு,
நன்றுசிவ சிவவென்று நற்கரத்தாற் செவிபொத்தி, (9)

தருமநூல் பலதெரிந்து சார்ந்துவை ராக்கியம்தீக்
கருமமெல்லாம் நீக்கினென்யான் கொடுங்கொலையே பாத
பெரிதாகும் அதுபுரியின் நரகடைவர் பெருங்கானில் [கத்தில்
மருவுபலா திகள்உண்பார் மருவுவரோ பாவமென. (10)

கடுங்கழுகு தெளியுமா றிவ்வாறு கட்டுரைத்து
நெடுஞ்செவியன் எனும்பூனை நிலைத்ததன்வீ டுற்றதன்பின்
மடம்படுபார்ப் பினைஉண்டு வைகுதலும் பறவையெலாம்
ஒடுங்குபறழ் காணுமல் தேடலறிந் தோடியதே. (11)

புள்ளுகள் அக் கழுகிருக்கும் பொந்தடைந்து பார்த்திடலும்,
வெள்ளெலும்பும் சிறகுகளும் விழுந்துறக்கண் டிதுகொன்ற
தெள்ளலில்நம் பார்ப்பை எனக் கொன்றதால் இதை அதனல்
உள்ளகுணம் தெரியாமல் இடங்கொடார் ஒருவருக்கும். (12)

---

8. நன்னெறி.

என்று முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவு நயந்து. (1)

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொல் பிறிதென்க—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதால் ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு. (2)

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. (3)

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலு
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம். (4)

காதன்மனையாளும் காதலனு மாறின்றித்
தீதில் ஒருகருமஞ் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கல்தான்
கண்ணிரண்டும் ஒன்றையே காண். (5)

கடலே யனையம்யாங் கல்வியால் என்னு
மடலே றனைய செருக் காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். (6)

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. (7)

மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவிற்—பலியேல்
கடவுள் அவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
யடர்சிறைய புள்ளரசைப் பார்த்து. (8)

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்கும்மேல் நின்று. (9)

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்
இரைக்கும்வண் டூதுமலர் ஈர்ங்கோதாய்! மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு. (10)

இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல்மற்
றெல்லாம் இருந்துமவற் கென்செய்யும்—நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு. (11)

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ—பைந்தொடீஇ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி. (12)

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல். (13)

நல்லோர் வரவால் நகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவால் அழுங்குவார்—வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர. (14)

பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (15)

ஆக்கும் அறிவான் அலது பிறப்பினல்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றும்
கவரார் கடலின் கடு. (16)

உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்—மடவரால்!
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு. (17)

கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வர்—அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதா மென்று. (18)

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினும் ஆகுங் கதலிதான் எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை. (19)

கொள்ளுங் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு. (20)

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்!
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது. (21)

பன்னும் பனுவற் பயன்றேர் அறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே—நன்னுதால்!
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயில் தான். (22)

எள்ளா திருப்ப இழிஞர்போற் றற்குறியர்
விள்ளா அறிஞரது வேண்டாரே—தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுளம் அன்றிக்
கரைகாப் புளதோ கடல். (23)

அறிவுடையார் அன்றி யதுபெறார் தம்பாற்
செறிபழியை அஞ்சார் சிறிதும்—பிறைநுதால்!
வண்ணஞ்செய் வாள்விழியே அன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு. (24)

கற்ற வறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர் தாம் என்றும் மதியாரே—வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய்! வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். (25)

தக்கார்க்கே யீவர் தகர்க்களிப்போர் இல்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய். (26)

நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை யாகாதே—நல்லாய்! கேள்
காய்முற்றில் தின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னாகிப் போம். (27)

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தா மற்றொவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே! அது புனையாக்
காணுங்கண் ஒக்குமோ காண். (28)

175874

RFR 1114

பசுமலைக் கலாசாலையின் தமிழ்ப் பண்டிதர்,

நே. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்கள் எழுதிய

செந்தமிழ் வாசகப் புத்தகங்கள்.

செந்தமிழ் வாசகப் புத்தகம். (ஆறாம் வகுப்பு) அணா 7.

திருவன், காங்கரு, செல்வப்பிள்ளையின் சீரழிவு, தேயிலை, பரிகசிக்கும் பறவை, வைகுசி, சாவித்திரி, பக்தர்கள் சரித்திரம், அரங்கநாத சாஸ்திரி பீற்றரும் விகடனும், பொற்கைப்பாண்டியன், ஜீரணம், விசுவநாதநாயக்கர், மஹாவீரர், ஔவையார் இந்தியதேச அரசாட்சி, இராசராசசோழன், வினைச்சொல், இலை சந்திரகுப்தனது மதிநுட்பம், உரங்கள், சீதாகல்யாணம் முதலிய வசன பாடங்களும் செய்யுட்கதைகள், நீதிகற்பிக்கும் பாடல்கள் சேர்ந்த செய்யுட் பாடங்களும் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன.

செந்தமிழ் வாசகப் புத்தகம் (ஏழாம் வகுப்பு) அணா 8.

அரிச்சந்திரன், தாஜ்மஹால் பக்தர், அரங்கநாத முதலியார், எரிமலைகள், அந்தை, ஆகுபெயர் மூத்த அன்னப்பன் பொன்னப்பா ஆனது, இந்தியராஜாங்ககாரியதரிசி, கரிகாற்சோழன் இராபர் வலமடைதல், விஷபேதி, புஷ்பம் கனிமரங்களை யொட்ட வைத்தல், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி முதலிய பல வசன பாடங்களும், செய்யுள் தழுவிய பல கதைப் பாடங்களும், தனிச் செய்யுள்களும், நீதிச் செய்யுட் பாடங்களும் இவ்வாசகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

செந்தமிழ் வாசகப் புத்தகம். (எட்டாம் வகுப்பு) அணா 8.

பாண்டியதேச நாயக்க மன்னர் வரலாறு—பாண்டிய தேசாதிபதிகளாகிய விசுவநாத நாயக்கர் திருமலை நாயக்கர், மங்கம்மாள் முதலிய நாயக்க மன்னர் வரலாறு முழுதையும் எடுத்துரைப்பது. பலமன்னரின் உருவப்படங்களுடன் கூடியது. சரித்திரவல்லுநராலும் பத்திரிகைகளாலும் மிகவும் கொண்டாடப்பட்டது விலை அணா 6.

இ. மா. கோபால கிருஷ்ணக்கோன்,

புஸ்தக வியாபாரம்,

வடக்குச்சித்திரைவீதி, மதுரை.